வாழ்க்கைச் சுழல்

ஆசிரியர்

ஏ. ஷண்முகம் பி. ஏ.

புதுமலர் நிலையம்

கோயமுத்தூர்

இரண்டாம் பதிப்பு ஜுன் 1949

புதுமலர் பிரஸ்
கோயமுத்தூர்.

விலை ரூபாய் 1-12-0.

முகவுரை

தமிழ் நாட்டின் கிராமக் காட்சிகளையும் வாழ்க்கையையும் கலை அழகுடன் சித்திரிக்கும் இந்நாவலைப் படித்து இன்பமடைந்தேன். பழங்கதைகளின் சுவை ததும்ப, எளிய இனிய நடையில் மனதைக் கவரும் வண்ணம் ஏ. ஷண்முகம் அவர்கள் எழுதி இருக்கின்றார்.

பண்டைத் தமிழ் இலக்கியத்தில் வேதாந்தத் தத்துவமும் கவித்துவமும் நிறம்பியிருக்கின்றது. ஆனால், இந்த சிறந்த செல்வத்தை மக்கள் அனுபவிப்பது கடினமாயிருக்கின்றது. ஏனென்றால் இவற்றை விளக்கிய பண்டைய ஆசிரியர்கள் கடினமான இலக்கண நடையைக் கையாண்டு வந்திருக்கிறார்கள். தமிழ் உலகத்திற்கு நல்ல காலம் பிறந்து விட்டது. தமிழ் இலக்கியச் செல்வத்தை சாமான்ய மக்கள் அனுபவிக்கக்கூடிய விதத்தில் எளிய வசன நடையில் எடுத்துக் காட்டும் சக்தி வாய்ந்த பல எழுத்தாளர்களும் பிரசங்கிகளும் இப்போது தோன்றியிருக்கின்றனர். மக்களின் அன்றாட வாழ்வை இயற்கைக் காட்சிகளுடன் படம்பிடித்து அப்படத்தில் தற்கால உலகின் நவீன தத்துவங்களையும் சேர்த்து சித்திரித்துக் காட்டும் சக்தி இவர்களுக்கு இருப்பது மிகவும் பாராட்டத்தக்க விஷயம்.

சமீபத்தில் ஷண்முகம் அவர்கள் லண்டன் பிரயாணம் செய்த போது, அவருடைய இலக்கிய ஆர்வம் பூர்த்தியடைந்ததாகத் தெரிகின்றது. இந்த உணர்ச்சி மேலும் மேலும் வளர வேண்டுமென்று அவருக்கு என் மனமார்ந்த ஆசி கூறுகின்றேன்.

"பக்தி விலாஸ்"
திருவாங்கூர்
30-12-46

ஸர். சி. பி. ராமஸ்வாமி அய்யர்

மதிப்புரை

தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி என்ற மலர்ச்செடியில் புஷ்பித்த இரு புஷ்பங்களுள் சிறு கதை ஒன்று. மற்றொன்று, நாவல் எனப்படும் நவீனம். இவை இரண்டுமே மேல் நாட்டு இலக்கிய வழியில் தோன்றியவை யாயினும் தற்காலத்துத் தமிழ் இலக்கியத்துடன் இரண்டறக் கலந்துவிட்டன. இவற்றுள், 'சிறு கதை' என்ற தமிழ் இலக்கிய வடிவம் இக்குறுகிய காலத்துக்குள் அடைந்திருக்கும் வளர்ச்சி, இலக்கியத்தின் சரித்திரத்திலேயே உவமையில்லாத ஒரு நிகழ்ச்சியாகும். பெரும்பாலும் பத்திரிகைகளில் வெளி வருதலாலும், விரைவில் படித்து முடித்து விடக் கூடியவையா யிருப்பதாலும், சிறு கதைகள் வாசகர்களின் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்து விட்டன. இளந் தமிழ் எழுத்தாளர்களில் பெரும்பான்மையினர், இத்துறையிலேயே மிகவும் உழைத்து எண்ணற்ற அழகிய சிறு கதைகளை எழுதி, தமிழ்த் தாய்க்குத் தொண்டு புரிந்து வருகின்றனர்.

'நாவல்' என்ற இலக்கியத்தைக் குறித்து இவ்வாறு கூறுவதற்கில்லை. தமிழில் நூற்றுக் கணக்கான நாவல்கள் இன்றுவரை வெளி வந்திருப்பினும், அவற்றில் பெரும்பான்மையானவற்றைத் 'தமிழ் இலக்கியம்' என்ற வகுப்பிலேயே சேர்க்கமுடியாது. அவற்றுள் பல, ஆங்கிலம் முதலிய மேனாட்டு மொழிகளிலுள்ள நாவல்களின் மொழி பெயர்ப்புகளாகவும், எஞ்சியவை வங்காளி, ஹிந்தி மராட்டி முதலிய இந்திய பாஷைகளிலுள்ள நவீனங்களைத் தழுவி எழுதப்பட்ட கதைகளாகவுமே இருக்கின்றன. தமிழ் நாட்டவரின் வாழ்க்கையை அடிப்படை

யாகக் கொண்டு. தமிழ் எழுத்தாளர்கள் தமிழிலேயே நினைத்து எழுதிய நவினங்கள் வெகு சிலவே யாகும். சுமார், 50 வருஷங்களுக்கு முன், பால்ய மேதாவியான ஸ்ரீ ராஜம் அய்யரவர்களால் எழுதப்பட்ட "கமலாம் பாள் சரித்திரம்" என்ற நாவலுக்கு இணையான தமிழ் உரை நடை நூல்கள் அதிகம் வெளிவர வேண்டும்.

இதற்குக் காரணங்கள் இரண்டு. முதலாவதாக, நாவலுக்கு இயற்கையாக நிகழும் அழகிய சம்பவங்கள் நிறைந்த நீண்ட கதை ஒன்று மிகவும் அவசியம். இரண் டாவதாக, புத்தகம் அலுப்புத் தட்டாத,இனிய நடை யில் எழுதப்படவேண்டும். இவை இரண்டும் அமையாத ஒரு நாவல், எந்த நாட்டின் இலக்கியத்திலும் ஓர் உயரிய இடம் பெறுவது துர்லபம்.

இத்தகைய கடினமான இலக்கியத்துறையில், எனது நண்பர்,திரு. ஷண்முகம் அவர்கள் அடைந்துள்ள வெற்றி யைக் குறித்து நான் மிகவும் சந்தோஷப் படுகிறேன். அவர் சிருஷ்டித்த "வாழ்க்கைச் சுழல்" என்ற இந் நவி னம், தமிழ் நாட்டுக் கிராமங்களுள் ஒன்றில் 'உழுதுண்டு வாழ்ந்து வந்த' ஒருவரின் சரித்திரத்தை அடிப்படை யாகக் கொண்ட ஒரு கதை. தமிழ் மொழி இவ்விருபதாம் நூற்றாண்டில் எவ்வளவு எளிமையும் வண்மையும் ஒருங்கே பெற்று விளங்குகிறது என்பதற்கு இவ்வாசிரி யரின் நடையை ஓர் உதாரணமாகக் கூறலாம். மாசற்ற கிராம வாழ்க்கையைச் சித்திரித்தாலும், கதாபாத்திரங் களின் உள்ளக் கிளர்ச்சியை வருணித்தாலும், கதா நாயகனின் மேற்நாட்டு விஜயத்தை விவரித்தாலும், இன் னும் சங்கீதம், சமூகம் முதலிய விஷயங்களைக் குறித்துத் தன்னுடைய அபிப்பிராயங்களை வெளியிட்டாலும், ஸ்ரீ ஷண்முகம் அவர்களின் நடையில் ஒரே தெளிவையும்

இனிமையையும் காண்கிறோம். கதா நாயகனும், நாயகி யும் ஒருவருக்கொருவர் ஆங்கிலமும் சங்கீதமும் கற் பிக்குமிடத்தில் ஆசிரியர், "கலைக்காட்டிலே இருவரும் அழகிய மலர்களைக் கொய்து விதவித மணங்களை அனுப வித்துக் கொண்டிருந்தனர்" என்று எழுதியிருப்பதை உரை நடைக் கவிதை என்றே சொல்ல வேண்டும்.

, இத்தகைய அழகிய, தெள்ளத் தெளிந்த தமிழ் வாக் கியங்கள் இந்நூலில் பல இடங்களில் மிளிர்கின்றன.

தமிழ் விருந்தாகிய இந் நாவலைத் தமிழர்கள் அனை வரும் படித்து இன்புறுவார்களென்று திடமாக நம்புகிறேன்.

மாயூர். சர். ஆர். எஸ். ஸர்மா

அறச் செல்வர்கள்.

ஒரு நாட்டின் வளத்தை அறிய அந்நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையை ஆராய்தல் போதுமானது. அவர்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து பேரேனும் போதுமான உணவுடனும், உடையுடனும், காற்றும் ஒளியும் நிறைந்த வீடுகளில் வாழ்ந்தால் வளமாக மக்கள் வாழ்கின்றார்களென்றும், நூற்றுக்கு இருபத்தைந்து பேர் எல்லையற்ற இன்ப வாழ்வை நுகர மிகுதி எழுபத்தைந்து பேர் வறுமையில் வாட நேரின் அது அந்நாட்டின் கீழ் நிலையைக் குறிக்கிறதென்றும் பொருளியல் அறிஞர்கள் தெரிவிக்கிறார்கள். இதை மனதில் கொண்டு நம் நாட்டின் இன்றைய நிலையை நோக்குமிடத்து பஞ்சத்துக்கும், வறுமைக்கும், பிணிக்கும் நம் நாடு உலகத்திலேயே முதன்மை இடம் வகிக்கிறதென்று தான் கொள்ள வேண்டும்.

கோயமுத்தூர் மாவட்டத்தில் இரங்கப்பம்பாளையம் என்னும் ஒரு சிற்றூர் உண்டு. இவ்வூர் மக்கள் குற்றமற்ற பழக்க வழக்கங்களிலும், ஒழுங்கற்ற புதிய நாகரிகங்களிலும் ஈடுபடாதவர்கள். நீர்வளம், நிலவளம் ததும்பி யிருந்ததின் காரணமாக இவ்வூர் மக்களில் பெரும்பான்மையோர் 'உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை' என்ற உறுதி மொழிப்படி, உழவுத் தொழிலில் ஈடுபட்டனர். அவர்கள் இறை அன்பு சிறந்தவர்கள். அறம் செய்வதில் தலை சிறந்தவர்கள். நயவஞ்சகப் பழக்க வழக்கங்களில் நம்பிக்கை யில்லாதவர்கள். 'தம்மைப் போல் பிறரையும் நினை' என்ற அருள் வாக்குக்கு அடிமைப் பட்டவர்கள்.

இவ்வூரில், தருமசாமிக் கவுண்டர் என்ற வேளாளப் பெருந்தகையார், ஏராளமான நன்செய் நிலங்களுக்கு உடமையாளராய்த் தம் இல்லக்கிழத்தியாளீ திலகக் காள் என்றவளுடன் சீரிய செல்வத்துடன் தம் இல்லறத்தை நல்லறமாக நடத்திவந்தார். திருமணம் நடந்து நீண்ட காலமாகியும் தங்கட்கு மக்கட் பேறில்லையே யென்று இருவரும் எப்பொழுதும் கவலையில் ஆழ்ந்திருந் தனர். அறைவயிற்றுக் கஞ்சிக்கு அல்லற்படும் மக்கள் ஏராளமான குழந்தைகளுடன் அங்கலாய்த்துக் கொண் டிருக்க, ஆயிரம் வேலி நிலம் படைத்த தருமசாமிக் கவுண்டருக்கு மக்கட் பேறு இல்லாதது விதியின் செயல் என்று தான் சொல்ல வேண்டும் பேரலும்!

கவுண்டர் அவர்கள் பேருக்கேற்ற குணம் படைத்த வர். கைமாறு கருதாமல் அறத்தினை அண்டினோர்க்குச் செய்யும் வள்ளல். பிறர் நன்மதிப்பையும் நாகரிகப் பட்டங்களையும், பதவிகளையும் அறப்பணி புரிவதால் அடைய ஆசைப்படாதவர். அவருக்கு வாய்த்த மனைவி யும் அவரை ஒத்த பண்புடையவர்களே.

இத்தகையோருக்குக் குழந்தைப் பேறில்லையே யென்று அவ்வூரில் வாழ்ந்தோர் அவர்களைவிட மிகக் கவலை யுற்றிருந்தனர். காசிக்குப் போனால் கர்மவினை தீரும் என்றார் சிலர்; இராமேசுவரத்தின் எல்லையில் அடி வைத்தால் குழந்தைப் பேறு கிட்டுவதில் ஐயமில்லை என்றார் பலர். முழு முதற் கடவுள் ஒருவர் மேல் முழு நம்பிக்கையுடன் வாழ்ந்த இவ்வில்லறத்தோருக்குக் காவிரி, கங்கை சென்று தம் கர்மத்தைத் தீர்த்து, தாம் வேண்டும் பயனை அடைவதில் நம்பிக்கை ஏற்படவில்லை. 'நானிருக்க பயமேன்' என்று எப்பொழுதும் தன்

அன்பர்களுக்கு எச்சரித்துக் கொண்டிருக்கும் இறைவன் மேல் எல்லாப் பாரத்தையும் போட்டு விட்டுத், தங்கள் நிலபுலன்களைச் சரிவரக் கவனித்து, ஏழைகளுக்குத் தம்மாலான உதவி செய்வதே, தாம் மக்கட்குச் செய்யும் பேருதவியென்று நம்பியிருந்தனர்.

வாழ்வின் குறிக் கோள்கள் பல. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றில் ஈடுபாடு. இவர்கள் கனவு ஏழைகள் உள்ளத்தில் குடியிருத்தல் ஒன்றேதான்.

பேராசைப் பேய்

ஈகையிற் சிறந்த தருமசாமிக் கவுண்டருக்கு, கோயமுத்தூர் மாவட்டத்தில் பல பாகங்களில் உற்றார் உறவினர் இருந்த போதிலும் அவருடன் பிறந்த செல்லக் காள் என்று ஓர் அம்மையும் இருந்தாள். அவள் தன் அண்ணனைக் காட்டிலும் சிறந்த செல்வரான ரங்கப்பய் யானையம் விரப்ப கவுண்டருக்கு வாழ்க்கைப்பட்டாள். ஓர் ஆண் மகனையும் பெற்றெடுத்தாள். அவனுக்குத் திரிபுரசுந்தரன் என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்தாள்.

தன் அண்ணனுக்கு மக்கட்பேறில்லையே யென்று அவள் வருத்தப்படுவதற்குப் பதிலாகக் களிப்பில் ஆழ்ந் தாள். தப்பித் தவறிக் குழந்தைப்பேறு கிடைத்து விட்டால் அண்ணன் சொத்தில் தனக்குள்ள உரிமை போய் விடுமே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள். மேலும் கோயில் குளங்களுக்குச் சென்று, தன் அண்ண னுக்குக் குழந்தைப் பேறு கொடுத்தருளக் கூடாதென்று இறைவனை வேண்டினாள். தன் அண்ணன் பிள்ளைப் பேறு இல்லாமல், சார்பு அற்றவனாய் வின்றாலகேக பொருள் முழுமையும் தன் கைவசப்படின் தங்கத்தாலும் வைரத்தாலும் ஆகிய அணி வகைகளைத் தெய்வங்களுக் குச் சாத்துவதாக வேண்டிக் கொண்டாள்.

மந்திர மாயம், காலக் கணிதம் ஆகிய வற்றில் வன்மை நிறைந்தோர்களைப் பல இடங்களினின்றும் தன் வீட்டிற்குத் தருவித்துத் தன் எதிர்கால நிலையை உள்ளபடி உணர்த்தும்படி வேண்டினாள். மூடர்களை முழு மூடர்களாக்கும் இத்தகைப்பட்ட கூட்டத்தினர் 'செல்லக்காள்', செல்வத்தில் சிறந்தவளாகும் காலம்

நெருங்கி விட்டதென்று சொல்லி அவளைக் குளிர்வித்துக் தங்களுக்கு வேண்டிய பரிசுகள் பெற்றேகினர்.

செல்லக்காளின் கணவர் வீரப்ப கவுண்டர் பெயருக்குப் பொருந்த வீரம் படைத்தவரல்லர்; கோழை; பயந்த பண்பினர். பெண்ணுலகில் தன் மனைவியின் திறமையை மீறியவர் யாருமில்லை என்று மனக்கோட்டை கட்டும் மாண்பினர். மனைவி சொல்லுக்கு மீறி நடக்கும் வன்மை யில்லாதவர்: கவுண்டர் தன்னறிவோடு ஒன்றும் செய்யாமல், மனைவியின் அறிவோடு ஒத்து நடக்கக் கட்டுப்பட்டவர்; தப்பித் தவறிக் கவுண்டர் தன் சொந்தப் பொறுப்பில் ஏதேனும் செய்துவிடின், அம்மையார் திரிசூலம் ஏந்திக் கொடியரைக் கொன்ற பேரிறைவியைப் போன்று எதிர்ப்படும் பொருளை ஏந்திக் கணவனைத் தாக்க முற்படுவாள். அறஞ்செயல் இவ்விருவரும் என்றும் எண்ணியும் அறியாதது.

இத்தகையோர் இல்லத்திற்கு உற்றார் உறவினர் வருவதே கிடையாது. எவரேனும் சிலர் வீடு தேடி நுழையின், தங்களுக்குச் செல்லக்காள் சூட்டும் பட்டங்களையும், வரவேற்பு முறைகளையும், அறிந்து சொல்லாமல் சென்று விடுவார்கள். செல்லக்காள் மட்டும் தனக்கு இருப்பது போதாதென்று, தன் அண்ணன் வீட்டிற்கு அடிக்கடி சென்று, தனக்கு வேண்டுவனவற்றை யெல்லாம் 'சுழட்டிக் கொண்டு' வருவாள். தருமசாமிக் கவுண்டரும் உடன் பிறப்புப் பற்றினால் அவள் விரும்பியவற்றை யெல்லாம் போதுமென்ற மட்டும் கொடுத்து வந்தார்.

இவ்வுலகில் செல்லக்காளைப் போல் அநேக பிசாசுகள் பேராசைப் பித்துப் பிடித்தும் பொருள் குவிக்கும் வெறியே நன்னெறி என அதனை மேற்கொண்டும் குடும்ப

நலங்களைக் குலைப்பதற்கெனக் குழுமி நஞ்சினும் மிகுந்த கொடுமையுடன் நாட்டில் உலாவுகின்றன. 'காதற்ற ஊசியும் வாராது காண்கடை வழிக்கே' எனும் உண்மையினை உணராது 'அறம் செய விரும்பு' எனும் மூதுரையைப் பொருட்படுத்த மாட்டார்கள் இவர்கள்.

இவர்களின் செல்வத் திருமகன் திரிபுரசுந்தரனுக்கு ஆண்டு ஐந்து ஆகியும், 'அம்மா! அப்பா! என்று அழைக்கவும் ஆற்றலற்றிருந்தான். குழந்தையின் அழகைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. குழந்தையை ஒழுங்குறப் பாதுகாத்து வளர்க்காததால் அது எப்பொழுதும் நோய்வாய்ப் பட்டிருந்தது. குழந்தையின் வளர்ச்சிக்கேற்ற உணவைக் காலாகாலங்களில் கொடுக்காததால், குழந்தையின் உடல் வளர்ச்சியில் குன்றுதலேற்பட்டது. பணப்பித்து தலைக்கேறி வெறிபிடித்தலைந்த இவர்களுக்குக் குழந்தையைக் கவனிக்கக் காலம் இல்லை போலும்!

செல்வத்தைச் சேகரித்துத் தாங்களும் துய்க்காமல் பிறருக்கும் கொடுக்காமல் தங்களைத் தாங்களே மா பெருஞ் செல்வர்களாக ஆக்கிக்கொள்ளுவோர் நம் நாட்டின் முற்போக்குக்கு முட்டுக்கட்டை போடுபவர்களே யாவார்கள். விரப்ப கவுண்டரைப் போன்றவர்களிடம் பணம் பதுங்கிக் கிடப்பது மக்கள் செய்த தீவினையின் பயனாலோ?

ஈகையும் வறுமையும்

இரங்கப்பம்பாளையம் என்னும் கிராமத்துக்குச் சுமார் பன்னிரண்டு மைல் தூரத்தில் செல்லப்பம்பாளையம் என்னும் பெயர் கொண்ட மற்றொரு சிற்றூர் இருக்கிறது. இவ்வூரில் இராமசாமிக் கவுண்டர் என்னும் ஒரு வேளாளக் கவுண்டர் புகையிலை வாணிபத்தில் திரண்ட செல்வம் சம்பாதித்துத் தன் மனைவி வள்ளியக்காளுடன் இன்புற்று வாழ்ந்து வந்தார். இவர்களுக்குக் கோயில் குளம் போகாமலே பிறந்த நடராசன் பன்னிரண்டு ஆண்டினன் என்றாலும் அறிவுடன் இருந்தான். நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த இவ்விளைஞனுக்குப் பெற்றோர்கள் 'இளமையில் கல்' என்னும் வாக்குப்படி, தக்க வயதில் பாடசாலைக் கனுப்பி, சிறந்த முறையில் படிப்பித்து நல்ல முறையில் வளர்த்து வந்தனர்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்'. நடராசனும் தன் ஆரம்பக் கல்வியை ஆர்வத்துடன் கற்றுத்தன் பெற்றோர்களும் ஆசிரியர்களும் பன்முறை புகழ்ந்து பேசச் செல்லக் குமரனாக வளர்ந்து வந்தான்.

ஆண்டுகள் வளர வளர மைந்தனின் நுண்ணறிவு வளரத் தொடங்கியது. ஆண்டுகளுக் கேற்ப உடல் வளர்ச்சி அமையப் பிணி நீங்கிய பெரு நலத்துடன் பின்னிய அன்பொடு அன்னை ஊட்டிய அமிழ்தத்தினால் செல்வன் சீராக வளர்ந்து வந்தான். பரந்தகன்ற நெற்றியையும் அழகிய கண்களையும் யாரும் பல முறை பார்க்க ஆசைப்படுவார்கள். நாள் தவறாமல் கண்ணேறு கழிக்காவிட்டால் வள்ளியக்காளுக்குத் தூக்கம் வராது.

இராமசாமிக் கவுண்டர், நல்லறச் செயல்களில் தருமசாமிக் கவுண்டரைக்காட்டிலும் ஒருபடி உயர்ந்தவர் என்றே சொல்ல வேண்டும். அவர் பிறர் பசித்திருக்கத் தாம் உண்டு வாழ்தலை வெறுப்பவர். சாதிமத வேறுபாடின்றித் தம்மை அண்டினோர்களை ஆதரிப்பவர்; தம்மைப் போல பிறரையும் நினைக்கும் பெருமகனார். துன்பப்படும் தம் பந்துக்களுக்கு வேண்டிய மட்டும் பண உதவி செய்பவர்; ஏழைக் குழந்தைகளுக்கு எழுத்தறிவிக்கும் இன்பப் பணியினையும் மேற்கொண்டொழுகுபவர்.

கொடை மடம் பட்ட கவுண்டர் நாளுக்கு நாள் கடன்காரர்களின் ஆளுகைக்குட்பட்டார். கவுண்டரின் ஆணைக்குக் கீழ்ப்பட்டு அவரின் வாணிய வரவு செலவு, கணக்குகளைக் கண்காணித்து வந்த அவர்தம் பந்துக்கள் கவுண்டரின் வள்ளல் குணத்தினை எள்ளி நகையாடி முதலில் அவரை ஆண்டி ஆக்கி, தாம் மேன்மையாக வாழும் மேலான செயலில் முழு மனத்துடன் தம் கவனத்தைச் செலுத்தி வந்தனர். சூது வாது அறியாத கவுண்டருக்குத் தம் உண்மையான நிலை தெளிவுறத் தெரிந்தபின், செய்வதின்னதென்று தெரியாமல் திகைத்தார். தம்முடன் நெருங்கிப் பழகி, கொஞ்சிக் குலாவிக் கூத்தடித்த வாணிபத் துறையினர் கடனைத் தீர்க்காவிடின் சிறை வாசச் செலவுக்குச் செப்பமாக முற்படுமாறு கண்ணோட்டமின்றிக் கடுமையாய்க் கூறினர்.

கடன்காரக் கவுண்டர் தம் நிலபுலன்களை விற்றுகூடியமட்டும் தம் கடனைச் செலுத்த முயன்றும் தம்மையறியாமல் தம்மை நெருக்கிய அளவுக்கு மீறிய கடனை அடைக்க முடியாது விழித்தார். மானமிழந்து வாழ்வதைக் காட்டிலும் இறப்பதே மேல் என்ற முடிவுக்கு வந்தார்.

கவுண்டரை ஆபத்தினின்றும் நீக்கும் பொருட்டு, காலன் கடுமையான என்புருக்கி நோயினைக் கொடுத்து அவரைத் தன் வயமாக்கிக் கொண்டான். கொடை வள்ளலாகத் திகழ்ந்த இராமசாமிக் கவுண்டர் தம் மனைவி வள்ளியக் காளையும், அருமை மைந்தன் நடராசனையும், ஒட்டாண்டிகளாக வாழ விட்டு மண்ணுலகினின்றும் மறைந்தார்.

கணவனைப் போல் மானம் உணர்வுக்குக் கட்டுப் பட்டு வாழ்ந்த வள்ளியக்காளும், மீதியிருந்த நிலபுலங் களையும் விற்றுத் தனக்குத் தெரிந்த தெரியாத கடன் காரர்களுக்கெல்லாம், இல்லையென்று சொல்லாமல் பங் கிட்டுக் கொடுத்து விட்டு, உள்ளூரில் வாழ மனமில்லா தவளாய்த், தன் மைந்தன் நடராசனுடன் வெளிக் கிளம்பினாள்.

"உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்ற மொழி பழமொழியே யன்றி செயலில் செல்லா மொழி. இன்றைய உலகில் ஏறு மொழி. இராமசாமிக் கவுண்ட ரின் பந்துக்கள் கவுண்டர் கால மானதற்கும் வருத்தப் படவில்லை; அவர் மனைவியின் வேற்றூர் செல்கைக்கும் துக்கப்படவில்லை.

செய்ந்நன்றி மறந்து, மானத்தை காற்றிலே பறக்க விட்டு, கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்ற நம்பிக்கையில் நாட்டம் கொண்டு வாழ்பவர்களின் ஆடல் பாடல்கள் நிலையற்றவை. அறத்தில் ஆன்ம அமைதியினையும் மகிழ்ச்சியினையும் அடைந்து வாழ்பவர் களின் வாழ்க்கை, மாண்டபின்னும், மண்ணுலகில் நிலைத்து நிற்கும். இவர்களுக்குப் பிறப்பும் ஒன்றே; இறப்பும் ஒன்றே; அறிவு உலகம் போற்றும் அறிஞர் களும் இவர்களே!

பூ மலர்ந்தது

ஒரு நாள் மாலைப் பொழுதினிலே தருமசாமிக் கவுண்டர் இன்பத்தில் ஆழ்ந்தவராய் தம் வீட்டுத் திண்ணையில் இருந்து அடைக்காய் மென்று கொண்டிருந்தார். தம் மனைவி திலகக்காள் நிறைந்த கருவினளாய் இருந்தமையே மகிழ்ச்சிக்குக் காரணம். இச்சமயத்தில் தம் செல்வச் சிறப்புக்களை இழந்து, கூலி வேலை செய்தேனும் அயலூரில் தன் மதிப்புடன் வாழ்வதென்று ஊர் ஊராய்த் தன் மகன் நடராசனுடன் திரிந்து வந்த வள்ளியக்காள் அவ்வழியே வந்தாள்.

கவுண்டர் வள்ளியக்காளைக் காண நேர்ந்தது. வள்ளியக்காள் தன் வரலாற்றைக் கூறினாள். அடைக்கலம் புகுந்து தங்களுக்கு ஆவன செய்யுமாறு வேண்டிக் கொண்டாள்.

உயர் குடியில் பிறந்து, உயர் நிலையில் வாழ்ந்து, பிறருக்கு உதவி செய்வதே வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்ட அவ்வம்மையாரிடம் தருமசாமிக் கவுண்டர் அன்பு கொண்டு தம்மாலான எல்லாவகை நலங்களையும் செய்வதாக வாக்களித்தார். தம் மனைவி திலகக்காளிடம் அவர்களை அழைத்துப் போய் அவர்களுக்கு வேண்டியவற்றையும் கால நீட்டிப்பின்றி உடனே செய்யுமாறு கூறினார். பெண் மக்களிருவரும் அக்காள் தங்கை முறை கொண்டாடவும் தொடங்கி விட்டனர். நடராசன் எல்லோருக்கும் குழந்தையாகி விட்டான்.

'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்,' 'அறம் ஆருயிர் காக்கும்' என்னும் முதுரைகள் வள்ளியக்காள் வாழ்க்கையில் மெய்மொழியாக விளங்கின. தமக்கு அடைக்கலம் கொடுத்து, அச்சம் போக்கிய அவ்வில்லற நல்லறத்தோருக்கு வள்ளியம்மாள் தன் உள்ளம் நிறைந்த மெய்யன்பினைத் தெரிவித்தாள்.

அடைக்கலம் புகுந்த வீட்டில் வள்ளியக்காள் அதிகாரம் புரியவில்லை. உதவி செய்தவர்களுக்கு எதிர் நலம் செய்யும் நல்வினையைச் செய்தலில் ஈடுபட்டாள். வயிறு வாய்த்த திலகக்காளுக்கு முழு உதவி செய்தாள். தம் மனைவியும், வள்ளியக்காளும் வேறுபாடின்றிக் கலந்து வாழ்தலைக் கண்டு தருமசாமிக் கவுண்டர் அளவிலா மகிழ்ச்சி கொண்டார்.

எல்லாம் வல்ல இறைவனருளாலும், வள்ளியக்காளின் தொண்டின் நலத்தாலும் நாளடைவில் திலகக்காள் யாதொரு தொல்லையுமின்றி ஒரு பெண் மகவை ஈன்றெடுத்தாள்.

நல்ல நாளில் குழந்தைக்குக் கண்ணம்மா எனப் பெயர் இடப்பட்டது. செல்லக்காளும் அவள் கணவனும் நாலோடொன்றாக விருந்தில் கலந்து கொண்டார்கள்.

தருமசாமிக் கவுண்டர் நடராசனைத் தன் சொந்த மகனைப் போல வளர்த்து வந்தார். ஊரார் அனைவரும் கவுண்டரைப் போலவே நடராசனையும் விரும்பினர். அவர்கள் காட்டிய அன்புக்கெல்லாம் அவன் புன்னகையே பதில் சொல்லிற்று.

நல்ல காலம்

தருமசாமிக் கவுண்டர் வீட்டு வேலையாட்கள் நடராசனைத் தம் தலைவரின் குழந்தையாகவே எண்ணி நடந்து வந்தனர். பொதுவாகக் கூறுமிடத்து நடராசன் தன் வயதிற்கு மேலான அறிவுடையவனாய் விளங்கினான்.

இரங்கப்பம்பாளையப் பள்ளிக்கூடத்தில் எல்லா வகுப்புகளிலும் முதன்மையாகத் தேறி முடித்தான். கணிதத்திலும், ஆங்கில மொழியிலும் தனக்குள்ள அளவு கடந்த அறிவினை எல்லோரும் வியக்கும்படி விளக்கிக் காட்டினான். கல்வியறிவை மேலும் செம்மையாய் வளர வைப்பதற்காக தருமசாமிக் கவுண்டர் தம் ஊருக்கு ஏறக்குறைய பதின்மூன்று கல் தொலைவிலுள்ள ஈரோட்டுக்கு மெட்ரிகுலேஷன் படிப்பதற்கு அனுப்புவதாக முடிவு செய்தார்.

ஒரு நல்ல நாளிலே கவுண்டர் நடராசனுடன் ஈரோட்டிற்குச் சென்று அங்குள்ள மிஷன் பள்ளிக்கூடத்தில் பத்தாம் வகுப்பில் சேர்த்தார். அப்பள்ளித் தலைமை ஆசிரியர் ஹெக்டர் துரையவர்கள் இந்திய மாணாக்கர்களின் கல்வியில் மிகக் கருத்துக் கொண்டதுமல்லாமல், ஏழைக் குழந்தைகள் மேல் படிப்பிற்குப் போக விரும்பியும் பணத் தொல்லையால் போக முடியாமலிருந்தால், மேல் அதிகாரிகளுக்கு எழுதிப் பணமின்றிப் படிப்பதற்குத் துணை செய்வார்.

நடராசனைப் பார்த்ததுமுதலே, பையன் மேலான பதவிக்கு வரத் தகுதியுள்ளவன் என்று ஊகித்துக் கொண்டு தம் சிறந்த பார்வையினைப் பையன்பால்

செலுத்தத் தொடங்கினர். நடராசனும் தன் பாடங்களை மிகவும் கருத்துடன் ஊக்கமாகப் படித்துப் பள்ளியின் இடைக்காலத் தேர்வுகளில் வகுப்பிலே எல்லாப் பாடங்களிலும் முதன்மையாக நின்றான். தன் பள்ளிப் பாடங்களைத் தேர்வில் தேர்தற்காகப் படித்ததுமன்றி, பரந்த நோக்கத்தையும், தெளிந்த அறிவையும் பெறும் பொருட்டு நாள் தாள்களை தவறாமல் படித்து வந்தான். வெளியீடுகளில் வெளிவந்த தன் அறிவுக்கு எட்டாத கட்டுரைகளைத் தன் ஆசிரியர்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

நடராசன் மற்ற மாணவர்களைப் போல் இரவும் பகலும் ஓயாமல் தன் பாடங்களைத் திருப்பித் திருப்பிப் படித்து மறு நாட்காலையில் படித்ததை மறக்கும் இனத்தைச் சேர்ந்தவன் அல்லன். ஒரு முறை படித்ததும் செய்திகளைக் கூர்ந்து அறியும் இளைஞன். உடற் பயிற்சியிலும் சிறிய கருத்தினைச் செலுத்தியதால் மிகக் கட்டான உடலினன் ஆகியதுமன்றிப் பள்ளியில் நடந்த விளையாட்டுப் பந்தயங்களில் முதற் பரிசும் பெற்றான். மாணாக்கன் ஒருவன் கல்வியிலும், ஓடி ஆடும் விளையாட்டுக்களிலும் முதன்மையாக இருப்பது மிக அருமை.

நடராசன் பள்ளியில் சேர்ந்த ஓராண்டில் ஆசிரியர்களின் மதிப்பையும், தன் ஒரு சாலை மாணவர்களின் அன்பையும் மிக எளிதில் பெற்று எல்லோராலும் போற்றப்பட்டான். கடினமானதும் கரடு முரடானதுமான செய்திகளை மிக எளிமையாக அறியும் ஆற்றலுள்ள இவ்விளைஞன் மற்ற மாணவர்களுக்கு எளிதில் கருத்துக்களைத் தெளிவுபடுத்தி நலம் புரிந்து வந்தான்.

பொறுமை, தன்னலம் என்ற இரு தீய குணங்கள் பொதுவாக மக்கள் எல்லோரிடமும் குடிகொண்டிருக்கின்றன. இக் குணங்கள் தோன்றி வளர்ச்சி பெறுவது குறிப்பாகக் குழந்தைகள் பாடசாலைகளில் கல்வி கற்கும் காலத்திலேதான். இக்கால முதற்கொண்டே பொறுமை தன்னலம் என்ற தொத்து வியாதிகளில் தொடக்குண்டகம் இளைஞர்கள் ஒருவர்க்கொருவர் பிறர் முன்னேற்றத்தில் கவலை கொள்ளாமல் தாங்கள் முன்னேறும் முறைகளில் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றனர்.

நடராசனே எனின் தான் கற்றதைப் பிறருக்குக் கற்பித்து மகிழும் பெருநோக்கு உடையவனாக விளங்கினன்.

நடராசனைத் தம் மக்களில் ஒருவனாகப் பாவித்து வந்த ஹெக்டர் துரையவர்கள், மைந்தன் மிக உயர்ந்த பதவிக்கு வரத் தகுதி யுள்ளவனென்று எண்ணியதுமல்லாமல் தாமே அவனை மேல் படிப்புக்காகச் சீமைக்கு அனுப்பவேண்டிய ஏற்பாடுகளும் செய்வதென்றும் தீர்மானித்தார்.

பத்தாவது வகுப்புத் தேர்வு முடிவு பெற்றது. அவ்வாண்டு வினாத்தாள்கள் மிகக் கடினமாயிருந்தும் நடராசன் சென்னை மாநிலத்திலேயே முதல் மாணவனாகத் தேறுவதில் ஐயமில்லை என்று எல்லோரும் முடிவாக எண்ணினர். நடராசன் ஹெக்டர் துரையவர்களின் அனுமதி விடை பெற்றுக்கொள்வதற்காக வந்த பொழுது, துரையவர்கள் அவனுக்கு வாழ்த்துக் கூறித் தாம் அவனை மேல்படிப்பிற்காகச் சீமைக்கு அனுப்ப முயற்சி செய்வதாகவும் சொல்லி அனுப்பி வைத்தார். நடராசனைப் போற்றிப் பாதுகாத்து வந்த ஆசிரியர்கள் மிகுந்த அன்பு பாராட்டி அவனுக்கு ஒரு தேனீர் விருந்தளித்து மகிழ்வித்தனர்.

பொறாமைத் தீ

தன் அண்ணன் மகள் கண்ணம்மா சீரும் சிறப்புமாய் வளர்வதைக்கண்டு செல்லக்காள் மிகுந்த பொறாமை கொண்டாள். தனது உடன் பிறந்தானின் பெருஞ் செல்வம் தனக்குக் கிடைப்பதற்கு இடையூறாய் வந்த கண்ணம்மாவை ஒழிப்பதற்கு மந்திர தந்திர உதவிகள் அனைத்தையும் நாடினாள். ஆனால் அவைகள் ஒன்றும் பலிக்காமல் போகவே இவைகள் தன்னைப்போன்ற அறிவில்லாதவர்களை ஏமாற்றும் பொருட்டுச் சில தன்னலவாதிகளால் உண்டாக்கப்பட்டவைகள் என்ற முடிவுக்கு வந்து அவைகளில் தனக்குள்ள நம்பிக்கையை இழந்தாள். அறியாமையால் அறிவிழந்த பலர் நாள்தோறும் கடவுளைச் சீறிப் பேசுவதை நாம் பல முறை கேட்டிருக்கிறோம். இக் கூட்டத்தினரை நொந்து கொள்வதைக் காட்டிலும் இவர்கள் மேல் இரக்கம் கொள்வதே மேல். கடவுள் எப்பொழுதும் அறத்தினைச் சார்ந்து நிற்பார் என மக்கள் உணர்வரேல் இவ்வுலகில் அறங்கூறு அவைகளுக்கும் உலகப் பெரும் போர்களுக்கும் இடமே இல்லையல்லவா?

தனது அருந்தவப் புதல்வன் திரிபுர சுந்தரன் பதினைந்து வயதடைந்தும் ஒழுங்குறப் பேசினான் அல்லன். கல்வியின் பொருட்டு மிகுந்த அல்லற் பட்டும் செலவு செய்தும் கலைமகள் திரிபுரசுந்தரன் மேல் தன் கண்ணோட்டத்தினைச் செலுத்த மறுத்துவிட்டாள். குறும்புகளைச் செய்து, பிறருக்குத் துன்பத்தை விளைவித்து அதனால் மகிழ்ச்சி கொள்ளும் திருக்குமரந்தை கல்வி கற்பதில் கவலை கொள்ளவில்லை. எப்படி அவன் அன்னை

கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடவாளோ, அவ்வாறே மைந்தன் தன் தாய் தந்தையர் இருவருக்கும் கீழ்ப்படிந்து நடவாமல் வீட்டில் தனித் தலைவனாகித் தன் மனம் போனபடி காலத்தைக் கழித்து வந்தான். பள்ளிக்கு மாதம் ஒரு முறை சென்றால் அந்நாள் ஒரு நன்னாளாகப் பெற்றோர்களால் கருதப்பட்டு வந்தது. ஆசிரியர்களைத் திட்டுவதும், பள்ளி மாணவர்களைத் துன்புறுத்துவதும்தான் கல்வி கற்றலின் பொருள் என்பது அவன் கொள்கை. எனவே பள்ளியில் இவன் எல்லோராலும் கொடுமைத் தலைவன் என்றும் பழிகாரச் சுந்தரன் என்றும் அழைக்கப்பட்டு வந்தான். மூடனாகிய திரிபுர சுந்தரன், தன் வீரத்தையும் ஆற்றலையும் புகழ்ந்து இத்தகைய பட்டப் பெயர்களிட்டுத் தன்னை அழைக்கின்றார்கள் என்று நினைந்தான்.

இத்தகைய பிரகஸ்பதிக்குப் பெற்றோர்கள் தங்கள் அளவு கடந்த அன்பையும் ஆதரவையும் காட்டியதுமல்லாமல், தம்பி தினம் தோறும் புரியும் திருவிளையாடல்களுக்கெல்லாம் 'பலே' போட்டுத் தட்டிக்கொடுத்தும் வந்தனர். பெற்றோர்கள் அடக்கி வளர்க்காத ஆண்மகன் தன் விருப்பத்தின் வழிச் செல்லும் போக்கிரியாக மாறி வளர்ந்து வந்தான்.

பொறாமைப் பிணியால் பிடிக்கப்பட்டவர்கள் தாம் விரும்பும் செயல்களை நிறைவேற்றுவதற்கு பல வழிகளை நாடுவர். செயலால் காரியத்தை முடித்துக் கொள்ள இவர்களுக்கு வன்மை கிடையாது. தங்கள் முயற்சியில் ஒரு முறை தோல்வி அடைந்தால் மனத் தளர்வையும் சோர்வையும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், விடா முயற்சியின் உதவியால் திரும்பத் திரும்ப தங்கள் எண்

ணங்களை ஆட்டத்திற்கும் ஓட்டத்திற்கும் விடுவது வழக்கம். செல்லக்காளும் தன் நினைவுக்கு முரணாக குழந்தை பிறந்ததைக் குறித்துச் சில நாட்கள் மட்டுமே உள்ளூர வருத்தம் கொண்டாள். பின்பு மேற்கொண்டு தான் செய்ய விருக்கும் காரியங்களைக் குறித்துக் கருத லானாள். தன் அண்ணன் சொத்து முழுவதும் தன் குடும்பத்தையே சேரும் பொருட்டு, கண்ணம்மாவைத் தன் மகனுக்கு மனைவியாக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள்.

இசை எழுச்சி

தருமசாமிக் கவுண்டரும் அவரது மனைவி திலகக் காளும் தங்கள் புதல்வி கண்ணம்மாவை அழகுக்கு அழகு செய்து அருமையாக வளர்த்துப் பல்வகைக் கல்வி களையும் தம் வீட்டிலேயே கற்றுக் கொடுத்தற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வந்தனர். கண்ணம்மா வுக்கு ஆண்டு பன்னிரண்டு; எழில்பூத்த இளமங்கையாக விளங்கினாள். ஆரம்பக் கல்வியை மிக விருப்பத்துடனும் முயற்சியுடனும் கற்று வந்ததால் தக்க வயதிலே பல் கலைச் செல்வியாய் விளங்குதற்குரிய அறிகுறிகள் எல்லாம் அவளிடம் தோன்றின. மற்றெல்லாக் கல்வி யையும்விட இசையில் தனக்குள்ள அடங்கா எழுச்சி யைத் தன் தந்தையிடம் அடிக்கடி தெரிவித்ததால், தந்தையும் தன் மகளின் விருப்பத்தை நிறைவு செய்யும் பொருட்டுத் தஞ்சாவூரிலிருந்து ஃபரவசுந்தரன் என்னும் பெயர் பெற்ற ஓர் இசை ஆசிரியரைத் தருவித்து இசை கற்றுக் கொடுக்குமாறு செய்தார்.

கண்ணம்மா குயிலினும் இனிய குரலொடு பிறந்தவள். அலை மேல் அலை வந்து மோதுவது போன்ற இனிய குரலோசை பெற்றவள். கேட்கக் கேட்கத் தெவிட்டாத தெள்ளமுதக்குரல் அவளுடையது. இசை ஆசிரியரின் திறமையாலும், கலைமகளின் திருவருளாலும் குழந்தையினிடம் முழு இசைவு கொண்டுவிட்டது இசை ஞானம்! தியாகய்யர் கீர்த்தனைகளில் ஐம்பதையும், தமிழ்ப்பதங்கள் பலவற்றையும் எளிமையாக, இசை பயிலத் தொடங்கிய ஓராண்டிற்குள் கண்ணம்மா மனப் பாடம் செய்துகொண்டாள்.

இசைக்கு 'அனுகுண்டை' விட அரிய வன்மை யுண்டு. 'அனுகுண்டு' அழிவிற்கறிகுறி. இன்னிசையோ வென்றால் உள்ளமுருக்கும் இன்பத்திற்கறிகுறி. செல்வர்கள், ஏழைகள், அறியாதவர்கள், அறிஞர்கள் என்ற வேறுபாடு இன்றி எல்லோருக்கும் இன்பத்தினை அள்ளி அள்ளிக் கொடுக்கும் தன்மையது இன்னிசை. தீராப் பிணியைத் தீர்க்கும் திருமருந்து. இன்னும் மருத்துவ நூலில் சற்றுச் சிந்தையைச் செலுத்தினால், இசைக்கலையின் அருமை பெருமை நன்கு விளங்கும். மருத்துவ அறிஞர்கள் இசையினை மருந்து வகைகளோடு சேர்க்கவும் பின்வாங்க மாட்டார்கள்;

மனக்கவலையை மாற்றவல்ல ஏழிசையினை நாள் தோறும் கற்று ஆன்ம அமைதியையும் அன்பையும் கொண்டாள் கண்ணம்மா. இறைவனின் ஏற்றம் சான்ற தன்மைகளைப் போற்றிப் போற்றிப்பாடி அகமகிழ்ந்தாள். இன்பங்களிலெல்லாம் மேலான பேரின்பம் இசையினுள் அடங்கி இருக்கிறது. ஊன், உயிர் எல்லாம் இசையே. கட்டுக்கடங்காமல் எல்லை மீறிப்போகு மிடங்களிலெல்லாம் தன் அன்பர்களை மடங்கா மகிழ்ச்சியில் ஆழ்த்தி அழிவின்மையை நிலை நாட்டும் ஆற்றல் வாய்ந்தது இசை என்பதில் என்ன ஐயம்? அவளது இனிய இசையைக் கேட்போர் பசியறியார்; உலக உணர்வறியார்; பிணி அறியார்; தம்மையே அறியாமல் மெய்ம் மறந்தோராவர்! உள்ளத்து உணர்ச்சிப்பண்பு உள்ளத்து வெளியிடாக வெளிவந்தது. மலர் குலுங்குவதுபோல் இருக்கும் இவள் எடுக்கும் பாணி. விண்மீன்களைப் பதித்தது போல் எல்லோரும் தான் பாடும் பாடல்களை எளிமையாகப் பொருள் புரிந்து கொள்ளுமாறு தெளிவுறப் பாடுவாள். துளியளவும் நாணி ஒதுங்குதலோ இசை

மரபொடு பாடமுடியாது திகைத்தலோ இன்றிப் பாடுவாள். பிறருக்குப் பொருள் புரியுமாறு அவர் அறிந்த மொழியில் இசையோடு பாடியதால் இன்னிசையைக் கேட்டோர் பிருந்தாவனக் கண்ணனே பவள வாய்திறந்து இசை மழை பெய்கிருனே என்று வியப்பர்.

'தங்கள் பெண்ணுக்கும் இசைப் பயிற்சி உண்டு' என்று மாப்பிள்ளை விட்டார்களை மகிழ்விப்பதன்பொருட்டுச் சில பெற்ருேர்கள் சில நாட்களுக்கு மட்டும் சிக்கனச் செலவில் இசையறிவு அற்ற ஆசிரியர்களைக் கொண்டு தங்கள் பெண்களுக்கு இசை கற்றுக் கொடுக்கச் செய்கின்றனர். இத்தகைய பேரறிஞர்கள் மாப்பிள்ளை விட்டார்களையும், மாப்பிள்ளைமார்களையும் ஏமாற்றுவதற்குப் பதிலாகத் தாமே இறுதியில் ஏமாற்றமடைகின்றனர். ஏனென்ருல், கலைகளிற் சிறந்த இசைக்கலை எளிதில் கற்கக் கூடியதன்று. மேலும் அரை குறையாகப் படித்த சங்கீத பாகவத சிகாமணிகள் இசைக் கலையைப் பிறருக்குக் கற்றுக் கொடுக்கச் சற்றும் தகுதி இல்லாதவர்கள். இவ்வகையான அறிவு பெற்று அச்சம் இன்றி இசை அரங்குகளில் தங்கள் இசை மழையினைப் பொழியும் பெண்மணிகளின் பாடல்களைக் கேட்டு இசையில் பற்றுதலுள்ளவர்களுக்கும் அதன் மேல் வெறுப் பேற்படச் சபைகளிலிருந்து வெளியேறிக் காற்று வாங்க உலவுவதில் வியப்பொன்றுமில்லை!

இசைக் கலையைப் பெண்மணிகள் தான் வளர்க்கக் கடமைப் பட்டவர்கள். இசைக்குப் புத்துயிர் அளித்தவர்கள், அளிக்கக்கூடியவர்கள் நம் நாட்டுப் பெண்மணிகள் தான். தக்க முறையில் இசையறிவு பெற்ற அறிஞரின் உதவியால், கண்ணம்மாவைப்போல் ஊக்கத்துடனும், விருப்பத்துடனும் கற்றுப் பாடினுல் எல்லோரும் சுவைத்துத் தினைக்கும் அமிதத்தை அளித்தோராவார்கள்.

காலை அரும்பிய காதல்

தருமசாமிக் கவுண்டரின் அருந்தவப் புதல்வி கண்ணம்மா இசை அரசியாய் விளங்கித் தன் பெற்றோரையும் ஏனையோரையும் மகிழ்வித்ததுமல்லாமல், நாளுக்கு நாள் அழகுமிக்க பேரழகியாக வளர்ந்து வந்தாள். சூது வாது இன்னதென்றறியாத இளமங்கை அவள். மங்கையின் மனம் கோணாமல் விரும்பிக் கேட்டவைகளையெல்லாம் பொருட் செலவைக் கருதாமல் பெற்றோர் வாங்கித் தந்தனர். விலையுயர்ந்த ஆடை அணிகளை அணியக் கண்ணம்மா விரும்பியதில்லை. வெளி நாட்டுத் துணி மணிகளை வெறுத்து உள் நாட்டுக் கைத்தறியால் நெய்த ஆடைகளையே விரும்பினாள்.

இசைப் பயிற்சியிலும் வீட்டு வேலைகளைச் செய்வதிலுமே காலத்தைக் கழித்து வந்த இப்பெண்மணியின் அழகு நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வந்தது. நாட்டுப்புறத்தில் வாழ்ந்து, நல்ல காற்றையும், உடலுக்குறுதி தரும் கறிவகைகளையும் உண்டு வந்ததின் பயனாய் உடல் நலிவு, மருத்துவம் என்பவைகள் இன்னதென்றே அறியாமல் வானத்திலே பூக்கும் புதிய வளர்பிறையினைப் போல் வளர்ந்து வந்தாள்.

மங்கைப் பருவம் எய்திய நங்கை கண்ணம்மா கவினுறத் திகழ்ந்தனள். ஆண்டின் முதிர்விற்கேற்ப வளர்ச்சியும் வனப்பும் பெற்று விளங்கினாள். நாட் காலை மலரும் செந்தாமரையினை வென்ற முக அழகியாய் ஒளிர்ந்தாள். கருகரு எனக் கருத்து நீண்ட அவளின் கண்கள் ஆழ்ந்த நோக்கோடு பிறழ்ந்தன.

நடராசனும் கண்ணம்மாவும் குழந்தைப் பருவத்தி லிருந்தே ஒருவரையொருவர் சிறிது நேரமும் பிரியாம லிருந்தனர். உடன் பிறந்த ஒரு தாய் வயிற்றுப் பிள்ளை கள்போல் வளர்ந்து வந்தனர். எனவே தன் அண்ணன் நடராசன் தன்னை விட்டகன்று ஈரோட்டுக்குச் சென்றது கண்ணம்மாவுக்குத் துன்பத்தை அளித்தது. 'என்று வருவான் என் அண்ணன்' என்று கண்ணம்மா எல்லோ ரையும் கேட்ட வண்ணமா யிருந்தாள்.

நடராசனும் மெட்ரிகுலேஷன் தேர்வினை முடித்துக் கொண்டு கோடைக்கால விடுமுறையின் போது வீடு வந்து சேர்ந்தான். ஹெக்டர் துரையவர்கள் தருமசாமிக் கவுண்டருக் கெழுதிய கடிதமொன்றில் நடராசனைத் தாம் சீமைக்கு மேல்படிப்பின் பொருட்டு அனுப்ப ஏற் பாடு செய்து கொண்டிருப்பதாக எழுதி இருந்ததை நட ராசனுக்குத் தெரிவித்து அவன் விருப்பத்தினைக் கேட்டார். அதற்கு நடராசன் கவுண்டரின் கட்டளை யின்படி நடக்கக் காத்திருப்பதாகப் பதிலளித்தான்.

தன் தந்தைக்கும் நடராசனுக்கும் நடந்த உரை யாடலைக் கண்ணம்மா மறைவாக நின்று கேட்டுக் கொண்டிருந்தாள். அண்ணனின் உருவத்தில் பல மாறு தல்களைக் கண்டாள். அழகே உருவெடுத்துவந்த இளம் காளையைத்தான் அன்றுடம் கண்குளிரக் கண்டு மகிழும் காலம் நெருங்கி விட்டதென்று உளம் பூரித்தாள். அண்ணனிடம் பேச உவகை கொண்டாள்! கண்ணம் மாள், நடராசனைப் பார்த்து, "ஏன் அண்ணு! எனக் கொரு கடிதமும் ஈரோட்டிலிருந்து எழுதவில்லை? எழுதி ஞல் உன் தகுதி குறைந்துவிடுமோ?" என்று சினத் துடன் கேட்டாள்.

நடராசனுக்கு சட்டென்று பேசத் தோன்றவில்லை. பின்னர் "நீ ஒன்றும் அறியாச் சின்னஞ் சிறுமியா யிருப்பாயென்று எழுதவில்லை. அது என் குற்றம்தான்; மன்னிக்கவும். இவ்வளவு பெரிய பெண்ணுகி இருப்பாய் என்று எனக்குத் தெரிந்திருந்தால் ஒன்றல்ல, நூறு கடிதங்கள் எழுதியிருப்பேன்" என்ருன்.

கண்ணம்மா உள்ளம் குளிர்ந்து விட்டது. "வாய் நிறைய நீ சொன்னதே போதும் அண்ணு. என் வாயில் நீ விரலை வைத்தால், நான் உறுதியாகக் கடிக்கும் பருவத்தை அடைந்து விட்டேன் என்பதை நீ அறிந்து கொண்டதைப் பற்றி எனக்கு மிக மகிழ்ச்சி. அஃதிருக்கட்டும், அப்பா நீ ஆங்கில மொழியில் வல்லவன் என்று அடிக்கடி எங்களிடம் சொல்லுகிருரே! அது உண்மையா?" என்ருள்.

"விளையாட்டாக அப்பா உங்களிடம் சொல்வதை நீங்கள் நம்பலாமோ?!"

கண்ணம்மா பாடு சங்கடமாகி விட்டது. என்ன சொல்வதென்றே தெரியவில்லை. மேலும் கீழும் விழித்தாள்.

"உண்மை பொய் என்பதை நானே அறிந்து கொள்கிறேன். நாளை முதற் கொண்டு எனக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுப்பதாகச் சொல்லு!"

"ஒரே ஒரு ஏற்பாட்டின் பேரில் உனக்குக் கற்றுக் கொடுக்க முற்படுவேன். நீ எனக்கு இசை ஆசிரியராக இருக்கவேண்டும். ஒப்புக் கொள்கிருயா?"

விரைந்து முடிவிற்கு வரமுடியாது தயங்கித் தயங்கி நின்றாள். உள்ளத்தில் ஊசலாடும் இனிய கனவுகளை எளிதில் எடுத்துச் சொல்ல முடிகிறதா?

கடைசியாகத் தன் விருப்பத்திற்கேற்ற இந்த ஏற்பாட்டிற்கு உடன்பட்டாள். நடராசன், கண்ணம்மாவைத் தன் மாணவியாக மாற்றி ஆங்கிலம் கற்றுக் கொடுக்கத் தொடங்கினான். கள்ளம் கபடம் மாசு மறுவில்லாத இரு உள்ளங்களும் ஒன்றையொன்று விரும்பினது. இருவர் கண்களும் பேசாமல் பேசித் தங்கள் ஆவலைத் தெரிவித்துக் கொண்டன. உதடுகளிரண்டும் உள்ளத்து உவகையைப் பூரித்துக் காட்டின.

இத்தகைய உள்ளத்து நெகிழ்வில் கற்பதா? கற்றுக் கொடுப்பதா? இருவரிடையே முகிழ்ந்த காதல் அவர்தம் உடன்பிறந்தாருணர்வினை வென்று வீறுற்றது. எனவே நடராசனும் கண்ணம்மாளும் தங்களுக்குள் உண்டாகும் மாறுதல்களை அறியாமல், உணராமல் காதலர்களாக மாறினர். காமக் கலப்பில்லாத உண்மைக் காதல் அழிவற்றது; கட்டுப்படாமல் கரைபுரண்டு நிற்கும் வன்மை வாய்ந்தது. சமூகக் கட்டுப்பாடுகளுக்கும், மனிதர்களால் சட்ட சபைகளில் நிறைவேற்றப் படும் சட்டங்களுக்கும், பணியாதுயரும் பண்பினது. இந்திரலோகப்பதவியையும், மன்னர் பிரான் தகுதியையும் 'சீ' என்று உதறித் தள்ளக் கூடியது. முள்ளின் மேல் நடந்தும் உண்மைக் காதலர்கள் இறுதியில் வெற்றியை அடைவர். இதுவே உண்மை.

அன்புள்ள மாமன்

நாட்கள் சில சென்றன. நடராசனும், கண்ணம்மாவும் ஒருவரையொருவர் சற்றேனும் பிரியாமல் மிகவும் நெருங்கிப் பழகி மிக மகிழ்ச்சியாகக் காலத்தைக் கழித்து வந்தனர். எதிர்பார்த்தபடி மிஷன் கல்லூரியின் தலைவர் ஹெக்டர் துரையவர்கள் தருமசாமிக் கவுண்டருக்கு நடராசனைக் குறித்து ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் அவர் நடராசன் மேல்படிப்பிற்காகச் சீமைக்குச் செல்வதென்றால், இண்டர்மீடியட் தேர்வில் தேற வேண்டும் என்றும் அதற்காக அவனைத் திருச்சிராப் பள்ளியிலுள்ள எஸ். பி. ஜி. கல்லூரியில் சேர்க்கத் தாம் ஏற்பாடுகள் செய்து விட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார். இதனைக் கேள்வியுற்ற கண்ணம்மா அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. யாருமறியாமல் மறைவான இடத்திற்குச் சென்று ஆடினாள், பாடினாள், தன்னை மறந்திருந்தாள். நடராசன் கவுண்டரைப் பார்க்காததால் ஹெக்டர் துரையவர்களின் கடிதத்தைப் பற்றி ஒன்றும் அறியமாட்டான். என்னினும் கண்ணம்மா மகிழ்ச்சியுடன் இருப்பதைக் கவனித்து வாயைக் கிளறினான்.

"ஏது! இன்றைக்கு எல்லையற்ற களிப்பு! பெரிய விட்டுக்காரர்கள் யாரேனும் பெண் கேட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார்களோ?"

உள்ளத்தை ஊசி கொண்டு குத்தும் கேள்வி அல்லவா அது?

" அவ்வகைய துன்பம் தரும் கடிதம் ஒன்றும் வரவில்லை. இது உன்னைப் பற்றியது. நீ என்னை இங்கே தவிக்கவிட்டுச் சிமைக்குப் போக முடியாதென்று உங்கள் ஆசிரியருக்கு அப்பா கடிதம் எழுதியிருக்கிருர்."

" இதற்கேன் இவ்வளவு மகிழ்ச்சி! என் முன்னேற்றத்தில் உனக்குச் சிறிதேனும் கவலை யிருக்குமானுல் நீ இச் செய்தியைக் கேட்டதும் துக்கம் அல்லவோ கொண்டாடி இருக்க வேண்டும்."

" ஒருவருக்கு மகிழ்ச்சி தரும் செய்தி மற்றவருக்குத் துன்பமாகத் தோன்றுவது மூன்றுமவருக்கு மகிழ்ச்சியாக மாறி மாறி வருவதும் இயற்கை. இதையறியாமல் வருத்தப் படுவது சிறுபிள்ளைத்தனம். பூசை வேளையாய் விட்டது. பூசை அறைக்குச் சென்று கடவுளைத் துதிப்போம்!"

" கடவுளைத் துதிப்பதா? நெஞ்சின் குமுறலைத் தெய்வத்தின் முன்னர் எளிதில் போக்கிவிட முடியுமா? அப்படியானுல் செல்ல வேண்டியதே" என்று கூறி மலைத்து நின்ற நடராசனை அழைத்துச் சென்ருள் கண்ணம்மா. கண்ணம்மாவின் மென்மையான கைகள் தன் மேல் படவும் நடராசன் ஒருவகை இன்ப உணர்ச்சி அடைந்தான்.

கண்ணம்மா அன்று நடராசனுக்கு மகிழ்ச்சி அளிக்கும் பொருட்டு, "பேராதரிக்கும் அடியவர் தம்பிறப்பையொழித்துப் பெருவாழ்வும் பேறும் கொடுக்கவரும் பிள்ளைப் பெருமானென்னும் பேராளா" என்ற பாடலை, கலப்புப் பண்ணில் அன்பு ததும்ப, மிக உருக்கமாகப் பாடினுள்.

குற்றமற எழும் குரல் ஒலியில் இன்னிசையும் ஒன்றிவிடின் எதிர்ப்படும் உள்ளக் கவலையும் உண்டோ? நடராசன் பாடலின் பொருட் சுவையிலும் குரல் இனிமையிலும் ஈடுபட்டவனாய், மெய்ம் மறந்து அசைவற்று, கண்கள் இரண்டையும் இறுக மூடி நின்றான். சில விநாடிகளுக் கப்புறம் தன் உணர்வைப் பெற்றுத் தன் முன் நிற்கும் அழகியை நோக்கிச் சொன்னான். "சேவற் கொடியோன், முருகனை என் மனக் கண்ணால் கண்டேன். இசைக்குயிலின் இன்னிசையை என் செவிகளால் கேட்டேன். மெய்ம் மறந்தேன். உணர்ச்சி ததும்பப் பாடினாய். என்னைப் போன்ற கல் நெஞ்சர்களையும் இளக வைக்கும் இனிமையுடன் பாடினாய். பாடல்களை இயற்றும் ஆசிரியர்கள் தாங்கள் இயற்றிய பாடல்களைப் பாடவேண்டும் என்னும் நோக்குடனேயே இயற்றியிருக்கிறார்கள். அம் முறைப்படி பார்த்தால்......" என்று மேலும் பேசிக் கொண்டிருக்கையில் கண்ணம்மா இடைமறித்து, "போதுமே! உன் புகழ் மாலை. நையாண்டி பண்ணிப் பேசுவதற்குப் புகழுரை என்று பொருள்" என்றாள்.

"உள்ளதைச் சொன்னால் சிலருக்கு உள்ளம் பூரிப்பதில்லை. அது போகட்டும். இன்று முதற் கொண்டு நீ நாள் தோறும் முருகனின் புகழ் மாலையை எனக்குப் பாடவேண்டும். புரிந்ததோ?"

"நன்றாகப் புரிந்தது. நீ எதை விரும்புகிறாயோ, அதை இன்றும், என்றும் செய்வேன். நின் மகிழ்ச்சியே என் மகிழ்ச்சி" என்று சொல்லித் தன் அன்பனைச் சமயலறைக்கு இட்டுச் சென்றாள்.

இவ்விரு அன்றில் பறவைகளும் நாளும் ஆங்கிலக் கல்வியிலும் இசைப்பயிற்சியிலும் மெய்ம் மறந்து தங்கள் காலத்தை இனிது கழித்து வந்தனர். எந்தக் கலையையும் எளிதில் கற்கவல்ல நடராசன் விரைவில் இசைக் கலையை கண்ணம்மாவிட மிருந்து கற்றுக் கொண்டான். இசை வெள்ளத்திலே தேங்கித் திளைத்த அவனது உள்ளம் இசை அருவி நிறைந்த பள்ளம் ஆயிற்று. கலைக்காட்டிலே இருவரும் அழகிய மலர்களைக் கொய்து பல்வகை மணங்களைத் துய்த்துக் கொண்டிருந்தனர்.

ஒரு அழகான அந்தி வேளை. அழகிய தன் கூந்தலைக் கோதி உலர்த்தும் பொருட்டுக் கண்ணம்மா மேன் மாடிக்குச் சென்றாள். இடுப்பு வரை நீண்ட அவளது கருங்கூந்தல் ஒரு புத்தழகைப் பரப்பிக் கொண்டிருந்தது. அங்குமிங்கும் ஒய்யாரமாக அவள் நடந்துகொண்டே கூந்தலைக் கோதி முடிகையில் தங்கள் காரியமும் முடிந்து விட்டதெனச் சொல்வது போல் மாலை வெயில் மெல்ல மெல்ல மறைந்தது. மாலை வெயிலுக்கு வழி அனுப்புக் கூற வந்தாற்போல் வெண்ணிலா கீழ்வானில் விரிந்தெழுந்தது. பால் நிலா வெள்ளம் உலகை இரண்டற அணைத்துக் கெண்டது. பனிக்கால முன் இரவாதலால், இவ்வுலகமே ஒரு இன்ப கனவில் ஈடுபட்டு இருப்பது போலவும், அக்கனவுக்குத் தனி ஒளியைத் தீட்டும் கட்டழகி போன்றும் கண்ணம்மா மெய்ம்மறந்து நின்றாள். அந்த வியத்தகு காட்சியைக் கண்டுதான், பெய்யும் பனி, உள்ளம் உருகிப் பரந்த வெளியிலெங்கும் முத்துக்களைத் தெளித்தது போலும்!

மெல்லிய தென்றலோசை தவிர வேறோசை இல்லை. அந்த ஒலி இன்மையைக் கலைப்பது போல் மெல்லக்

கண்ணம்மா தனக்குள்ளே பாடிக்கொண்டிருந்தாள், அவள் ஒய்யார நடையையும், உயர்ந்த தோற்றத்தையும், எழுச்சி நிறைந்த குரலினிமையையும், கம்பரேனும், காளிதாசரேனும் கண்டிருந்திருப்பார்களேயானல் கண்ணம்மாவைத் தம் காவியத் தலைவிகளைவிட பலபடி உயர்த்தியே சிறப்பித்துத் தங்கள் கவிக் கடலின் கற்பனை ஊற்றிலே குளிப்பித்திருப்பார்கள்.

தற்செயலாய் மேன்மாடிக்கு உலாவச் சென்ற நடராசன் ஓரிடத்தில் கண்ணம்மா தன்னைக் கவனியா வண்ணம் மறைந்து நின்று, அவளின் அழகையும், இசை இன்பத்தையும் பருகிக்கொண்டிருந்தான். இதை அறிந்த கண்ணம்மா மெதுவாக அருகே வந்து, "மான் போல் மருண்டு, மறைவாய் நிற்பதின் காரணம் என்னவோ" என்ருள்.

"பருகப் பருகத் தெவிட்டாத தெள்ளமுத ஊற்றை வறண்ட நாவினன் உற்று நோக்குவதும் குற்றமா? மீன் நிறைந்த வானத்தை யாரும் பார்க்கலாகாதெனத் தடையும் உண்டோ?"

"அப்பப்பா! கேட்டுக் கேட்டுச் சலித்துப் போயிற்றே! உன் புகழ்மாலை போதும், அண்ணு. ஒரே ஒரு செய்தி; பல நாளாக உள்ளத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கும் ஒன்றைக் குறித்து உன் கருத்தினை அறிய ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தேன். இன்று தான் அதற்கேற்ற வாய்ப்பு வந்தது. முதலாவது என்னுடைய கேள்வி உனக்குப் பிடிக்காமலிருந்தால் அதற்காக என் மேல் தப்பான கருத்தையோ, அல்லது மனத் தாங்கலையோ நீ கொள்ளக்கூடா தென்பது. இரண்டாவதாக

'உள்ளொன்று வைத்துப் புறமொன்று' பேசுவாரைப் போல், பயங்கொள்ளித் தனமான பதிலை, என்னை மகிழ் விப்பதின் பொருட்டும் சொல்லக்கூடாது. மூன்றாவது நான் கேட்கும் கேள்விக்கு விடை இன்றே, இப் பொழுதே, இதே இடத்தில் அரை நாழிகைக்குள் சொல்லியாக வேண்டும். என்ன தெரிந்ததா?'' என்று கேட்டாள்.

"வயது வந்தது முதற் கொண்டு நான் பல சொற் பொழிவுகளைப் பேசுவதையே தொழிலாகக் கொண்டவர் களிடம் கேட்டிருக்கிறேன், ஆனால் பேசும் திறமை மிக்கவள் நீ ஒருத்தி இருக்கிறாய் என்பதை இன்றுதான் அறிந்து கொண்டேன், நன்று. அடிப்படை பலமா இருக் கிறதே. பதிலளித்தலே கடினம் போல் தோன்றுகிறது. எப்படித்தான் பதில் சொல்லப் போகிறேனோ?''

"அண்ணா! ஏது மறியாதவன் போல் பேசி என்னை ஏமாற்ற முடியாது. கேள்விக்குப் பதில் வேண்டும்.''

"சரி, உன் விருப்பம்'' என்று ஒன்று மறியாப் பார்வையுடன் ஒப்புக் கொண்டான்.

"நாமிருவரும் கடந்த பல ஆண்டுகளாக ஒரே வீட்டில் உடன் பிறந்தார் போன்று வாழ்ந்து மிக நெருங் கிப் பழகி வருகிறோமென்பது அறிந்த உண்மை. சின்னஞ் சிறு வயதில் குழந்தைகளாக இளமை விளையாடல்களில் பற்றுதல் கொண்டோம். அத்துடன் நம் வாழ்க்கையில் ஒரு பகுதி முடிவடைந்தது.

இரண்டாம் பகுதியில், நீ கல்வியின் பொருட்டு என்னை விட்டகன்று ஈரோடு சென்றாய். இனிமேல் நான்

பேசுவது என்னைக் குறித்தது. அதற்குத்தான் நீ உன் எண்ணத்தைத் தெரிவிக்க வேண்டும். நான் மங்கைப் பருவம் எய்தியது முதல் அப்பா கல்வி கேள்விகளிலும் இசைப்பயிற்சியிலும் நான் தேர்ச்சி பெறும் பொருட்டு வேண்டியவைகளைச் செய்தார். எல்லா வகையிலும் மகிழ்ச்சியுடனும் நிறைவுடனுமிருந்த நான் ஒரு செய்தியில் மிகக் கவலையுடையவளாகவே இருந்தேன். அதாவது சிறு வயதில் உன்னை உடன் பிறந்தவனாக எண்ணிய நான் மங்கையானவுடன் என் காதலனாய், என் வாழ்க்கைத் துணைவனாய் நினைக்கத் தொடங்கி விட்டேன். குற்றம் என்னுடையதன்று. ஏனெனில் அருமைக் குணங்கள் படைத்த உன்னைப் போன்றவர்களை என்னைப் போன்ற இளம் கன்னிகள் காதலிப்பது இயற்கை. சில பெண்கள் தங்கள் உள்ளக் கருத்தை இத்தகைய நிலைகளில் வெளியிடாமல் ஊமைகளாக இருக்கின்றனர். குற்றம் இவ்வூமைப் பெண்களிடமன்று. நமது சமூகக் கட்டுப்பாடுகளால் ஏற்படும் கொடுமைகள் பலவற்றுள் இளமைத் திருமணமும் கட்டாயத் திருமணமும் முதன்மை இடம் பெற்றிருக்கின்றன. சமூக சீர்திருத்தம் செய்வோருக்கு இதனை நாம் விட்டு விடுவோம்.

நான் உன்னை என் மனமாரக் காதலித்து விட்டேன். நீ என் காதலை மறுத்தால் எனக்கு இனிமேற்கொண்டு புதிய காதல் ஏற்படப் போவதில்லை.! திருமணமாகாக் கன்னியாக இருந்து இறப்பதென்ற உறுதியான முடிவுக்குப் பல நாட்களுக்குமுன்பே வந்து விட்டேன். உன் கருத்தினை இப்பொழுது நீ தடை இன்றித் தெரிவிக்கலாம். நான் இருப்பதா, இறப்பதா என்பது நீ கூறும் பதிலில் இருக்கிறது.''

"நான் சற்றும் எதிர்பாராததும் எண்ணுதற்கிடமானதுமான ஒரு பெரிய கேள்வியைக் கேட்டு அதற்கு இப்பொழுதே பதிலும் கேட்கிருய். நானும் என் அருமைத் தாயும் எங்கள் சொத்துக்களை யெல்லாம் இழந்து அன்னக்காவடிகளாய் உங்கள் வீட்டில் அடைக்கலம் புகுந்தோம் என்பது உனக்குத் தெரியாமலிருக்கலாம் என்று இப்பொழுது நான் ஊகிக்கிறேன். எங்களுக்குப் புகலிடம் கொடுத்த உன் அருமைத் தந்தை எனக்கும் தந்தையாவார். சிறு வயது முதற்கொண்டு ஒன்ருய் வாழ்ந்து, விளையாடி வந்த நம் இருவரையும் எல்லோரும் உடன் பிறந்தவர்களாகவே எண்ணி வருகின்றனர். என் விருப்பமும் நாம் அவ்வாறே என்றும் இருக்க வேண்டுமென்பதே. ஒரு தாய் வயிற்றில் பிறந்தால்தாஞ உடன் பிறப்பு என்பது?"

மேலும் உன் தாய் தந்தைக்கும் செய்தியை அறிவிக்காமலும், அவர்கள் விருப்பத்தையும் ஆசியையும் பெருமலும் கள்ளத்தனமாக நாம் ஏதேனும் சிறு பிள்ளைத்தனமாகச் செய்து கொள்ள நான் முற்படின் என்னை நன்றி கெட்ட நாய் என்று இவ்வுலகம் பழிக்கும். மிகவிரைவாய்த் திருமணம் செய்து கொண்டு பின்பு திராச் சங்கடங்களில் மாட்டிக் கொள்ளும் மரபினர்களின் கூட்டத்தில் நாம் தலைமை இடத்தைப் பெற வேண்டியதாயிருக்கும். என்மேலுள்ள அன்பினுல் என்னை இந்திரனென்றும், சந்திரனென்றும், மனம் போனபடி எல்லாம் பேசுகிருய். தயவு செய்து, என் மேல் உண்மை அன்பு கூர்ந்து, இன்று முதற்கொண்டு, நாமிருவரும் காதலர்களாக வாழ்வது முடியாத செயல் என்ற முடிவிற்கு வரும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

நீ உன் மனதிலுள்ளவற்றை மறைவின்றித் தெரிவித்ததையும், நம் சமூகத் தொடர்பான நின் கருத்துக்களையும் மிகவும் பாராட்டுகிறேன். உன்னிடமிருந்து இன்றிரவு நான் கற்றுக் கொண்ட சில அருமையான செய்திகளுக்கு என் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்!'' என்று தன்பதிலைத் தெரிவித்தான்.

''என் முடிவினை உன் பேச்சுப் போக்கின்படி மாற்றிக்கொள்ள முடியாது. நீ எடுத்துக் காட்டிய செய்திகள் எல்லாம் எனக்குப் புதியவை யல்ல. நமது திருமணத்தால்,ஏற்படும் நன்மை தீமைகளை யெல்லாம் சீர்தூக்கிப் பார்த்தே ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். என் பெற்றோர் விருப்பத்தினைப் பெற்றுக் கொள்ள எனக்கு வழி தெரியும். சீராட்டிப் பாராட்டி, ஊட்டிவளர்த்த பெற்றோர்களை உதறித்தள்ளும் கொள்கை என்னிடம் இல்லை. என்னை மனைவியாக அடைவதில் உனக்கு விருப்பமா, இல்லையா என்பதுதான் இப்போதைய வினா. அதற்கு நீ தக்க பதிலளித்தால் மேற்கொண்டு செய்திகளைச் சிராக நடத்திவைக்கக் கடமைப் பட்டவள் நான் என்பதை நீ உறுதியாக நம்பலாம். எவ் வழியாலும் நினக்குத் தொல்லையும் துன்பமும் இன்றி நம் திருமணத்தினை முடித்துவைப்பது என் கடமை. இப்பொழுதேனும் நன்று என்று ஏற்றுக்கொள்ள முடியுமல்லவா?'' என்று தன்னிரு கண்களிலும் நீர் ததும்பக் கூறினாள்.

பெண்களின் உணர்ச்சிப் போக்கினைத் தெளிவாக அறியாத நடராசன் விளக்கொளியில் விழுந்த விட்டில் பூச்சிபோல் வேதனையில் அழுந்தினான். நெடிது நினைத்துப் பார்த்தான். பின்பு ''நன்று உன் விருப்பம்போல் எது வேண்டுமானாலும் செய்துகொள்'' என்று கண்ணம்மாவிடம் தன் முடிவினைத் தெரிவித்தான்.

"விதி வழியால் செல்வச் சிறப்பை இழந்த என் மாமன் நீர், கலைமகளின் அருளால் கல்விச் செல்வத்துடன் சிறந்து வாழ்கிறீர். அழியும் செல்வத்தை இழந்து அழியாச் செல்வத்தை எய்தினீர். காதலும், செல்வமும் பழம் பகைகள் அல்ல என்று காட்டவும் போகிறீர். அன்புள்ள மாமா! எனக்கு வேறென்ன வேண்டும்? உமது நிலைத்த அன்பு என்றும் வேண்டும் என்பதே என் வேண்டுகோள்" என்று மகிழ்ச்சியுடன் கூறினாள்.

"நீ ஆண்டில் இளையவளாயினும் அறிவில் பெரியவள். என் இன்னுயிர்க் காதல் இன்றுமுதல் உன்னிடம் அடிமைப் பட்டுவிட்டது" என்று ஒருவாறு சொல்லி முடித்தான். அதற்குமேல் அவனால் பேச முடியவில்லை.

உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பேது

தருமசாமிக் கவுண்டரும் அவரது மனைவி திலகக்காளும், தம் மகள் கண்ணம்மாவுடனும், அடைக்கலம் புகுந்த வள்ளியக்காள், நடராசனுடனும் குடும்ப பாரத்தை யாதொரு இடுக்கணுமின்றி மகிழ்ச்சியுடன் நடத்தி வந்தனர். கவுண்டர் அவர்கள் தாம் குறைந்த விலைக்கு வாங்கிய நிலபுலன்களை ஏறிய விலைக்கு விற்று, வந்த தொகையில் சாகுபடி செய்ய முடியாது என்று ஏனையோர் தள்ளுபடி செய்த அக்கம் பக்கத்திலுள்ள புன்செய் நிலங்களை யெல்லாம் மிகக் குறைந்த விலைக்கு வாங்கித் தமதாக்கிக் கொண்டார்.

இத்தகைய புன்செய் நிலங்களைத் தம் திறமையாலும், பயிற்சி முயற்சியாலும் மிகச் சிறிய பொருட் செலவில் நன்செய் நிலங்களாக மாற்றினர். வேண்டும் காலங்களில் வள்ளலைக் காப்பாற்றும் பொருட்டு மேகமும் பொழிந்தது. நல்வினை செய்தோர் நன்மையையே அறுவடை செய்வர். தம்மைப்போல் பிறரையும் நினைக்கும் ஒப்பற்ற குணம் வாய்ந்த கவுண்டர், பொருளில்லாமல் துன்பப்பட்டுத் தவிக்கும் தம் உடன் உழவர்களுக்குத் தம்மாலான பொருளுதவியைக் கைம்மாறு கருதாமல் செய்து வந்தார். பண்டங்கள் இல்லாமல் வருந்தியோருக்குத் தம் பண்டங்களை விலை இன்றிக் கொடுத்து உதவினர்.

தம் ஊரிலும், சுற்றுப்புற ஊர்களிலுமுள்ள தம்மை ஒத்த உழுவோருக்கு உதவாக் கரை பூமிகள் என்று ஒதுக்கப்பட்ட இடங்களைப் பயன் படும் நிலங்களாக

மாற்றிக் கொள்ளும் வகைகளைக் கற்றுக் கொடுத்தார். இயற்கை அன்னை நம் நன்மைக்கென ஒப்புவித்திருக்கும் இப்பரந்த வெளியை நன்செய், புன்செய் என்று பாகு படுத்தி நிலங்களை ஒதுக்கி வைக்கவில்லை. நன்செய் புன் செய் என்னும் இரு சொற்களும் பொருள் இல்லாதவை.

சோம்பேறிகளாகவும், தான்தோன்றிகளாகவும், வாழ்க்கையிலே வெறுப்புற்றவர்களாகவும் திரியும் இளைஞர்களைத் தம் பக்கத்தில் இருத்தி, உழுது உண்டு வாழ்வதன் பெருமையைக் கற்பித்தார் கவுண்டர். இவ் விளைஞர்களுக்கு உண்ண உண்ணவும் தங்க இடமும் அளித்து, உழுது பயிர் செய்யும் முறையைக் கற்றுக் கொடுத்தார். இவ்வாறு, சோம்பேறிகளைச் சுறு சுறுப் புள்ளவர்களாகவும், வாழ்க்கையில் வெறுப்புற்றவர்களை, விருப்பமுள்ளவர்களாகவும் மாற்றினார். வேலையில்லாமல் திண்டாடி, வயிற்றுப் பிழைப்பின் பொருட்டுக் கொலை, களவு செய்யும் கொடியர்களை, எல்லோரும் வியக்குமாறு சிறந்த மக்களாக மாற்றினார். விடுமுறைக் காலங்களில், ஆசிரியர்களையும், கல்வி பயிலும் மாணவர்களையும் தம் நிலங்களுக்கு அழைத்துச் சென்று, வாழ்க்கைக்கு இன்றி யமையாததும், இனிது வாழ வழிகாட்டக் கூடியதுமான உழுதுண்டு வாழ்தல் எவ்வாறு என்னும் சிறந்த உண் மையைப் புகட்டினார்.

இங்ஙனம் சுயநலமற்ற செய்கைகளால் தருமசாமிக் கவுண்டர், தம் ஊரிலும், பக்கத்து ஊர்களிலும் வாழ்ந்த வர்களின் நன் மதிப்பையும், அன்பையும் பெற்றுத் தமக்கு யாதொரு பகையுமின்றி வாழ்ந்துவந்தார். கவுண்டர் காலால் இட்ட வேலையை தலைமேற்கொண்டு செய்வதற்கு ஆண்பெண்கள் அனைவரும் காத்துக்

கொண்டிருந்தனர். 'உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை' என்னும் உறுதி மொழியைத் தாம் கற்றுக் கொள்ளத் தூண்டுகோலாயிருந்த கவுண்டரை மக்கள் மனமார வாழ்த்தினர்.

கவுண்டரின் நற்செயல்கள் நாலா மூலைகளுக்கும் எட்டவே, சேலம் மாவட்டத்திலுள்ள ஒரு சிறந்த நிலக்கிழார், பி. ஏ., பட்டம் பெற்ற தம் மகனுக்குக் கவுண்டரின் மகள் கண்ணம்மாவைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று விரும்பிக் கவுண்டருக்குக் கடிதம் எழுதியிருந்தார். கவுண்டர் இச் செய்தியைத் தம் மனைவிக்கும் மகளுக்கும் தெரிவித்து அவர்கள் விருப்பத்தைக் கேட்டார். தாயார் இணங்கவும், மகள் மறுக்கவும் திருமணத்தைத் தற்போது நடத்துவதாக இல்லையென்று நிலக்கிழாருக்குப் பதில் எழுதிவிட்டார். இதே காலத்தில் நடராசனுக்குத் தம் முயற்சியின்மேல் திருச்சிராப்பள்ளியிலுள்ள எஸ். பி. ஜி. கல்லூரியில் இண்டர் மீடியேட் வகுப்பில் படிப்பதற்கு இடம் கிடைத்து விட்டதாக ஹெக்டர் துரையவர்கள் கவுண்டருக்கு எழுதிய கடிதமும் வந்து சேர்ந்தது.

உமை நாடி ஒரு மடந்தை

மாமன் நடராசன் மறுபடியும் மேல் படிப்பிற்காக திருச்சிராப்பள்ளிக்கு மறு நாள் போக வேண்டும் என்ற செய்தியைக் கேட்டதும் கண்ணம்மா சிறிதளவு வருந்திய போதிலும், எதிர்காலக் கணவனின் முன்னேற்றத்தில் மிகப் பற்றுக் கொண்டவளாய்ச் சிறிது காலப் பிரிவாற்றுமையை எவ்வாறேனும் பொறுத்துக் கொள்வதென்று முடிவு செய்து கொண்டாள். மற்றெல்லோரைக் காட்டிலும் தானே மிகக் கருத்துடன் நடராசனுக்கு வேண்டிய ஆடைகளையெல்லாம் துவைத்த, உலரவைத்துப் பெட்டிகளில் ஒழுங்காக அடுக்கி வைப்பதில் முன்னணியில் நின்ருள்.

இயற்கையாகத் தங்கள் குழந்தை கண்ணம்மாளும் நடராசனும் இளமை தொட்டு ஒன்ருய்க் கூடிப் பழகி எச்செயலையும் செய்வதை அறிந்த 'பெற்றோர்கள் அண்மையில் இவ்விரு உள்ளங்களும் ஒன்ருய்க் கலந்த நிலைமையில் உண்டான மாறுதல்களைக் கருத்துற அறியாதவர்களாயினர். தங்கள் தவக்குழந்தை எந்நிகழ்ச்சியிலேனும் தாறுமாருகவோ, தங்கள் இருதயத்திற்கு வேருகவோ இதற்கு முன் நடந்திருந்தாலன்ரே ஐயங்களுக்கு இடமேற்பட்டிருக்கும்? எனவே நடராசன் கண்ணம்மா திருமண உடன்படிக்கை எவராலும் அறியப்படாது இருவரின் உள்ளங்களாகிய இரும்புப் பெட்டியில் இட்டுப்பூட்டிய உயரிய ஒளிக்கல்லாகத் திகழ்ந்தது.

வெளியில் சென்றுவந்து நடராசனைத் தன்னை மேன் மாடியில் அன்றிரவு சந்திக்குமாறு சைகை செய்து

விட்டுக் கண்ணம்மா தன் வீட்டுக் கருகாமையிலுள்ள பிள்ளையார் கோயிலுக்குச் சென்று, இறைவனைத்தான் எண்ணிய கருமத்தை இனிதே நிறைவேற்றிக் கொடுக்கு மாறு வேண்டிக் கொண்டாள். மங்கையின் மனக்கருத்து நிறைவேறும் காலம் நெருங்கி விட்டதென்று ஆண்டவன் வாழ்த்துவதற்குப் பதிலாய், அக்கோயிலில் அங்குமிங்கு மோடி விளையாடிக் கொண்டிருந்த எலிக்குட்டி ஒன்று கீச் கீச் சென்று ஒலித்து மங்கையை மகிழ்வித்து அனுப்பியது.

அன்றிரவு தருமசாமிக்கவுண்டர் தம் இல்லத்தில் சில நெருங்கிய நண்பர்களுக்கு அறுசுவை விருந்தளித்தார். விருந்துக்கு வந்த விருந்தினர் நடராசனின் மேலான நுண்ணறிவையும், சிறந்த தோற்றத்தையும் மிகவும் பாராட்டிப் பேசினர். கவுண்டர் வீட்டாருக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

நாள் முழுதும் விருந்திற்கு வேலை செய்த அலுப்பால், விட்டிலுள்ள யாவரும், உறக்கம் நாடினர். நடராசனும் கண்ணம்மாளும் மாடிமேல் சந்தித்தனர். மட்டற்ற மகிழ்ச்சியால் இருவரின் நெஞ்சமும் கட்டுக் கடங்காத இன்பக்கிளர்ச்சி அடைந்தது. ஒரு கணம் கழிந்தது. நாணத்துடன் ஒரு பக்கத்தில் எட்டிநின்ற கண்ணம்மாவை நோக்கி நடராசன் "கண்ணம்மா! என்ன செய்தி?" என்று கனிவாகக் கேட்டான். "அத்தான்! யாரோ, சேலத்திலுள்ள ஒரு சிறந்த நிலத்தினராம். அவர் அப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதைப் பற்றிய தகவல் உங்களுக் கேதேனும் தெரியுமோ?"

"அப்படியா கண்ணா!, எனக்கு ஒன்றும் தெரியாதே! நீ சொல்வது இன்னதென்றே எனக்குப் புரியவில்லையே" என்று திடுக்கிட்டவனாய்ச் சொன்னான்.

"நான் உம்மை ஏமாந்தவர் என்று நினைப்பேனென்று நீங்கள் பாசாங்கு செய்தீர்களா? செய்தி இதுதான். சேலத்தில் யாரோ ஒரு பெரிய ஜமீன்தாராம். அவர் மகன் பல கலை வல்லவனும்; பி. ஏ. படித்தவனும்; அழகில் மன்மதனும்; உண்மை நெறியில் அரிச்சந்திரனும்; ஈகையில் கர்ணனும்! செல்வத்தில் குபேரனும்! இன்னும் இதைவிட எவ்வளவோ மேலான பண்புகள் பெற்றவனும்; நேரில் ஒரு முறை பார்த்தால் எல்லாம் புரியுமாம். இத்தகைய தன்மைகள் படைத்த தம் புதல்வருக்கு என்னைத் திருமணம் செய்து கொடுப்பதற்கு என் தந்தைக்கு விருப்பம் இருப்பின் உடனே பதில் எழுதும்படி கேட்டிருக்கிறார். இவ்வளவே கடிதத்தில் கண்டுள்ள செய்தி."

"கண்ணா, கடுதாசியில் கண்டுள்ள செய்தியை உன் வாயால் கேட்கக் கேட்க எனக்குப் பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது. உன் தகுதிக்கும் அறிவு விளக்கத்திற்கும் ஏற்றவன். உன் பெற்றோர்களும் நீயும் முன்பின் நினையாமல் தொடர்பிற்கு ஏற்பாடு கொடுக்கத்தக்க இடம். அன்றொருநாள் அந்தி வேளையில் இதே மாடத்தில் நம்மிருவருக்கும் நடந்த உடன் படிக்கையைப்பற்றி நீ சற்றேனும் கவலைக் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் நீ இத்தகைய மணமகனை அடைந்து, மகிழ்வதைப் பார்ப்பதே நான் அடையும் இன்பங்களிலெல்லாம், பதவிகளிலெல்லாம் மேலானது. ஆகையால்......" என்று மேலும் பேச முற்படுகையில், கண்ணம்மா இடைமறித்

துச் "சற்று பொறுங்கள். நடந்ததை முழுவதும் கேட்காமல் எனக்கேற்றவன், என் தந்தைக்கேற்ற மருமகனென்றெல்லாம் மேலும் மேலும் அடுக்கிக் கொண்டே போகிறீர்களே! ஜமீன்தார் மகனுடைய உயரிய பண்புகள் எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை என்று அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சொல்லிவிட்டேன். அப்பாவும் தற்பொழுது என் திருமணத்தைக் குறித்து எண்ணுவதற்கில்லை என்று பதில் எழுதிவிட்டார். ஆகையால் ஜமீன்தார் மகனும், நானும் கணவனும் மனைவியுமாக வாழ்வதைப் பார்த்து நீங்கள் மகிழ இருப்பதற்கு ஒரு பெரிய முற்றுப் புள்ளி போட்டு விடுங்கள்" என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லி மேற்கொண்டு இதனைப்பற்றியே நடராசன் பேசாமலிருக்குமாறு செய்து விட்டாள்.

"கண்களிரண்டையும் வேண்டுமென்றே இறுக மூடிக்கொண்டு, கிணற்றில் விழ முற்படும் பெண்களுக்கு" என்று சொல்லி முடிக்குமுன், கண்ணம்மா சிரித்துக் கொண்டே "ஆண்டவன் அருள்புரிந்து கிணற்றைத்தாவிக் குதிக்கச் செய்வான். விழும்பொழுது நீங்கள் உதவி செய்தால் என் நன்றியறிதலை உமக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது கிடைத்தற்கரிய இக்காலத்தை மகிழ்ச்சியாகக் களிப்போம். எனக்கு ஒன்று தோன்றுகிறது. நீங்கள் ஒருபதம் பைரவிப்பண்ணில் பாடுங்கள். நான் அபிநயம்பிடிக்கிறேன்" என்று சொன்னாள்.

நடராசனுக்கு உண்டான மனக் குழப்பத்தில் பைரவி பாடுவதிலும், அபிநயத்தை அனுபவிப்பதிலும் சிந்தை சிறிதளவேனும் செல்லவில்லை. பெருமயக்கம்

கொண்டவன்போல் அசையாமல் இருந்தான். கண்ணம்மா சேலம் செய்தியை நடராசனிடம் கூறியதே தவறு என்று தன்னை நொந்துகொண்டாள். அவனுக்கு ஆறுதல் அளிக்கும் பொருட்டு, "என தன்புள்ள மாமனே! உமை நாடி ஒரு மடந்தை நடுநிசியில் காத்திருக்க நீர் மனம் சோர்வதென்ன" என்ற தன் சொந்தப்பாடலைப் பாடிக்கொண்டே அபிநயம் செய்யத் தொடங்கிவிட்டாள். மெய்ப்பாடு செவ்வனே அமையப் பெற்ற பாடலைக் கண்ணம்மாவின் இதழ்கள் அள்ளி அள்ளிக் கொட்டின. . பாடலுக்கேற்ற மெய்ப்பாடு, இடத்திற்கேற்ற இன்னிசை!

ஆட்டத்திலும் பாட்டிலும் சிறிது சிறிதாகத் தன் கருத்தைச் செலுத்திய நடராசன், ஜமீன்தார் மகன் மணத்தை மறந்தான். நாட்டியம் என்னும் இன்பக் கடலில் மூழ்கினன். நெஞ்சை நெகிழச் செய்யும் ஆடல் அவனைப் பித்தனுக்கியது. உள்ளத்தை அந்த இன்ப உலகில் பறக்க விட்டான். அவன் மனமும் இன்பக் கூத்தாடுகையில் "கண்ணம்மா, தெரியாத்தனமாக நான் சற்று முன் நடந்து கொண்டதை நீ மறந்துவிட வேண்டும். மனக்கவலையற்ற காலங்களிலெல்லாம், என் மனதை மாற்றி இன்பமளிக்கும் இனிய கருவி உன் கையில் இருக்கிறது! அம்மருந்து அருமருந்துகளில் ஒன்ருகிய இசை மருந்து. நான் நாளை திருச்சிக்குச் சென்ருல் சில திங்கள்களுக்கு உன் திருமுகத்தையும், தித்திக்கும் தேனிசையையும் பார்த்து பருக முடியாதென்பதை நினைக்க எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. நான் இவ்விரண்டையும் காணுமல் வெளியூரில் இருப்பதெப்படி?" என்ருன்.

"என்னை மறந்து கல்வியில் கருத்தை செலுத்தி, தேர்தலில் தேறி, வெற்றியுடன் திரும்பி வரும்பொழுது, நீங்கள் குறித்த அமுதங்கள் இரண்டையும், இரட்டிப் பான தித்திப்புடன் நாள் தோறும் பருகலாம். ஆனால் என் பாட்டை நினைத்துப் பாடத்தை வெறுத்தால் கண் ணம்மா மட்டுமல்ல கலைமகளும் விலகிக் கொள்வாள். ஆகையால் மனக்கவலையை ஒழித்து மகிழ்வுடன் போய் வாருங்கள்" என்றாள் கண்ணம்மா.

கீழ்வானில் இளம்பரிதியின் இளங்கதிர்கள் தோன்ற ஈரிளம் உள்ளங்களும் பிரியாமல் பிரிந்து அப் புறம் சென்றன.

கிட்டாதாயின் வெட்டென மற

மறுநாள் நடராசன் அதிகாலையில் எழுந்து, தன் வேலைகளை யெல்லாம் முடித்துக்கொண்டு வெளியூர்ச் செலவுக்கு ஆவனவற்றைச் செய்தான். கண்ணம்மாவின் விருப்பத்தின் வழி அவள் தாயார் செப்பமாக அமைத்த சிற்றுண்டிகளைச் சிறு மூட்டையாகக் கட்டி வைத்தனள். தன் தாயாரும் திலகக்காளும் செய்து வைத்த சிற்றுண்டிகளைக் கண்ணம்மா பரிவுடன் பரிமாற இன்பமுடன் உண்டு எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு நடராசன் ஈரோட்டுக்குப் புறப்பட்டான்.

களிப்புடன்தான் கண்ணம்மா வழியனுப்பினாள். ஆனாலும் அவள் உள்ளம் மெல்ல மெல்லத் துயரக் கடலில் மூழ்கிற்று. கொந்தளிப்பு அலைகளும் குமுறல்களும் தாங்கமுடியவில்லை. துன்ப அலைகளைத் தாங்காது உள்ளமாகிய கரை மெல்ல மெல்ல இடிந்தது. தனக்கு அமைதி அளிப்பது இன்னதென்றே அவளுக்குத் தெரியவில்லை. எங்குப் போனாலும் அமைதி இல்லை. காணுமிடங்களிலெல்லாம் நடராசன் சாயலாகவே தோன்றியது. கோவிலுக்குப் போய், அங்குள்ள வேப்பமர நிழலில் தன்னை மறந்து இருப்பதிலே நிறைவைக் கண்டாள். பொதுவாக மக்கள் துன்புறும்போது இறைவனை மறந்து விடுவதைக் காண்கிறோம். ஆனால் கண்ணம்மா அந்த இனத்தைச் சேர்ந்தவள் அல்லள். தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகமென எண்ணுபவள். தனக்கு உள்ளக் குளிர்வைத் தந்த கோயில் மற்றவர்களுக்கும் அந்த மகிழ்ச்சியைத் தரும் என்று நம்பினாள். தன் தோழியருக்கும் இதை நன்கு உணர்த்தினாள்.

ஒரு நாள் தருமசாமிக் கவுண்டர் தங்கை செல்லக்காள் அத்தி பூத்தது போல் அண்ணன் வீடு தேடித் தன் மைந்தன் திரிபுரசுந்தரனுடன் வந்து சேர்ந்தாள்.

தன்னலத்தைத் தவிர வேறு நலம் கருதாத செல்லக்காள் தன் வீட்டை விட்டகன்ற அரைக்கணமும் பிறர் வீட்டிற்குக் காரணமின்றிச் செல்ல மாட்டாள். தங்கை செல்லக்காளின் தன்மைகளை நன்கறிந்த கவுண்டர் தங்கையின் வருகை கேட்டிற்கு அறிகுறி என்று நினைக்கலானார். என்றாலும் தங்கையைப் பெருமையாக வரவேற்று முகமன் கூறி, "ஏது இன்று தம்பியுடன் புறப்பட்டு விட்டாய்? உன் வீட்டுக்காரருக்கு உடம்பு நலமில்லையென்று கேள்விப் பட்டேன், இப்போது எப்படி இருக்கிறது?" என்றார். "அவுங்களுக்கென்ன! எல்லாம் நல்லாத்தான் இருக்கிறது. அவுங்க கூடவே பிறந்த வியாதி அவுங்களை விட்டு எங்கே போகும்? சதா பண்டிதமும் பத்தியச் சோறும்தானே நாங்க கண்டது" என்றாள் செல்லக்காள். "ஏன் தாயி! இந்தப்பக்கம் எட்டிப் பாக்கறதே இல்லே! நாலில் ஒரு நாள் இங்கே வந்து நான் செத்தனா இருக்கிறேனான்னு பார்க்கிறது தானே?" என்றார் கவுண்டர்.

"உன்னைப்போல எனக்கு ஆள் அம்பு ஒத்தாசையா? ஏதோ நானும் வீட்டுக்காரரும் சேர்ந்து துன்பப்பட்டால் தானே அரை வயித்துக் கஞ்சியாவது குடிக்கலாம். வெள்ளாமை வெளச்சல் அறுவடைக் காலம். வேலையே தீரதில்லே. அண்ணக்காரன் சொத்தைத் திங்க எல்லாரையும் போல எனக்கு குடுத்து வச்சிருக்குதா? உம்! பாழாப்போன கடவுள் என்னைப் போட்டு பாடையிலே போண்ணு படைச்சிட்டான்" என்று வேண்டுமென்றே

தனக்கு இல்லாத பொல்லாதவற்றை யெல்லாம் புகுப்பித்துக்கொண்டு கண்ணீர்விடத் தொடங்கி விட்டாள்.

"ஏன் தாயி! அழுறே? தம்பி சுந்திரன் வயசுக்கு வந்திட்டான். பள்ளிக்கூடத்திலும் படிக்கிறதில் லேன்னு சொல்றாங்க. ஏதோ பூமி காணியைக் கவனிக்கச் சொல்லறது தானே!" என்றார்.

"அப்படியுஞ் சொல்றாங்களா? அட கடவுளே, பொறாமையினாலே ஊர்ச்சனங்கள் நம்ம பையன் படிக்காத உதவாக்கரைன்னு சொல்றதை நீயும் நம்பரயே. அவன் பட்டணம் போய்ப் படிச்சு என்னென்னமோ வாயிலே நொழையாத வேலைக்கெல்லாம் வரோணும்னு உழுந்து உழுந்து ராத்திரிப்பகலுண்ணு பாக்காமே, சோறு தண்ணி திங்காமே படிக்கிறானே. நமக்குத்தான் படிப்பு வாசனை யில்லேன்னு அவனையும் தோட்ட வேலையிலே போடறதுக்கு நான் ஒத்துக்க மாட்டேன். சாமி, சாமி, எங்கிட்டே இந்தப் பேச்சைச் சொல்லாதிங்க" என்றாள்.

"என்ன தாயி, இந்தக்காலத்திலே பி. ஏ., எம். ஏ., படிச்ச பசங்களெல்லாம் வேலையில்லாமல், அரைவயித்துக் கஞ்சிக்கும் அல்லல்ப்பட்டு காடு கரைபாக்க வர்ராங்களாம். குடித்தனக்காரன் மகனை தாசில் வேலை செய்யப் படிக்க அனுப்பராளாம். நம்ம பையன் புத்திக்கும் படிப்புக்கும் வெகுதூரம். ஏதோ ஒரு நல்ல இடத்தில் ஒரு புள்ளையைப் பாத்துக் கல்யாணம் காச்சி பண்ணிவைச்சு உங்க காலத்துக் கப்புறம் குடித்தனத்தைப் பார்க்கச் செய்யரது தான் நல்லதுண்ணு நான் நினைக்கிறேன்" என்றார்.

"தம்பி கண்ணாலத்தைப் பத்தி உங்கிட்ட பேசத் தான் வந்தேன். ஊட்டிலே ஒரு வயசு வந்த பெண்ணை வைச்சிக்கிட்டு எங்கியோ நல்ல இடத்திலே ஒரு புள்ளை யைப் பாருண்ணு சொல்றயே! எம் புள்ளைக்கு உன் மகளைக் கட்டிக்கலாமுண்ணு உனக்கு ஒரு பொட்டப் புள்ளை பொறந்தண்ணைக்கே முடிச்சு வச்சிட்டேன். வீட் டுக்காரருக்கும் உடம்புக்கு சரியில்லே. ஏதோபையனுக்கு ஒரு கண்ணாலம் செய்து கண்குளிரப் பாத்திட்டு கண்ணை மூடிக்கலாமிண்ணு சொல்றாங்க. வர்ர தை மாசத்திலே ஒரு நல்ல நாளைப்பாரப்பா" என்று தன் மனதிலுள்ளதை அண்ணனிடம் வாய் கூசாமல் சொல்லிவிட்டாள்.

அண்ணன் தங்கைக்கு நடந்த உரையாடல் அனைத் தையும் அடுத்த அறையில் உட்கார்ந்து கேட்டுக் கொண் டிருந்த திலகக்காளும், வள்ளியக்காளும் ஒருவர் முகத்தை ஒருவர் மாறி மாறிப் பார்த்துக்கொண்டார்கள். உணர்ச்சி அற்றிருந்தனர் அவ்விருவரும்.

நல்லவேளையாக, தன் அத்தை மகன் திரிபுரசுந்தர னுடன் பின் கட்டில் நலங்களைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்த கண்ணம்மாவுக்கு இது காதில் விழவில்லை. கேட்டிருந்தால் வெள்ளைமனம் படைத்த அந்தப் பேதைப் பெண் உடனே தன் அத்தைக்குத் தக்க பதில் சுடச்சுடத் தந்திருப்பாள். திரிபுரனின் திருவிளையாடலைக் கேட்ட கண்ணம்மா குலுங்கக் குலுங்க நகைத்தாள். திரிபுரன் கதை அளப்பதில் கை தேர்ந்தவன். தான் சினிமாவில் ஒரு காமெடியனாக நடிக்க முடிவு செய்து விட்டதாகவும் தனக்குச் சரியான ஜோடி 'ஸ்திரீபார்ட்' கிடைக்காததால் சினிமாவில் சேர்வதைச் சில நாட்களுக்கு ஒத்தி வைத் திருப்பதாகவும் சொன்னான். சிரிக்காமல் அதையெல்லாம்

அவள் கேட்டுக்கொண்டே இருந்தாள். நடிப்புத் தொழில் கலைகளிற் சிறந்தது. மெய்ப்பாட்டு இன்பத் திளை நிறப்ப வல்லது என்பதனைப் படித்தறிந்த கண்ணம்மா வாய்மூடி அவன் சரடுகளுக்குச் செவிசாய்த் திருந்தாள். திரிபுரன் கண்ணை மூடிக்கொண்டே 'கயிறு' திரித்துக் கொண்டிருந்தான்!

தன் தங்கை செல்லக்காள் தன் பெண்ணைக் கலியாணம் செய்து கொடுக்கும்படி திடுமெனக் கேட்டதனுல் உண்டான அதிர்ச்சியை அடக்கிப் பதிலளிக்கச் சிறிது காலக் கழிவு ஏற்பட்டது. இல்லை யென்று உடனே சொல்லிவிடுவதா? அல்லது சாக்குப் போக்குகள் சொல்லித் தங்கை மனதிற்கு அமைதி தேடி அனுப்பி விடுவதா? மேலே கண்ட செய்திகளைக் குறித்தே எண்ணிக் கொண்டிருந்தார். கிளியை வளர்த்துப் பூனை வாயிற் கொடுக்கத் தன் தங்கையின் பொருட்டும் கூடக் கவுண்டருக்கு மனம் வரவில்லை. உரிமைப் பெண் என்ற உயரிய உறவின் பெயரால், பொருத்த மற்ற பல திருமணங்கள் நடக்கும் இக் காலத்திலும் கூட உலக அறிவு பெற்ற தருமசாமிக் கவுண்டர் இந்த ஏற்பாட்டிற்குக் கட்டுப் படாமலிருந்தார். தன் தங்கையைக் காட்டிலும் தான் கையாளும் கொள்கை பெரிதெனக் கருதினர்.

தங்கையை நோக்கித், "தாயி! என் மகள் கல்யாண யோசனையே நாங்க இன்னும் செய்யிலே. அது ஒரு பெரிய மூரடு கல்யாணப் பேச்செடுத்தாலே சீறி உளுந்து. பின்னாலே யோசனை பண்ணலாம்; நீ போய் கை கழுவிட்டுச் சோறு தின்னு" என்று சொல்லி மெதுவாக எழ ஆரம்பித்தார்.

"கொஞ்சம் உக்காரப்பா, உன் மவளுக்குத் தகுந்த அந்துசு எங்களுக்கு இல்லேண்ணு சொல்லு; எங்கிட்டே

இல்லேண்ணு சொல்றதுக்குப் பதிலாச்சாக்குப்போக்குச் சொல்லிட்டியாக்கும். செல்லக்கா லேசுண்ணு நெனைக் காதே. நான் சாகாமப் பொளச்சிருந்தா, என் மவனையும் உன் மவளையும் புருசன், பொண்டாட்டி யாக்கிப் பார்த்தே விடப்போறேன்" என்று விசுக்கென எழுந்து, தன் கோபத்தைநன்ருக உணரட்டுமென முகத்தைக் கடுர மாக வைத்துக்கொண்டு தன் மகனுடன் வீட்டை நோக் கிப் புறப்பட்டுவிட்டாள்.

செல்லக்காள் தற்கால உலகுக்கு, மிகப் பொருந் தியவள். எதை எப்படிச் செய்யவேண்டும் என்பது, அவளுக்கு நன்ருகத் தெரியும். கண்ணம்மாவுக்கு மண வாளனுக வரத் தன் மகன் சற்றும் தகுதி யற்றவன் என்பதை மிகவும் நன்ருகத் தெரிந்திருந்தாள். தப்பித் தவறித் தன் முயற்சியால் அவர்கள் கணவனும் மனைவியு மாக வாழ்க்கைப் பட்டால் அவர்கள் மகிழ்ச்சியாக வாழ மாட்டார்களென்ற செய்தியும் மிக நன்ருக அவளுக்குத் தெரியும். தான் விரும்பியது தன் அண்ணனின் சொத்துப் பிறர்வழி போகாமல் தன்னையே சேரவேண்டும் என்பதே. இக் கொள்கை நிறைவேற மகனைப் பலி கொடுத்தா லென்ன? மருமகளைப் பலி கொடுத்தாலென்ன? கவலை இல்லை. நடப்பது நடக்கட்டும். கைக்கு எட்டாத கற்பகமே யானுலும் முயற்சி செய்து அடையத்தான் வேண்டும்! முயற்சியின் விளைவைப் பற்றிச் சிந்திப்பா னேன்? 'கிட்டாதாயின் வெட்டென மற' என்று யாரோ எழுதி வைத்துவிட்டுச் சென்ருல், அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமோ? இப்படிப்பட்ட எண் ணங்களே அவள் உள்ளத்தில் தோன்றிக் கொண் டிருந்தன.

மேன்மக்கள் மேன்மக்களே

திருச்சிக்கு சென்ற நடராசன் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் படித்து இண்டர் மீடியட் எழுதி முடித்தான். இரண்டொரு நாள்களுக்குப் பிறகு திருவரங்கம், திருவானைக் காவல் முதலிய இடங்களுக்குச் சென்றான். பின்னர் ஊர் வந்து சேர்ந்தான். அன்பனைக் கண்ட அழகியின் அகம் மகிழ்ந்தது. அவன் வருவதற்கு முன்பே சரிவர உண்ணவும் உடுக்கவும் தொடங்கியதால் முன்பு அவள் இளைத்திருந்ததை இவனால் கண்டுகொள்ள முடியவில்லை. மழைக்குப்பின் துளிர்க்கும் இளந்தளிர் போல் பூரித்திருந்தது அவள் மேனி. கண்களின் கவர்ச் சியிலே காந்தம் குடி கொண்டிருப்பதுபோல அவனுக்குத் தோன்றியது.

நடராசன் வீடுதிரும்பிய சில நாட்களில் தருமசாமிக் கவுண்டரின் உடல் நிலையில் சில மாறுதல்கள் ஏற்பட் டன. மருத்துவர்கள் குறிப்பிட்டவாறு கவுண்டர் சில திங்கள்களுக்கு யாதொரு வேலையையும் கவனிக்காமல் ஓய்வு எடுத்துக் கொள்வதென முடிவு செய்தார். ஓய்வு என்ற பெயரில் ஒன்பது மடங்கு வேலை செய்வது சிலர் வழக்கம். ஆனால் கவுண்டர் எண்ணியவாறு செய்கிறவர். மருத்துவர் கூற்றைக் கடைப்பிடித்தார். அவ்வப்போது குடும்பக் கணக்குகளின் நுட்பத்தை விளக்கிக் காட்டி நடராசனுக்குப் பொறுப்புணர்ச்சி ஏற்படுமாறு செய்து வந்தார். கண்மூடித்தனமாக எதையும் பின்பற்ற வேண்டாமெனச் சொன்னார். கணக்கு உலகில் நடராசன் ஈடுபட்டிருந்தது கண்ணம்மாவுக்கு மகிழ்ச்சியைத் தந்தது

என்றாலும் விளக்கம் இல்லாத் துயரமும் அவளை வாட்டிற்று. தங்கள் உள்ளப் போக்கைத் தந்தை உணர்ந்தால் தங்களிருவர் மேலும் எவ்வித மனப்பான்மை கொள்வாரோ என்று அச்சமும் கொண்டாள். இருந்தாலும் உள்ளத்தே தெளிவு இருக்கும் போது, ஏன் சஞ்சலம் கொள்ள வேண்டும்? அடிக்கடி தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

கடினமான செய்திகளையும் மிக எளிமையாகக் கற்றுக் கொள்ளும் வன்மை படைத்த நடராசன் கவுண்டரின் குடித்தன முறையை எளிதில் கற்றுக் கொண்டான். எல்லோரும் வியக்குமாறு வேலைகளை நடத்தி வந்தான். இவை அனைத்தையும் படுத்த படுக்கையிலிருந்து கவனித்து வந்த கவுண்டர் உள்ளூர மட்டிலா மகிழ்ச்சியடைந்தார். நடராசனைப் போன்ற மாப்பிள்ளை தனக்கு வாய்க்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். தம் குழந்தைக்கு மணவாளனாக வருபவன் யாராயிருந்தாலும், தமக்கப்புறம் தம் குடும்ப பாரத்தை நடத்துதற்கு நடராசன் தான் தகுதியானவன் என்ற முடிவிற்கு வந்தார்.

நோய் வாய்பட்டுப் படுத்த படுக்கையாக இருப்பவர்கள் எண்ணாத எண்ணங்களெல்லாம் எண்ணுவது இயற்கை; எட்டாத பேராசைக் கோட்டைகளையும் கட்டுவார்கள்; நெஞ்சம் புண்ணாகப் பதைக்கவும் செய்வர். கவுண்டரும் இவ்விதிகளுக்கு விலக்கானவர் அல்லர். தமக்குப் பின் தம் சொத்துக்களைக் கண்காணிக்கவும், துய்க்கவும் தமக்கென ஒரு புதல்வன் இல்லையே என்றெண்ணி வருத்தமுற்றார். மகன் இல்லை என்றாலும் குற்றம் இல்லை, மகள் வருந்தலாகாது. தன் செல்வக்

குழந்தை எங்குச் சென்று துன்பப் படுவாளோ! தன் தங்கை மைந்தன் திரிபுரனுக்கு மனைவியானால் அவள் கதி யென்னவது? ஐயோ கடவுளே! என்றெல்லாம் நினைத்து மனமுருகினார்.

யாரோ நாள் தாள் ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். தேர்வின் முடிவு பெரிய பெரிய எழுத்துக்களில் நன்றாகத் தெரியும்படி அதில் போடப்பட்டிருந்தது. இண்டர்மீடியட் தேர்வில் சென்னை மாகாணத்திலேயே முதல் மாணவனாக நடராசன் தேர்ந்து விட்டான் என்ற செய்தியைக் கேட்ட வீட்டிலுள்ள யாவரும் குதூகலத்தில் ஆழ்ந்தார்கள். கவுண்டர் மட்டும் வெளிக்குத் தம் மகிழ்ச்சியைக் காண்பித்துக் கொண்டு உள்ளூர மிகவும் கவலை கொண்டார். அதே காலத்தில் தம் கல்லூரியில் மாகாணத்திலேயே முதல் மாணவனாகத் தேறி வெற்றி பெற்ற நடராசனை மிகவும் பாராட்டிக் கல்லூரித் தலைமை ஆசிரியர், கவுண்டருக்கு எழுதிய கடிதமும் வந்து சேர்ந்தது. தமதெண்ணத்துக்கு மாறாக இப்படியெல்லாம் காரியங்கள் நடக்கின்றனவே என்று அவர் கவலைக் குள்ளானார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பத்துப் பதினைந்து நாட்களுக் கப்பால், நடராசன் முகவரிக்குச் சென்னை அரசியலாரிட மிருந்து வந்த நீண்ட தொரு கடிதத்தில், இன்னும் பதினைந்து நாட்களில் மேல் படிப்பிற்காகக் இலண்டனுக் குச் செல்லும் ஏற்பாடுடன் இருக்க வேண்டு மென்றும், அதற்காக நேரிடும் எவ்வகைச் செலவுகளையும், தாங் களே ஏற்றுக் கொள்வதாகவும், புறப்பட வேண்டிய தேதி, முதலியவற்றைத் தாமஸ் குக் அண்டு சன்ஸ் கம்பெனியார் தெரிவிப்பார்க ளென்றும் கண்டிருந்தது.

கடிதத்தைப் படித்த நடராசன் சற்றே மகிழ்ச்சியை அடைந்தான். ஆனால் சிறிது சிந்திக்கத் துன்பத்தையே அடையலானான். கண்ணம்மாவுக்கும், அன்னை வள்ளியக்காளுக்கும், திலகக்காளுக்கும், கடிதத்தில் கண்டுள்ள செய்தியை வாசித்துக் காட்டினான். ஒருவர் முகத்திலும் மகிழ்ச்சிக் குறி என்பது எள்ளத்தனையும் தென்படவில்லை. இந்தச் செய்தியைக் கேள்வியுற்ற கவுண்டர் தாம் நினைத்தது போல் செயலும் முடிந்ததென்று எண்ணி வருந்தினார். வீட்டோடு வாசலோடு நடராசன் இருந்தாலே போதும் என்று நினைத்தார். ஆனால், கப்பலேறிக் கடலைக் கடக்க வேண்டுமே என நினைத்ததும் தலை சுற்றிற்று. கடைசியில், 'இறைவன் விட்ட வழி' என்று மனதைத் தேற்றிக் கொண்டார். வீட்டிலுள்ள மற்ற பெண்மக்களின் மனதைத் தேற்றும் வேலையும் அவரைச் சேர்ந்தது.

படுக்கையிலிருந்த கவுண்டர் சற்றுத் துன்பத்துடன் எழுந்து அருகிலுள்ள இரும்புப் பெட்டியைத் திறந்தார். ஆயிரம் ரூபாய் எடுத்து நடராசனிடம் கொடுத்துச் சீமையில் குளிர் தாங்குவதற் கேற்ற ஆடைகளைச் சென்னையில் வாங்கிக் கொள்ளும்படிச் சொன்னார். அரசினர் உதவியால் சீமைக்குச் சென்று கல்வி கேள்விகளில் தேர்தவனைத் தாய் நாடு திரும்பினால், பின்னர் அரசினர் அடிமையாக இருக்க நேருமென்றும் தமக்கு ஏராளமாகவுள்ள சொத்தினை நடராசன் கல்வியின் பொருட்டே பயன் படுத்தி உரிமையோடு வாழ்வதே தமது ஆர்வம் என்றும் எடுத்துச் சொன்னார். அதனால் வரும் எல்லாச் செலவுகளையும் தாமே ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

தருமசாமிக் கவுண்டரை நடராசன் மிகக் கனிந்த பார்வையுடன் பார்த்தான். அவன் கண்களில் நீர் தேங்கியது. உணர்ச்சி வயமானான். என்னென்வோ சொல்ல' வேண்டும் போல் தோன்றியது அவனுக்கு. "தந்தையை இழந்தோம். சொத்துக்களை எல்லாம் இழந்தோம். ஆனால் நம்பிக்கையை மட்டும் இழக்க வில்லை. எனவே செய்வதின்னதென் றறியாமல் உங்களை அண்டினோம். எங்களுக்கு ஆதரவளித்தீர்கள். ஏழைகளான எங்களால் என்ன கைம்மாறு செய்ய முடியும்? நீங்கள் இது வரையில் எங்களிருவருக்கும் மனம் கோணாமல் செய்தவைகளுக் கெல்லாம் நாங்கள் பல பிறப்புக்களிலும் உங்களுக்கு அடிமைகளாக இருக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். 'திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை' என்பார்கள். உண்மைதான். உங்களைத் தெய்வமாகவே எண்ணி வணங்கிப் போற்றலாம். உங்கள் வள்ளல் குணத்தை என்னென்று சொல்வேன்? எனக்கு இவ்வளவு பணம் வேண்டியதில்லை தான்; என்றாலும் மறுப்பது அழகன்று; ஆடையின் பொருட்டு, மற்றச் செலவுகள் பொருட்டும் எனக்கு வேண்டியது சொற்பமே. ஏற்கனவே உங்களுக்குத் தொல்லை மிகக் கொடுத்து விட்டேன்; கொடுத்து விட்டேன் என்று சொன்னேன்? கொடுத்து விட்டோம். இன்னும் எவ்வளவு துன்பங்கள் தரப் போகிறோமோ" என்றெல்லாம் உள்ள முருகி நேருக்கு நேராக அவரிடம் சொல்லிவிடத் துடித்தான். ஆனால் சொற்கள் உதட்டை விட்டு வெளிவர மறுத்து விட்டன.

ஊரார் பணத்தைச் செலவு செய்வதிலும் வெறும் கையில் முழம் போடுவதிலும் முதற் பரிசு பெற்ற 'மகான்கள்' குழுமிய இந்த உலகில், மற்றவர் சொத்

துக்கு ஆசைப்படாத நடராசர்களும் இருக்கிறார்கள். கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்கள் தானே? இளமையிலிருந்து பொருளை ஒரு பொருட்டாக மதியாத நடராசனுக்குத் தன்னைத் தேடிச் செல்வம் வந்த காலத்தும் உதறித் தள்ளவே தோன்றியது. இப்படிக் குணம் படைத்தவர்களை அன்றாட வாழ்க்கையில் காண்பது அரிதுதான். சேர்க்கையினால் தன்னலமும் பேராசையும் பொருந்திய விலங்குகளாய் பிற்கால வாழ்க்கையில் மாறி விடுகிற சிலரையும் காண்கிறோம். ஆனால் பிறப்பிலே பெருங் குணம் படைத்தவர்கள் எவ்வாறும் மாறுவதில்லை. அவர்களை மாற்றி அமைப்பதும் முடியாத செயல் என்பதில் என்ன ஐயம்?

முதல் நோன்பு

தாமஸ் குக் அண்டு சன்ஸ் கம்பெனியாரிடமிருந்து நடராசனுக்குக் கடிதம் வந்து சேர்ந்தது. அதில் "டிசம்பர் மாதம் பதினைந்தாம் தேதி பம்பாய்த் துறைமுகத்திலிருந்து லண்டன் நோக்கிப் புறப்படும் "என்னைநேசி" என்னும் கப்பலில் செல்வதற்கு ஏற்பாடாக இருக்க வேண்டும். செலவுகள் அத்தனையும் அரசினரே தங்களுக்கு அனுப்பி விட்டதால் சில முத்திரையிட்ட தாள்களை மட்டும் குறிப்பிட்ட இடங்களில் நிறைவு செய்து அனுப்பி வைத்தால் போதுமானது" கண்டிருந்தது. கடிதத்தை இரண்டு மூன்று முறை படித்தான். ஊரை விட்டு ஒரு வாரத்திற்குள் புறப்பட வேண்டியதுதான். செல்லுதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்ய வேண்டும். காலம் கடத்துவதில் பயனில்லை என்பதை உணர்ந்தான் நடராசன்.

நாட்கள் நெருங்க நெருங்க நடராசன் உள்ளமும் விரைந்து ஒலித்தது. கண்ணம்மாவைப் பார்க்கும் போதெல்லாம், உள்ளத்துன்பம் பெருக்கெடுத்தது. அவள் நிலையோ சொல்லத் தேவையில்லை. அரைக் கணமும் பிரிந்திருக்க உளமில்லாத இரு அன்றில் பறவைகள் இரண்டு ஆண்டுக் காலம் பிரிந்திருப்ப தென்றால் இயல்வதா? இருவர் உள்ளங்களும் படும் பாட்டைச் சொற்களால் சொல்லி முடியாது! திருமணமாகி வெகு காலமாகிப், பேரப்பிள்ளைகள் பெற்று, அறுபதாம் ஆண்டுத் திருமணத்தையும் சிறப்பாக நடத்திக்கொண்டவர்களே தொலைவிலுள்ள நாட்டிற்குச் செல்வது என்றால் இசைவதில்லையே! அப்படியிருக்கப் புதுமலர் இரண்டு

புன்னகை சூடி மணமுள்ள புது நீராட விருப்பங் கொள்வது முறை தானே?

நடராசன் புறப்படுமுன் தனியாகச் சந்தித்துக் கலந்து பேச வேண்டும் என்று கண்ணம்மா முடிவு செய்தாள். அதற்கேற்ற காலமும் வாய்த்தது. தோட்டத்து வேலையாட்களுக்குள் ஏதோ சிறு சச்சரவுவர அதனைத் தீர்க்க நடராசன் தோட்டத்துப் பக்கம் சென்றான். நிழல் போல் கண்ணம்மாவும் தொடர்ந்தாள். நடராசனைக் கண்டவுடன் சண்டை நின்று விட்டது. நடராசன் அதைக் கண்டு வாய்விட்டுச் சிரித்து விட்டான். ஆனால் திரும்பிப் பார்த்துக் கண்ணம்மாளைக் கண்டதும் 'கல்போல்' அசையாது நின்று விட்டான்.

சற்றுப் பொறுத்து ஒரு மணல் மேட்டின்மேல் இருவருவரும் அமர்ந்தார்கள். முதலில் யார் பேசுவதென்ற எண்ணம் போலும்! கண்ணம்மா புது மணலில் சிறு வீடு கட்டுவதும், அதைக் கலைப்பதுமாகச் சிறிதுநேரம் போக்கினாள். அந்த விளையாட்டில் சலிப்புக்கொண்ட அவள், "போதும் மாமா! இந்தச் சிறு பிள்ளை விளையாட்டு. நான் சில விடுகதைகள் கேட்கிறேன், அதற்குப் பதில் சொன்னால், அந்த விளையாட்டில் கொஞ்சம் நேரம் போகுமே" என்றாள்.

"விடுகதைகளுக்குப் பதில் சொல்ல நான் கற்றுக் கொள்ளவில்லையே! தவிர, விடுகதைகள் சில சமயங்களில் சச்சரவுகளையே விளைவிக்கின்றனவாமே!"

"சச்சரவுக்கிடம் இல்லை. அஞ்சாதீர்கள்" என்றாள்.

"சரி, அஞ்ச வில்லை" என்ருன், வியப்புடன் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே.

"மணமுள்ள மலர் எது?" என்ருள்.

"நீ தான்!" என்று சொல்லுவது போல் கையைத் தூக்கிச் சுட்டிக் காட்டினுன்.

"உள்ளத்தைக் கவர்வது எது?" என்ருள், சிரித்துக் கொண்டே.

"உன் கண்களைச் சொல்வதா? அல்லது மேனி முழுவதையுமே சொல்வதா? தெரியவில்லையே" என்ருன் தயங்கிக் கொண்டே.

"உலகம் தலைகிழாகப் புரண்டாலும் அழியாதிருப்பது?"

"நம்மிருவர் காதல் தான்" என்ருன் மகிழ்ச்சி பொங்க.

"இணைபிரியாம லிருப்பதோ?"

"நம்மிருவரின் உள்ளங்கள்!"

இந்தப் பதிலைக் கேட்டதும் அப்படியே அவள் சொக்கிப் போனுள். மெய்ம் மறந்த மகிழ்ச்சியில் ஆழ்ந்து விட்டாள். மகிழ்ச்சிக் கடலில் குளித்தெழும் அவள் கன்னங்களில் விழும் குழியையும், குறு நகையையும் கண்டு நடராசன் களிப்படைந்தான். அவளை மேலும் வேடிக்கையாகத் தூண்ட எண்ணி, "நூலைப் படித்து விட்டு விடுகதைகள் போடுகிருய் போலும் என்று நினைத்

தேன். வாழ்க்கை நூலினை எடுத்து வைத்துக் கொண்டு ஏடுகளைப் புரட்டத் தொடங்கி இருக்கிறாய். நன்று என்று சொல்லுவதைத் தவிர வேறு சொல்வதற் கென்ன இருக்கிறது!'' என்றான் நடராசன்.

அவள் மிகுந்த துன்பத்துடன், "நீங்கள் இலண்டனுக்கல்லவா போகிறீர்கள்?'' என்றாள். நடராசன் சிரித்துக் கொண்டு, "ஆமாம், உனக்குத் தெரியாதா?'' என்றான்.

கண்ணம்மா மென்று விழுங்கி, "உம்... எத்தனையோ... எத்தனையோ... அழகிகள் இருப்பார்களே அங்கே!'' என்றாள்.

"ஐயா! அறியாப் பெண்ணே! கழுத்தளவு நஞ்சில் நின்றாலும், விழுங்காதவரை அது கொல்லாது. யாராலும் என் நோன்பினை மாற்ற இயலாது'' என்றான்.

சீமைக்குச் சென்றால் எவ்விதம் நடப்பாரோ, எந்த வலையில் விழுந்து விடுவாரோ, எப்படித் தவிப்பாரோ, என்று அவள் தவியாகத் தவித்தாள். தன் கண்களில் பெருகும் நீர்ப் பெருக்கைத் துடைத்துக் கொண்டே 'இம் முதல் நோன்பினை மறந்து விடாதீர்கள்' என்று கேட்டுக் கொண்டாள். கொஞ்சும் அவள் முகம் அவன் நெஞ்சில் பதிந்தது. நேரம் ஆகவே வீட்டிற்குப் புறப்பட்டனர்.

வழிநெடுக அவள் பாடிக் கொண்டே வந்தாள். மெல்லிய அவள் பாட்டினிமை அவன் உள்ளத்தில் எங்கும் நிறைந்தது.

உண்மையின் ஒலி

டிசம்பர் திங்கள் பத்தாம் நாள்; மறு நாள் மாலையில் நடராசன் பம்பாய்க்குப் புறப்பட வேண்டும். தொலைவுச் செலவுக்கு வேண்டிய ஏற்பாடுகள் மிக விரைவாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஒரு புறம், மகிழ்ச்சி; மற்றொரு புறம் துயரம். சற்றுக் குணமடைந்த தருமசாமிக் கவுண்டர் தம் குடும்பத்தினருடன் அருகேயுள்ள சில கோவில்களுக்கு நடராசனுடன் சென்று வழிபாடுகளைச் செய்து வந்தார். அன்று இரவு சாப்பாட்டுக்குப் பிறகு எல்லோரும் இருந்து பேசிக் கொண்டிருந்தார்கள். ஆண்டினும் பலவகைப் பயிற்சியினும் முதிர்ந்தவரான தருமசாமிக் கவுண்டர் இளைஞன் நடராசனுக்குச் சில அறிவுரைகளைச் சொல்ல விரும்பி, அவனைக் கூப்பிட்டுத் தம் அருகே இருந்து அன்பு ததும்பிய குரலில் சொன்னார். அதன் சுருக்கம்: "அப்பா, வேற்று நாட்டுக்கு உயர்தரக் கல்வியின் பொருட்டுச் செல்லும் இளைஞர்கள் முதலாவதாகத் தம் நாட்டுப் பெருமையையும் மதிப்பையும் காப்பாற்ற வேண்டும். இரண்டாவதாக மேல் நாட்டில் குடி கொண்டிருக்கக் கூடியதான ஒழுங்கீனமான முறைகளை உதறித்தள்ளி விட்டு, நம் நாட்டிற்கேற்ற நல்ல முறைகளைக் கைக் கொள்ள வேண்டும். மூன்றாவது, மிகவும் சிறப்பானது கவனமாகக் கேள்! தொழிலாளி மக்கள் என்றழைக்கப்படும் பாட்டாளி இந்திய மக்கள் இன்புற வாழ்வதற்கு நம் நாட்டில் எவ்வகைச் சீர்திருத்தங்கள் செய்தால், இன்பத்தை அடைய முடியும் என்பதைச் சீர்தூக்கிக் கற்றுத் திரும்பி வரவேண்டும். இவற்றை

உள்ளத்தில் பதித்து வைத்துக்கொள். எக்காலத்திலும் மறந்து விடாதே!''

எழுத்தொன்று எண்ணிலாப் பொன் பெறும் அறவுரை; இதனிடத்து ஒன்றையும் சிறிதளவும் ஒதுக்கு தற்கில்லை. மேலும் கவுண்டர் தம் அறிவுக்கேற்பத் தெரிந்தவற்றைச் சொன்னார். நடராசன் எல்லாவற்றை யும் கருத்தாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அந்தப் படியே நடப்பதாகத் தன் உள்ளத்திற்குள் முடிவு செய்து கொண்டான்.

"கண்கண்ட தெய்வங்கள் நீங்கள் தான். உங்களுக்கு வாயார, மனமார நன்றி சொல்ல இது காலம் அன்று. எனக்குச் சொற்களும் கிடைக்கவில்லை. நீங்கள் செய் துள்ள உதவி ஏட்டில் அடங்காது. நான் உங்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டவன். வாழ்வளித்த உங்களிரு வரையும் நான் உள்ளத்தினால் நாள்தோறும் வணங்கி வர வேண்டியவன். நீங்கள் இன்று எனக்கு அறிவுறுத் திய உண்மை மொழிகளை என்றும் மறவேன். காலஞ் சென்ற என் தந்தைக்கும், அடைக்கலம் கொடுத்த உங்களுக்கும், சீர் நிறைந்த இத்திந்தமிழ் நாட்டிற்கும் இழிவினை விளைவிக்கக்கூடிய செய்கையோ, கருத்தையோ கனவிலும் கருதேன். உயர்தரக் கல்வியின் பொருட்டு நான் மேல் நாட்டிற்குச் செல்வதன் உண்மைக் கருத்து என்னவென்றால், நான் அங்குக் கற்றுக் கேட்கும் செய்தி களை நம் நாட்டு ஏழை மக்களின் பொருட்டுப் பயன் படுத்துவதற்காகவே. நம் நாட்டைக் காட்டிலும் மேல் நாடுகளில் தொழிலாளி மக்கள் மிகவும் வளத்தோடு வாழும் வழிகளைக் கற்றுணர்வதனை எனது முதல் வேலை யாகக் கொள்வேன். அதற்காக எதனையும் விட்டுக்

கொடுக்க முற்படுவேன்'' என்பன போன்ற நினைவு அலைகள் அவன் நெஞ்சில் தோன்றி முகத்தில் தம் சாயலைக் காட்டின.

தருமசாமிக் கவுண்டர் மகிழ்ச்சிக் கண்ணிர் பெருக நடராசனைக் கனிவோடு பார்த்தார். கண்ணம்மா இந்தக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தாளா அன்றித் துக்கப்பட்டாளா என்பதை அவளிடம் தான் கேட்க வேண்டும். அக் காவியக் கண்கள் பேசுவதை நடராசன் கவனிக்க வில்லை போலும்!

மறுநாட் காலையில் கண்ணம்மாவைப் பின்கட்டில் சந்தித்தபோது, "போய் வரட்டுமா?'' என்று புன்னகை தவழக் கேட்டான். "சரி'' என்பதற் கடையாளமாகத் தலையை ஆட்டினாள். அந்தப் பவளச் செவ்வாய் அதரத் திலே தவழும் இளநகை சோபை இழந்தது போலத் தென்பட்டது. இருந்த போதிலும், "நீங்கள் நலமாகச் சென்று திரும்பி வரவேண்டும்'' என்று சொல்லியதைப் போல் இருந்தது அவனுக்கு.

அன்று மாலை எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு நடராசன் பம்பாயை நோக்கிப் புறப்பட்டான்.

திரைகடல் ஓடியும்...

கப்பல் புறப்பட நின்று கொண்டிருந்தது. கப்பலைக் கண்டவுடன் நாலைந்து நாள் வழிச்செலவின் சலிப்பையும் மறந்தான் நடராசன். துறைமுகத்தில் மருத்துவர்கள், சுங்க அலுவலாளர்கள் பரிசீலனை எல்லாம் முடிந்த பின், "என்னை நேசி" என்னும் கப்பலுக்குள் பிரவேசித்தான். அரசினர் செலவில் செல்வதால், ஐம்பது பேர்கள் அடங்கிய ஒரு சிறிய அறையில் நடராசனுக்கு ஓர் இடம் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது.

அந்த 'என்னை நேசி' என்னும் கப்பல் மிகப் பெரியது; பலவகை புதிய நாகரிக வசதிகளுடன் கூடியது. எல்லாத்தேவைகளும் நிரம்பப் பெற்றது. எனவே மிகப் பெரிய அரசாங்க அலுவலாளர்கள் தங்கள் மனைவி மக்களுடன் அதில் சென்றனர். பிரபல சமஸ்தானாதிபதிகள் உடன் வருவோர்களுடன், தமக்கென தனியாக ஒதுக்கி வைக்கப்பட்ட அறைகளில் வீற்றிருந்தனர். இலண்டன்மா நகரம் அவர்கள் கண் எதிரே பம்பாயிலேயே தோன்ற ஆரம்பித்து விட்டது! ஈவு இரக்கமின்றி ஒரு ரூபாய் பெறுமான பண்டத்தை இருபது ரூபாய்க்கு ஏழை மக்களுக்கு விற்று அதனால் பெரும் செல்வர்களான, இந்திய வாணிப வீரர்கள், 'இந்திர லோகப் பதவியை' அடைய இங்கிலாந்தை நோக்கிச் சென்றனர்.

நடராசனைப் போல் கல்வியின் பொருட்டுச் செல்லும் மாணவர் பலர் தாய் நாட்டின் அருமை பெருமைகளை மறந்து இறுமாந்த மேற்றிசையை நோக்கி இருந்

தனர். இந்தியாவில் ஏராளமாக விளையும் சரக்குகளை வெளி நாடுகளாகிய ஸ்பெயின், போர்த்துகல் போன்ற நாடுகளில் விற்று முதல் செய்வதன் பொருட்டுச் செல்லும் வினையாளர் பலர் தங்களைத் தாங்களே முதலாளிகள் ஆக்கிக் கொண்டு அந்தப் பெருமையிலே உளம் குளிர பலபேசி மகிழ்ந்தனர்.

போரின் பொருட்டுக் கீழ்த்திசை நோக்கி வந்த ஆங்கில நாட்டு மறவர் பலர் தங்கள் பெற்றோர்களையும் மனைவி மக்களையும் காணும் ஆவலுடன் இக் கப்பலில் போய்க் கொண்டிருந்தார்கள். எல்லையற்ற செல்வத்தினைச் சேர்த்து ஆங்கில மொழியில் ஆர்வம் கொண்டு அரை குறையாகப் பேசக் கற்றுக் கொண்ட பல இந்திய 'பிரகஸ்பதிகள்' தங்களுக்கு ஆங்கில மொழியிலுள்ள அறிவு விளக்கத்தினைப் பலருக்கும் பகட்டாகக் காட்ட ஆங்கிலத்திலேயே பேசிக் கொண்டு தம் பெரும் பயணத்தைத் தொடங்கினர்.

தெளிவாகக் கூறின் அக்கப்பலில் சென்றோருள் அரை குறை ஆங்கில அறிவினர்களே மற்றவருடைய கருத்தைக் கவர்ந்தனர். தங்கள் தாய் மொழியைப் புறக்கணித்த இப் புல்லறிவாளரின் கூட்டம் மற்றவரின் பொழுது போக்குக்கு மிக இன்றியமையாததாய் இருந்தது.

இதே கப்பலில், இங்கிலாந்திலுள்ள வலிய கட்சிகளுள் ஒன்றாகிய "லிபரல்" கட்சியைச் சேர்ந்த லார்டு ரின்னிங்டன் செல்வர் தம் குடும்பத்துடன் இலண்டனுக்குச் சென்று கொண்டிருந்தார். ஜின்ஜர் என்ற ஒரு திருமதியும் இதே கப்பலில் சென்று கொண்டிருந்தாள்.

திருமதி ஜின்ஜருக்குப் பதினேழு பதினெட்டு ஆண்டு தான் இருக்கும். செல்வக் குடும்பத்தில் பிறந்த திருமதி ஜின்ஜரும், ரின்னிங்டன் செல்வரும் தன்னோடு பேச முயலுவதைக் கண்ட நடராசனுக்குச் சற்றுத் தொல்லையாகவே இருந்தது.

நல்லார் இணக்கம்

இலார்டு ரின்லிங்டன் செல்வரும் அவரது மனைவி யாரும் வயது முதிர்ந்தவர்கள். ஆங்கிலேயர்களே யாயினும் நம் இந்திய நாட்டின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் மிக்க கவலை கொண்டவர்கள். லிபரல் கட்சியினர் பதவியிலிருக்கும் காலத்தில் 'இந்தியர்களுக்கு விடுதலை கொடுங்கள்' என்று மக்கள் மன்றத்தில் (காமன்ஸ் சபையில்) மிகவும் வற்புறுத்திப் பேசியவர் இவர். இவரது அறிவு நுண்மையினைப் பெரும்பான்மைக் கட்சியினராகிய லிபரலினர் அன்று ஏற்க வில்லை. இன்று சற்று உணர்ந்ததால் ஏதோ 'கொஞ்சம்' கிடைத்திருக்கிறது போலும்! நாம் நாட்டின் மேல் உள்ள பற்றுதலால் இந்தியாவைச் சுற்றிப் பார்த்து நாட்டின் உண்மை நிலையை உணர்ந்து கொள்ளுவதற்காகத் தமது முதுமையில் புறப்பட்டு வந்த இவர், தம் நாட்டை நோக்கித் திரும்பிச் செல்லுகிறார்.

பெரும் பதவி ஏற்றுப் பேரறிவு பெற்ற இந்தியர்களுடன் தோழமை கொள்ளும் ரின்னிங்டன் செல்வரும் அவர் தம் மனைவியாரும் நடராசனுடைய அடக்க ஒடுக்கத்தையும், ஏற்றம் சான்ற தோற்றத்தையும் கூர்ந்து நோக்கி, இவன் மேல் பற்றுதல் கொண்டார்கள். கப்பல் துறைமுகத்தைக் கடந்து சென்று அரபிக் கடலில் மெல்லெனப் போய்க் கொண்டிருந்த ஒரு நாள் மாலையில், பிரபுவும் அவர் தம் மனைவியும் இன்பமாகக் கப்பலின் மேல் தட்டிலுள்ள சாய்வு நாற்காலியில் இருந்தார்கள். அவ்வழியே உலாவச் சென்ற நடராசனை,

ரின்னிங்டன் பிரபு தம் அருகில் அமைத்து இருக்குமாறு வேண்டினார். கிளர்ச்சியோடு பேசும் பிரபுவோடு தானும் சற்றுப் பேச விரும்பிப் பேச்சைத் தொடங்கி "செல்வரே! தாங்கள் என்மேல் கொண்டுள்ள அன்புக்கு மிக்க நன்றி. நான் மேல் படிப்பின் பொருட்டு இலண்டனுக்குச் செல்லுகிறேன்; இரண்டு ஆண்டுகள் நான் அங்கு தங்க நேரிடும்." என்றான்.

"குழந்தாய்! நீ பேசும் முறையிலிருந்து நீ மிக உயரிய பதவிக்கு வரக்கூடியவன் என்று எனக்குத் தோன்றுகின்றது. நீ உன் காலத்தைச் செவ்வனே பயன் படுத்திக் கொள்ளுதல் வேண்டும். நீ இலண்டனுக்கு முதல் முறையாகச் செல்வதால் உனக்கு அறிமுகமானவர்கள் யாரும் அங்கிருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். என்னால் ஆன உதவியை உனக்கு நான் செய்யக் காத்திருக்கிறேன். நீ வெட்கமின்றி என் இருப்பிடத்திற்கு அடிக்கடி வந்து ஆண்டு முதிர்ந்தவர்களாகிய எங்களைக் கண்டு போக வேண்டுமென்பதே எங்கள் விருப்பம்" என்றார்.

"அன்புமிக்க பெரியோரே! 'நல்லாரைக் காண்பதுவும் நன்று, நலமிக்க பெரியோர் சொல் கேட்பதுவும் நன்று' என்பதாகத் தமிழிலே ஒரு முதுமொழி உண்டு! நான் உங்களிடம் பேசிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றதற்காக மிக மகிழ்கிறேன். முன் பின் நாம் சந்தித்ததில்லை. இருந்தபோதிலும் தூய அன்பின் பிணைப்பு நம்மை இணைக்கின்றது. இது இயற்கையின் இயல்பு போலும்! அம்மையாரையும் நான் அடிக்கடி வந்து காணும் ஆவலுள்ளவனாக இருக்கிறேன். மிக மகிழ்ச்சி" என்றான்.

செல்வருக்கு வியப்பு மிகுந்தது. ஆங்கில மொழியை ஆங்கிலேயரைக் காட்டிலும் மிக நன்றாகப் பேசினான். அவர் "என் குழந்தாய்! ஆங்கிலேயர்களாகிய எங்கள் வாழ்க்கையில் நிலவிவரும் நல்ல பழக்க வழக்கங்கள் என்று உன் உள்ளத்தில் படுகின்றவைகளைக் கற்றுக் கொள். உன் தாய்நாட்டுக்குப் பயன் தரக்கூடிய கல்வியை மிகவும் ஊக்கத்துடன் கற்றுக் கொள்வதுமன்றி நீ கற்றுக் கேட்டறிந்த நுட்பங்களை உன் தாய் நாட்டு ஏழை மக்களின் பொருட்டுக் கைம்மாறு கருதாது பயன் படுத்துவதே நின் தாய் நாட்டுக்கு நீ செய்யும் கடமைகளில் மிகவும் மேன்மையானது. சிறிதளவு உரிமையை இன்று நாங்கள் உங்களுக்குக் கொடுத்திருக்கிறோம்! உன்னைப் போன்ற இளைஞர்கள் வழியாக உங்கள் நாடு முழு உரிமையையும் விரைவில் அடையுமென நம்புகிறேன்" என்றார் மகிழ்ச்சி பொங்க.

"ஆண்டிலும் அறிவிலும் சிறியவனான நான், அறிவிலும் வயதிலும் பெரியோரான தங்களிடம் நாட்டு நட்புப் பற்றிப் பேசினால், நான் அகந்தை உடையவன் என்று நீங்கள் நினைப்பீர்கள். அரசியல் தொடர்பாக ஒன்றும் பேச நான் விரும்பவில்லை. எங்கள் நாட்டுத் தலைவர்கள் அமைதித் தன்மையைத் தலைமையாகக் கொண்டு இன்று சிறிதளவேனும் தன் ஆட்சியின் எல்லையை எட்டிப் பார்த்தது உங்களைப்போன்ற தன்னலமற்ற ஆங்கில அரசியல் அறிஞர்களால் தான் என்பதை நான் அச்சமின்றிக் கூறுவேன். உங்களைப் போன்ற உயர்ந்தோர்களுக்கு எங்கள் நன்றி. இதற்கு மேல் இது பற்றி நான் பேசினால் என் உரிமை வேட்கை துடி துடிக்கும். உலகம் முழுவதற்கும் முழு விடுதலை

வழங்க வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள். 'ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை சாதியில்' என ஒப்புக்கொள்ளுகிறீர்களா?'' என்முன். "ஆம்'' என்று செல்வர் ஒப்புக் கொண்டார். மேலும் சற்றுப் பேசிக் கொண்டிருந்துவிட்டு நடராசன் அங்கிருந்து எழுந்து சென்முன்.

திருமதி ஜின்ஜர்

நடராசன் அறைக்குப் பக்கத்தில் இருந்த திருமதி ஜின்ஜர் இலண்டனுக்குப் பத்துக் கல் தொலைவிலுள்ள பேட்டர்ச்சி என்னும் ஊரினைச் சேர்ந்தவள். அங்கு அவளுக்குச் சொந்தமான அழகிய மாளிகை ஒன்று இருக்கிறது. அவளுடைய தந்தை இலண்டனில் வெளியாகி வரும் நாள் தாள் ஒன்றுக்கு உரிமையாளர். தாளின் வழியே அளவிறந்த பணம் சேர்த்தார். மகளிடத்தில் உயிருக்குயிராக இருந்தார். பெற்றோருக்கு ஒரே பெண்ணாதலால் சீராட்டிப் பாராட்டிப் போற்றி வளர்க்கப் பட்டவள். நன்ருகப் படிக்கவும் வைத்தனர். இலக்கியத்திலும் வரலாற்றிலும் இயற்கையிலே இவளுக்கு ஈடுபாடு உண்டு. எனவே இந்தியாவைப் பற்றி நன்கறிந்திருந்தாள்.

திருமதி ஜின்ஜருக்காகத் தாய் தந்தையர் ஆடை அணிகளின் பொருட்டு செலவு செய்த தொகை கணக்கிலடங்காது! அந்தப் பணத்தில் எத்தனையோ ஏழைக் குடும்பங்கள் பல நாள் நலமாக வாழலாம்! விலையுயர்ந்த ஆடை அணிகளை அணிவதில் நம் நாட்டுப் பெண்மணிகளை வெல்லும் பண்பினள் திருமதி ஜின்ஜர். இலண்டன் நகரிலுள்ள பெரிய செல்வர்கள் குடும்பப் பெண்களிலெல்லாம், திருமதி ஜின்ஜர் மிகக் கட்டழகு வாய்ந்தவள் என்று கருதப்பட்டு வந்தாள். அதனை உறுதியாக்க அவர்கள் அழகுப் போட்டிப் பந்தயங்களில் இவளுக்கு எத்தனையோ முறை முதற் பரிசு அளித்திருக்கிருர்கள். அழகி என எடுத்துச் சொல்ல வேறு என்ன சான்று வேண்டும்?

எல்லை இல்லாப் பொருளை அரும்பாடு பட்டுச் சேர்த்த திருமதி ஜின்ஜரின் தாய் தந்தையர், வெண்ணை திரளும் சமயத்தில் தாழி உடைந்தது போல், தக்க வயதில் திருமதியைத் தனியே விட்டுக் காலமாகி விட்டார்கள். ஆக எல்லாச் சொத்துக்கும் இவளே தனித் தலைவி ஆகி விட்டாள்! பெற்றோரை இழந்த துக்கத்தை மறக்க நிலபுலன் களிலே தன் கருத்தைச் செலுத்தினாள். உயர்தர ஊதியம் பெறும் வினைஞர்களின் உதவியை வெறுத்துத் தானே எல்லாச் செயல்களையும் கருதி வந்ததால், தன் பெற்றோர்கள் தனக்கு வைத்து விட்டுச் சென்ற சொத்துக்களைப் பதின் மடங்கு வளர்க்க அவளால் முடிந்தது.

திருமதி ஜின்ஜரின் அழகுக்காக ஆங்கிலச் செல்வர்கள் பலர் இவளைக் காதலித்தனர். ஜின்ஜரின் பெரும் செல்வத்தில் காதல் கொண்ட ஒரு சில இளைஞர் இவளது நேயத்தைப் பெரிதும் விரும்பி நாடினர். மற்றும் சிலர் அழகில் சிறந்த தங்களை விரும்புவாள் என அவள் முன்னர் நடமாடினர். இவ்வாறு பல்வகை உள்ளப் பண்பினர் பலர் இவளிடும் குற்றேவலையும் குறிப் பறிந்து செய்யும் விருப்பொடு முன் நின்றனர். இவர்களைக் காணவும் விரும்பாத திருமதி தனக்குத் திருமணத்தில் சிறிதளவும் கருத்தில்லை என்று கூறி ஒதுக்கி விட்டாள்.

இப்போது திருமதி தனக்குச் சொந்தமாய் நீலகிரியிலுள்ள சில பெரிய தேயிலைத் தோட்டங்களை விற்று விட்டுப் போகவே இந்தியாவுக்கு வந்திருந்தாள். எப்போதோ தந்தைக்குச் சொற்ப விலைக்குக் கிடைத்தது. தற்போது வந்த வேலையை வெற்றிகரமாய் முடித்துக் கொண்டாள். தந்தை வாங்கியது பதினாயிரம் ரூபாய்க்கு

என்று நினைவு. இத்தனை காலம் பயன் தூய்த்த பின்னர் தோட்ட மொவ்வொன்றையும் லட்சக் கணக்கான ரூபாய்களுக்கு விற்க முடிந்ததை எண்ணி வியந்தாள். போர்க் காலத்தில் அளவிறந்த செல்வத்தினைச் சாய்வு நாற்காலிகளில் இருந்த படியே ஈட்டிக் கோட்டைகள் கட்டிக் கொண்ட மாபெரும் செல்வர் சிலர் வாழும் இந்நாட்டிலே இந்த நாளில், திருமதி ஜின்ஜர் பெரு விலைக்குத் தன் தோட்டங்களை விற்றதில் வியப்பு ஒன்றுமில்லை.

அழகிலும் பதவியிலும் சிறந்த பல ஆங்கிலேயச் செல்வர்களின் காதலை வெறுத்துத் தள்ளிய திருமதி ஜின்ஜருடைய வாழ்விலே மாறுதல் தோன்றுகின்றது. அவள் உள்ளத் தாமரை எந்தக் கதிர்களுக்காக ஏங்கி எதிர் பார்த்துக் கொண்டிருந்ததோ அந்த இளம் கதிர் மெல்ல மெல்ல ஒளி விசலாயிற்று. நடராசனைக் கண்டது முதல் அவள் கனவிலே ஒரு புது இனிமை கண்டாள். அவனோடு பேச வேண்டும் என்று அவளுடைய உள்ளம் அவாவிற்று. தனக்கே தெரியாமல் தன்னிடம் ஏற்பட்ட இம்மாறுதலைக் காண அவளுக்கு மிக வியப்பாக இருந்தது. அது காதலின் வண்மை போலும்!

திருமதியின் பெருமதி

இயற்கை கண் எதிரே கட்டோடு விரிந்து அழகின் அலைகளைப் பரப்பிக் கொண்டிருந்தது. நடராசன் கண்டு கண்டு களித்தான். உள்ளம் பூரித்தான்.

ஒரு நாள் கப்பலின் மேல் தட்டில், 'நான் மேற்கே போகிறேன்' என்று காரகா எழுதிய நூலினைக் கையில் வைத்துக் கொண்டு நடராசன் கடல் அலைகள் மேலும் கீழும் விழுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். 'தனிமை கண்டதுண்டு, அதிலே சாரம் இருக்குதம்மா' என்று யாரோ அவன் காதில் ஓதுவது போல் இருந்தது. புத்தகத்தைப் படிக்கவும் மனமில்லை. இயற்கையைக் காணவும் நெஞ்சில் இனிப்பேற வில்லை. பின்னர்......? எதை நாடி உள்ளம் சோர்வும் சலிப்பும் கொள்ளுகிறது? இந்தக் கேள்வியைத் தன்னிடமே கேட்டுக்கொண்டான். அதற்குப் பதில் கூற வந்தவள் போல் திருமதி ஜின்ஜர் தோன்றினாள்! "உங்களுக்கு வணக்கம்! தன்னந்தனி யாக நின்று கொண்டு என்ன செய்கிறீர்கள்?" என்ற சொற்கள் முடியு முன்பே நடராசன் சடக்கென்று திரும் பினான். அங்கே அணிவகை குலுங்க அறிமுகமில்லாத ஒரு இளமங்கை நிற்பதைக் கண்டு சற்றே திகைத்து, பதிலுக்கு, "உங்களுக்கு வணக்கம்! சுற்றிலுமுள்ள இக் காட்சிகளைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

"கடல், அலைகள் புரியும் இந்த அருஞ் செயலிலே என்ன இன்பத்தைக் கண்டீர்களோ! இயற்கை அழகிலே உங்களைப் போன்ற இளைஞர்கள் ஈடுபடலாகாதே"

என்று சொல்லிக் கொண்டே மேலும் சற்று அருகே வந்தாள்.

நடராசனுக்குச் சிரிப்பு வந்தது. சிரிப்பை அடக்கிக் கொண்டு, "உங்கள் பெயர்?" என்றான். கேட்கா விட்டாலும் சொல்லுவதற்கே ஜின்ஜர் வந்திருக்கிறாள். தன் கதையைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தாள். 'சுருக்கமாக' என்றால் ஒரு மணி அளவு நடராசனுக்குப் பேசவே இடந்தராமல் தன்னைப் பற்றியே சொல்லிக் கொண்டிருந்தாள்.

மேலும் தன் வரலாற்றினைக் கூறுவதற்காக நடராசன் முகத்தைப் பார்த்தாள். அந்த முகத்திலிருந்து எவ்விதமான உணர்ச்சியும் அவள் தெரிந்து கொள்ளக் கூடவில்லை யாதலால், பின்னும் கதையைத் தொடர்ந்தாள். நடராசனுக்கு அது கதை போல இருந்ததென்றாலும் தனது வாழ்க்கைக் கதை அவனது நினைவுப் படலத்திலே மெல்ல மெல்ல உருக்கொண்டது. அந்த இன்ப துன்பச் சுழற்சியிலிருந்து மேலெழ நீண்ட காலம் சென்றது. அக் காட்சிகளுக்கிடையே கண்ணம்மாவின் கனிந்த பார்வை அவனைக் கை கூப்பி அழைப்பது போல் இருந்தது.

இந்த உலகையே மறந்து அவன் நின்று கொண்டிருக்கையில் திருமதி ஜின்ஜர் தன் வாழ்க்கை ஏடுகளைப் பிரித்துப் பிரித்து அவன் முன் வைத்துக் கொண்டிருந்தாள். "என்ன நான் சொல்வதைக் கேட்கிறீர்களா?" என்று அவள் கேட்டுக் கொண்டே, முதுகின் மீது தட்டவும் தன் உணர்வு பெற்று, பேச்சை விட்ட இடத்தில் தொடங்குகின்றவன் போல் தொடர்பில்லாமல் "இயற்

கைத் தாய் தன்னிடத்தே மறைந்து கிடப்பனவற்றை எவருக்கும் அறிவுறுத்துவாள் என்று ஆங்கில ஆசிரியர் பலர் எழுதியுள்ளதைத் தாங்கள் அறிவீர்களன்றோ? இயற்கை இன்பத்தினைத் துய்த்தற்கு ஆண்டில் முதிர்ந்தோர், இளைஞர் என்பது வேண்டியது இல்லை. எல்லோரையும் ஒரு நிலையில் கொண்டு தன் எழிலை எடுத்துக் காட்டும் இயற்கை அன்னாய்! நீ நீடு வாழ்க" என்றான்.

"நன்றாகச் சொன்னீர்கள், ராஜா!" என்று கூறிவிட்டு, "எனக்குத் திருமணமாகவில்லை......" என்று தொடங்கியவள் வேறு எதையோ நினைவு கொண்டு, "படிப்பின் பொருட்டா இலண்டன் செல்கிறீர்கள்?" என்றாள். "ஆமாம்" என்றான். தங்களுக்குத் திருமணம் ஆயிற்றோ? என்றாள். 'இல்லை' என்றான். திருமணமாகாத நாமிருவரும் ஒரே கப்பலில் செல்லுவது மிகவும் மகிழத்தக்கது என்று நான் எண்ணுகிறேன்!" என்றாள். அதில் என்ன மகிழ்ச்சி இருக்கிறதெனை அவனுக்குத் தெரியவில்லை! "இதோ பாருங்கள், கப்பலின் மேல் தட்டில் நின்று கடலினை உற்று நோக்கி என்ன இன்பத்தைக் காணுகிறீர்கள்? இதைவிட மேலான இன்பம் இல்லை என்று கருதுகிறீர்கள்?" என்றாள்.

"அப்படியொன்றுமில்லை, கடல் அலைகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டும் கட்டியணைத்துக் கொண்டும் கப்பலருகே வந்து தமக்குள் மறைவாக ஏதோ பேசிக் கொள்வது போல் தோன்றவில்லையா? என்றான்.

"ஆகா! மிக அழகாகச் சொன்னீர்கள்!" என்று திருமதி தன் குரலில் இன்பம் ததும்ப, "இதைப் பார்க்கையில் கள்ளம் கபட மில்லாத இரு உள்ளங்கள் வாழ்க்கையின் முடிவு காலம் வரையிலும் இந்த அலை

களைப் போல் எப்பொழுதும் கட்டி யணைத்து இணை பிரியாமல் இன்ப முறுவதைப் போல் ஒரு காட்சி தென் படுகிறது. அலைகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டு வருவதால் உண்டாகும் இசை இனிய பண் போன்றது. எனக்கு உங்கள் இசையிலும் பற்று உண்டு. நீலகிரிக்கு சிறுவயதில் அடிக்கடி வந்து போனதால் உங்கள் தமிழ் நாட்டு இசையையும் கேட்டு மகிழ்ந்திருக்கின்றேன். எனக்கு இப்படித் தோன்றுவது உங்களுக்கு எப்படிக் காட்சி தருகிறதோ ?" என்ருள்.

"எனக்கும் அப்படித்தான் !"

" ஆங்கிலக் கவிதைகள் அநேகம் படித்திருக்கிறேன். காதல் ததும்பும் கற்பனை ஓவியங்கள் பல வாசித்திருக் கிறேன். இயற்கையின் எழில் விளங்கும் பல இனிய நூல்களைப் பயின்றிருக்கின்றேன். ஆனல், இன்றுதான் உங்கள் வழியாகக் கடல் அலைகள் காதல் பெருக்கினைப் பாடுகின்றன என்னும் இன்பத் தன்மையைக் கற்றுக் கொண்டேன் ! அதற்காக என் நன்றியைத் தெரிவிப்பது முறை தானே ?"

திருமதியின் உள்ளம் சிதறும் நிலையினைச் சிறிதே அறிந்தான் செல்வன் நடராசன். "எனவே அம்மையே, இனிமையாக இதுவரை பேசிக் கொண்டிருந்ததற்காக என் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நான் சென்று வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே அப்புறம் செல்ல முற்பட்டான்.

" ராஜா ! சற்றுப் பொறுங்கள் ஏனிந்த விரைந்த செலவு ? அடுத்த நாள் என் பிறந்த நாள். எங்கள்

நாட்டு வழக்கப்படிக் கொண்டாடப் போகின்றேன். தாங்களும் கலந்து கொள்ளலாம் அல்லவா? அன்றைக்கு வந்து—மன்னிக்க வேண்டும்—சிறிதளவாவது மது அருந்தி என்னைப் பெருமை படுத்த வேண்டும். என்ன மயக்கம்? மது அருந்தும் பழக்கம் தங்களுக்கு உண்டல்லவா?" என்றாள்.

நடராஜனைக் கடலுக்குள் தூக்கிப் போட்டது போன்று இருந்தது! "அம்மணி! நான் உங்கள் அறைக்கு வருவதென்பது முடியாத செயல். அன்றியும் மது அருந்தும் வழக்கமும் என்னிடம் இல்லை, எங்கள் நாட்டிலும் மதுவினை அறவே நீக்கிவிட்டார்கள். நீங்கள் நீடுவாழ வேண்டும் என இறைவனை வணங்குகின்றேன். மன்னியுங்கள். வருகின்றேன்" என்று நடந்தான்.

"ராஜா கொஞ்சம் பொறுங்கள். உங்கள் வாழ்த்துகளுக்கு என் நன்றி. செல்வத்தில் சிறந்த அமெரிக்காவில் மது விலக்குத் திட்டம் வெற்றிபெற வில்லை என்பது உலகறிந்ததொன்று. எனவே உங்கள் நாட்டிலும் மது விலக்குத் திட்டம் நிறை வேறாது என்று நான் இன்று சொல்லுவதன் உண்மையை நீங்கள் பின்னால் ஒரு நாளைக்கு நினைக்க நேரிடும்" என்றாள்.

"அவ்வாறு எங்கள் நாட்டில் நேராதென்றே நாங்கள் நினைக்கிறோம். எங்கள் நாட்டில் நூற்றுக்கு இருபது பேர்கள் தான் கொல்லாமல் கொல்லும் கொடிய மதுவினை அருந்துகிறார்கள். அமெரிக்காவிலும் நாகரிகத் திமிர் கொண்ட உங்கள் நாட்டிலும் நூற்றுக்கு தொண்ணூற்றைந்து பேர் நாளும் மதுவை அருந்தி மண்ணுலக வாழ்க்கையில் மதிப்பை இழந்து மடிகிறார்கள். அன்றி

யும் குளிர் நிறைந்த உங்கள் நாட்டில் மதுவை மருந்தாக உண்ணுதல் மிக இன்றியமையாதது என்ற நம்பிக்கை கொண்டவர்களாய் நீங்கள் வாழ்கிறீர்கள்'' என்றான்.

"கூறியன நன்று. விஞ்ஞான முறைப்படி செப்பம் செய்த திராட்சைப் பழச் சாற்றினை மது என்று கூறுவோர் மதியற்றவர். இவ்வண்ணம் சொல்வதற்காகத் தாக்கிப் பேசுவதாக எண்ணித் தவறான கருத்துக் கொள்ளாதீர்கள்"

"மதுக்களி மாந்தும் மக்கள் அதனை மதுவன்று; பழச்சாறு என்று சொல்வது நல்லதுதான். மறுப்பவர் மடையர்தான்! அம்மையே! மாறுபட்ட கருத்தால் நீங்கள் கூறுவதை நான் தவறான கருத்தாகக் கொள்ள மாட்டேன்'' என்றான்.

பேசப் பேசப் பேச்சு நீண்டு செல்வதைத் தவிர்த்து நடராசனின் உள்ளக் கருத்தினை உணர முடியாது போவதைக் கருதினள் திருமதி. எவ்வாறும் செய்தி விளக்கம் பெற வேண்டும் என்னும் நினைவினளாய் "இக்கப்பலில் தங்களை முதற்கண் கண்டபோது சிறிது காலமேனும் தங்களுடன் பேசும் இன்பப் பொழுது போக்குக் கிட்டுமோ என்றையுற்றேன்'' என்று சொல்லி மேலும் பேசப் புகுமுன்னர் இடை மறித்து 'அம்மையே! நீளப் பேசி ஆவதென்ன? தாங்கள் சொல்ல விரும்புவதைச் சுருக்கமாக ஐந்து நிமிடங்களுக்குள் சொல்லுங்கள்'' என்றான் நடராசன்.

"காதலர்கள் உரையாடலில் கால நீட்டிப்பும் ஒரு வழி என்பது தாங்கள் அறியாததா?'' என்றாள்.

"காதலரைப் பற்றியும் கால நீட்டிப்பு வழி பற்றியும் நான் ஒன்றும் அறியேன், வருகின்றேன்" என வெடுக்கெனப் பதில் கூறி விரைந்தெழுந்தான்.

வழி மறித்த திருமதி "தாங்கள் குறிப்பிட்ட கால அளவு முடியவில்லையே. என் முன் இருக்கவும், பேசவும், பழகவும் துடிக்கும் இளைஞர்கள் எத்தனையோ பேர் காத்திருக்கத் தாங்கள் வெளியே செல்ல விழைகின்றீர்களே! இஃதென்ன விந்தை! நிற்க, சுருக்கமாக ஒரே சொல்லில் சொல்லி விடுகின்றேன். கா...த...ல்" என்று கூறி முடித்தாள்.

ஜின்ஜரின் சொற்கள் இஞ்சிச் சாற்றினும் கடுகடுப்பாய் இருந்தன நடராசனுக்கு; அன்றியும் அவை திகைப்பையும் ஊட்டின. அவள் முன்னர் அங்குச் சிறிதும் நிற்க உள்ளம் இல்லாதவனாய் உணர்ச்சியற்ற குரலில் "தங்களுக்குத் தக்க காதலன் நான் அல்லன்" என்று கூறிச் சூறவளியென விரைந்து நீங்கினன்.

இவ்வகைய எதிர்ப்புணர்ச்சியை எதிர் பாராத திருமதி உள்ளத்தளர்வினையும் ஊறி எழுந்த துன்பத்தினையும் ஒரு புறத்தே ஒதுக்கி "நாளைத் தாங்கள் கட்டாயம் என் அறையில் என்னைக் காணுதல் வேண்டும்" என உரக்கக் கூறினள்.

நடராசன் காதுகளில் இச் சொற்கள் விழுந்தனவோ?

இன்பக் கனவு

நடராசனின் பிறப்பு வளர்ப்பு அறியாமலே அவனிடத்துத் தன் உள்ளத்தினைத் திருமதி இழந்தாள். ஆங்கிலச் செல்வர் பலரின் அருமை மக்கள் தன்னைக் காதலிக்கவும், அக் கப்பலில் இந்திய இளைஞர்கள் பலர் இருக்கவும், திருமதி நடராசனிடமே மையல் கொண்டாள். இதனைக் காதல் என்றழைப்பதா? அல்லது உணர்ச்சியின் வழிப்பட்ட 'சாபம்' என்று சொல்லுவதா?

அன்றிரவு திருமதி உறங்கவில்லை. உறக்கமும் வரவில்லை. படுக்கையில் படுத்துப் படுத்துப் புரண்டு கொண்டிருந்தாள். நடராசன் பேச்சொலி காதில் விழுவது போன்ற நினைவே எப்பொழுதும் அவளுக்குத் தோன்றிக் கொண்டிருந்தது. மனமயக்கத்தினை மாற்றப் பிரஞ்சு ஆசிரியர் ஒருவர் எழுதிய காதல் நிறைந்த கதை ஒன்றினைப் படித்து இரவினைக் கழித்தாள்.

நடராசன் நடந்ததை அப்போதே மறந்து 'நான் மேற்கே போகிறேன்' என்னும் நூலில் விட்ட இடத்திலிருந்து எடுத்துப் படித்தான். பிறகு மெல்ல ஊர் நினைவு உள்ளத்தைத் தொடக் கற்பனை உலகில் மிதந்தான். தூக்கம் கண்களைக் கௌவியது. திருமதி தூங்காமல் துன்புற்றுக் கொண்டிருப்பதை அவன் அறிய மாட்டான்.

கப்பல் கரைசேர மூன்றே நாட்கள் இருந்தன. கப்பலில் செல்வோர் பலர் ஊக்கத்துடனும், மகிழ்ச்சியுடனும்

தங்களுக்குச் சொந்தமான பொருள்களை ஒன்று சேர்த்துத் தங்கள் பெட்டிகளில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தார்கள். மற்றும் பலர் செலவின் முடிவைக் கூடிய விரைவில் அடையப் போகிறோம் என்ற உவகையுடன் இருந்தனர். 'இந்திர லோகப் பதவி' யைத் தேடி இங்கிலாந்து செல்பவர்கள் உலகத்தை இன்னும் மூன்று நாட்களில் விலைக்கு வாங்குவதற்கான வேலைகளில் ஈடுபட்டுக் கூட்டல், கழித்தல் முதலான கணித உலகிலே கருத்தைச் செலுத்திக் கொண்டிருந்தனர்.

அரை குறையாக ஆங்கில மொழியைக் கற்றுக் கொண்ட அன்பர்கள், ஆங்கிலேயர்களுடன் பதினைந்து நாட்கள் கப்பலில் அல்லற் பட்டுப் பழகியும் தாங்கள் ஆங்கில அறிஞர்கள் ஆகவில்லையே என்று ஏக்கம் கொண்டு மேலும் ஆங்கிலேயர்களைத் தேடி அலைந்து கொண்டிருந்தார்கள் !

கடற் செலவினர் இவ் வண்ணம் பலவாறாகத் தங்கள் கருத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். அதே காலத்தில் கடலில் கொந்தளிப்பு மிகுந்து புயல் எழுந்தது. காற்றின் வேகம் கட்டுக் கடங்கவில்லை. இடியோசையும் அலையோசையும் மிக எழுந்தன. அலைகள் மலையென எழுந்து கப்பலின் அடித்தளத்தில் வந்து மோதின. கேட்டார் நடுங்கும் பேரரவம் கடலில் எழுந்தது; கப்பல் திசை மாறி மாலுமிகளின் போக்குக்கு நேர் மாறாய்ச் சென்றது. மேற்றிசையை நோக்கிச் சென்று தெற்கு வடக்காக, திக்குமுக்காடத் தொடங்கிற்று 'என்னை ரேசி'. உள்ளே இருப்பவர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந்தார்கள் !

உலகத்தையே மறந்து தூங்கிக் காலம் கழித்த பலர் தங்கள் இன்பமான நித்திரையினின்றும் நீங்கி எழுந்தனர். இந்த வகையைச் சேர்ந்த மற்றும் சிலர் மேல் தட்டிலிருந்து கீழே விழுந்து திகைத்து எழுந்தனர். ஆங்கில மொழியில் ஆழ்ந்த காதல் கொண்ட அரைப் படிப்புத் 'தம்பிரான்கள்', தங்கள் தாய் மொழியில் ஆர்வம் கொண்டு, தங்களுக்கு நேரும் தொல்லையைப் பற்றிப் பேசிக் கொண்டனர்.

கப்பல் வினைஞர்கள் எவ்வளவோ சொல்லியும் மரணத்திற்கு அஞ்சிய மக்கள் சிலர் அமைதி இன்றித் துயருற்றனர். எனவே மேலும் மேலும் பல செய்திகளைச் சொல்லி அவர்களுக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டியதாயிற்று.

நடராசன் தன் அறையில் உள்ளவர்களுக்கெல்லாம் ஆறுதல் சொல்லித் தேற்றி, கப்பலின் தட்டுகள் ஒவ்வொன்றுக்கும் சென்று அஞ்சியோரின் அவலத்தினைப் போக்கினான்; நம்பிக்கை இழந்தவர்களுக்கு நம்பிக்கை ஊட்டினான். தன்னால் ஆன உதவியை எல்லோருக்கும் செய்து வந்தான். ரின்னிங்டன் சீமாட்டி தன் படுக்கையினின்றும் கீழே விழுந்ததனால் நெற்றியில் சிறு காயம் ஏற்பட்டு, குருதி கசியத் தன்னறிவை இழந்தவளாய்ப் படுத்துக் கொண்டிருந்தாள். ரின்னிங்டன் பிரபு தமது தள்ளாத வயதில் தமக்கு ஏற்பட்ட அதிர்ச்சியையும் கவனியாமல், தம் மனைவி பக்கத்தில் இருந்து மருத்துவம் செய்து கொண்டிருந்தார்.

நடராசனுக்கு அக்காட்சி உருக்கமா யிருந்தது. அவன் பெரியவரை அமைதியுடன் இருக்கச் சொல்லி

விட்டுச் சீமாட்டிக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய ஒரு மணி நேரத்தில் அம்மையார் சிறிது சிறிதாகத் தன்னுணர்வைப் பெற்று எழுந்து இருக்க முடிந்தது. பெரியவர் நடராசன் கையைப்பிடித்துக் கொண்டு மன முருகச் சொன்னார்.

"அப்பனே, நாங்கள் ஒரு நாளும் இந்த உதவியை மறக்க மாட்டோம். இலண்டனுக்கு வந்ததும் என் வீட்டை உன் சொந்த வீடுபோல் கருதிக் கொள்" என்றார்.

நடராசன் திரும்பி வருகிற வழியில் திருமதி ஜின்ஜர் இருந்த அறை வழியாகப் போக நேர்ந்தது. திருமதிக்கு எப்பொழுதும் நடராசனைப் பற்றிய நினைவே இருந்தது. இருந்தாலும் 'நடராசன் கீழான விருப்பத்திற்கு அடிமைப் படாதவன். வாழ்க்கையில் உயரிய நோக்கங் களைக் கொண்டவன்' என்னும் செய்திகளை நன்கு அறிந்திருந்தாள்.

கப்பல் திசை தவறித் திண்டாடிக் கொண்டு போகிறதே என்று மற்றவர்கள் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்க, செல்வத்திற் சிறந்த சீமாட்டி ஜின்ஜர், கப்பல் கேடுறுவதைப் பற்றியும் வருந்த வில்லை, கோடி செம் பொன் மதிப்புடைய தன் செல்வத்தை விடுத்து அடுத்து நீரில் வாழ் மீன் இனங்களுக்கு இரையாகப் போகிறோமே என்பதைக் குறித்தும் துன்புற வில்லை; ஆனால் நடராசன் தன் அறைக்கு அன்று வருவானோ, வரமாட்டானோ, வந்தாலும் தன்னை ஏற்காவிடில் என்ன செய்வது என்பதைக் குறித்தே எண்ணிக் கொண்டிருந்தாள். எனவே அறையில் அங்கும் இங்குமாக உலாவிக்

கொண்டே நெஞ்சில் நூறுயிரம் நினைவுகளை நிறைத் தாள்.

நடராசன் மற்றவருக்குத் துணைபுரிந்தது போல் திருமதிக்கும் தன்னுலான உதவியைச் செய்யலாம் என்று எண்ணி அவளின் அறைக்குள் நுழைந்தான். அவன் திருமதியைக் கண்டதும் மிகவும் வெட்கம் அடைந்து வந்த வழியே திரும்பிப் போவ தென்று முடிவு செய் தான். ஏனென்றுல் உடம்பின்மேல் பட்டும் படாதது மான மிக மெல்லிய பட்டாடைகளை அம்மை அணிந்திருந் தது மல்லாமல், எள்ளத்தனை கவலையு மின்றிக் காணப்பட்டாள்.

வெளியே கொடுங்கோலாட்சி செய்யும் புயல் அவளை ஒன்றும் செய்ய வில்லை; ஆயினும் உள்ளத்துக் குமுற லாகிய புயல் அவளை வாட்டி வதைத்தது. அறைக்குள் நுழைந்ததும் நடராசனுக்கு வரவேற்பு சிறப்பாக நடந் தது. "என்னைப் பொருட்படுத்தி இங்கு வந்ததற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்" என்றுள் ஜின்ஜர். "நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். கப்பல் அதிர்ச்சியில் அஞ்சியோ அல்லது வேறு ஏதேனும் வேதனைக்குட்பட்டோ இருப்பின் என்னுல்லான உதவி யைச் செய்யவே வந்தேன். நீங்கள் எவ்வதிர்ச்சியுமின்றி இருப்பதைப் பார்க்க மிக மகிழ்ச்சி" என்றுன். "என் மீது கொண்டுள்ள பற்றுக்கு நன்றி. நம்மைப் போன்ற வர் இறப்பதற்கு அஞ்சலாமோ? 'கோழைகள் இருந் தும் ஆயிரம் முறை மடிகிறுர்கள்' என்ற ஆங்கிலப் பழமொழியை நீங்கள் கேட்டிருப்பீர்களே" என்றுள்.

"உண்மை தான். மேலான பண்பும் கூட. நல்லது, உங்கள் வீரத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன்" என்றான் நடராசன் சிரித்துக் கொண்டே.

"என்னைப் புகழ்ந்து பேசுவது போலவே என்னைக் காதலித்தால், என் வாழ்வே சிறப்படையும்."

"தாங்கள் அருள் கூர்ந்து காதல் என்னும் சொல்லினை அடிக்கடி என்னிடம் சொல்லாதீர்கள். வேறு எதையும் பேசும் விருப்பம் தங்களுக்கு இல்லையானால் நான் சென்று வருகின்றேன்" என்று சொல்லிக் கொண்டே எழுந்தான்.

"இருங்கள், இருங்கள், விரைந்து ஒரு முடிவுக்கும் வந்து விடாதீர்கள். நம்மைப் போன்ற ஈரிளம் உள்ளங்கள், ஓரிடத்தில் இருக்க நேரிட்டால் காதல், அன்பு, இன்பம் என்பவைகளைப் பற்றிப் பேசாமல், இறப்பின் நுண்மையைப் பற்றியா பேசுவார்கள்? உங்கள் நாட்டின் பழக்க வழக்கங்களில் இதுவும் ஒரு பகுதி போலும்! சரி, அதையும் கொஞ்சம் சொல்லுங்கள்" என்றாள்.

"எங்கள் நாட்டிலே பருவம் எய்திய திருமணமாகாத ஆணும் பெண்ணும் ஓரிடத்துத் தனியே இருந்து பேசும் பழக்கமே கிடையாது".

"என்ன என்ன? ஓராணும் பெண்ணும் தனியாகப் பேசுவதே குற்றமா? வியப்பாகத்தான் இருக்கிறது! மிஸ் மேயோ என்ற அமெரிக்க நாட்டு அம்மையார், உங்கள் நாட்டில் பெண்கள் வீட்டினுள் அடக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் தமக்கென உரிமை இன்றி

ஆண்களின் வழி இயங்கும் கருவிகளாக விளங்குகின்றார்கள் என்றாரே! அது உண்மைதானே?'' என்று கேட்டாள்.

"மிஸ். மேயோ அம்மையார் தம் அரை குறைப் படிப்பின் தவறுதல்களை நூலின் வழியாக வெளியிட்டுத் தன்னைப் போன்ற அறிவற்றவள் உலகத்திலேயே இல்லையெனும் உண்மையை மெய்பிக்கும் எண்ணத்துடன் எழுதியிருக்கிறார். மேல் நாட்டாரைப் போல இந்தியர்களும் இழிக்கத்தக்க பழக்க வழக்கங்களுக்கு அடிமைகள் ஆகவில்லையே என்ற பொறாமையுடன் எழுதிய நூலின் உட்கிடையை உணராது, உங்களைப் போன்ற கற்றறிந்த மேல் நாட்டுப் பெண்மணிகள் ஒவ்வொரு நாட்டின் பழக்க வழக்கங்களிலுள்ள நன்மை தீமைகளை சீர் தூக்கிப் பாராமல், முடிவான கருத்துக்கு வருதல் தவறு என்பது என் கருத்து; அன்றியும் வேண்டுகோளும் ஆகும்!'' என்றான்.

"நன்று; நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை. என்னை மன்னியுங்கள்'' என்று சொல்லி விட்டுத் தயங்கிய வண்ணம், "என் கேள்விக்கு இன்னும் நீங்கள் பதில் அளிக்கவில்லையே......'' என்றாள்.

நடராசனும் அமைதியாகவே, "அம்மையே உங்கள் உள்ளக் கருத்தை நான் உணர்வேன். நான் ஓர் இந்தியன். கரு நிறத்தினன் என்றுணர்ந்தும், பெறலரும் செல்வத்துடன் தாங்கள் திகழ்ந்தும் என்னை உண்மையாகக் காதலிக்கின்றீர்கள் என்பதனை அறிவேன். ஆனால் தங்கள் காதலை ஏற்றுக் கொள்ள என்னால் இயலவில்லை. ஏனெனில் எங்கள் நாட்டிலேயே நான் ஒரு பெண்ணைக் காதலித்து விட்டேன். என் உள்ளம் அவளுக்கு ஏற்கனவே உரிமையாகி விட்டது என்ற உண்மையினை உங்களுக்குத்

தெரிவித்து விடுகிறேன். ஒருவன் தன் வாழ்க்கையில், இன்பத்திலும் துன்பத்திலும், ஒரே ஒரு பெண்ணைக் காதலித்து, மணந்து அதனால் ஏற்படும் பயன்களைத் துய்க்க வேண்டுமென்பது எனது உறுதியான முடிபு. ஆகவே நான் இன்று முதல் தங்களை என் உடன் பிறந்தவரைப் போல் கருதுகிறேன். இந்த முடிவை, நல்ல முடிவு என நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். நீங்கள் என் உடன் பிறந்தவர்'' என்றான்.

திருமதி ஜின்ஜரின் இருண்ட உள்ளத்தில் ஒளி பரப்பியது நடராசனின் சொற்கள். சிறிது காலம் ஒன்றும் பேசமுடியா உணர்ச்சி நிலையினை முற்றப் பெற்றாள் திருமதி. பின்னர் மென்மையான குரலில் ''தங்களிடத்து எனக்கு அழியாக் காதலுண்டென்பதைத் தாங்கள் அறிவதே எனக்குப் போதும். தங்கள் வரலாறு தங்களிடத்து வெறுப்பினை ஒழித்து விருப்பத்தினை வளர்க்கின்றது.

இன்றையிலிருந்து தங்களை என்னுடன் பிறந்தவராகப் பெற்றமையை எண்ணும் தோறும் மகிழ்ச்சி பெருகுகின்றது. தெளிவாக நோக்கின், அன்பும் காதலும் வேறு அல்ல; இந்தத் தூய அன்பு நிலைத்துச் செழிக்க, ஒரு வேண்டுகோள். தங்கள் நல்வாழ்வுக்காக என் செல்வம் எல்லாவற்றையும் ஈடுபடுத்துவது என்பது என் விருப்பம்! அச்செயலொன்றே இனி எனக்கு இன்பம் தர வல்லது; ஆதலின் மாறாது ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று தன்னிரு கண்களிலும் நீர் ததும்பக் கூறினாள். உள்ளத்துத் தோன்றி உடல் முழுவதும் நிறைந்து வழிந்தோடிய அன்னவளின் அன்பினை அறிந்து நின்றான் நடராசன்.

திருமதி ஜின்ஜரின் முக அழகுக்கு அடிமையாகா விட்டாலும் அவள் அக அழகுக்கு அடிமையானான் நடராசன். தன்னுடன் பிறந்த தங்கை இல்லையே என்ற குறை அன்றோடு தீர்ந்ததெனப் பூரித்துப் போனான்.

நடராசன் இவ்வாறு எண்ணங்களில் ஆழ்ந்திருக்கும் சமயத்தில் திருமதி, உடல் காட்டும் உடைகளை மாற்றிக் கொண்டு, குடும்பப் பெண் போல் அவன் முன் வந்து நின்றாள். நடராசன் அதைக் கண்டு, "உடன் பிறந்தோய்! ஒரு தாய் வயிற்றில் பிறந்த உரிமையால் உடன் பிறந்தவராதலை விடச் சமய நெறியால், இனத்தால் மாறுபட்ட இரு தாயார் வயிற்றில் பிறந்தோர் உடன் பிறந்தவராக வாழ்தல் சாலச் சிறந்தது. உலகத்தின் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய பெருந் திக்குக்களில் பிறந்தோர் இவ்வண்ணம் ஒன்றிய உள்ளத்தினராய்விடின் உலகப் போருக்கும் பேராசைக்கும் இடமின்றி அழியும். ஆனால் பேராசைப் பேயால் விழுங்கப்பட்ட அரசியல் அறிஞர்கள் இவ்வகைய கொள்கைகள் பரவாமலிருத்தற்கு அடிக்கடி முட்டுக்கட்டைகள் போட்ட வண்ணம் இருப்பார்கள். இது பற்றியவற்றை நம் முதியவருக்கும் அரசியல் வினையாளர்க்கும் விட்டு வைப்போம். நம்முள் இனி வேறுபாடென்பதில்லை. என் நாட்டு அரசினரே எனக்குக் கல்வியின் பொருட்டாகும் செலவினை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்; ஆதலின் தாங்கள் அளிக்க முற்படும் உதவியை ஏற்றுக்கொள்ள முடியாதவனாக இருக்கிறேன்; ஆகவே மன்னிக்கவும். எனக்கு ஓய்வு நேரும் காலங்களில் தங்கள் மாளிகைக்கு வருகிறேன்" என்று சொல்லி அவளைத் தேற்றி விடை பெற்றுத் தன் அறைக்குச் சென்றான்.

மறுநாட் காலையில் அமைதி ஏற்பட்டது. இயற்கைத் தேவி சற்றுச் சாந்தத்தோடு விளங்கினாள். கப்பலும் யாதொரு தொல்லையும் இன்றித் தன்னை நம்பி வந்தவர்களை நடுக்கடலில் கைகழுவி விடாமல் கரை கொண்டு வந்து சேர்த்தது! கப்பலில் வந்தோர் தத்தம் இடங்களுக்குப் புறப்பட்டார்கள். நடராசன் தன்னோடு வர மறுக்கவே, திருமதி ஜின்ஜர் தனக்காக வந்த மோட்டாரில் ஏறிச் சென்றாள்.

ரின்னிங்டன் தம்பதிகள் நடராசனுக்குத் தங்கள் ஆசியைத் தெரிவித்துத் தங்கள் மாளிகைக்கு அடிக்கடி வரும்படி கேட்டுக்கொண்டு தங்கள் இல்லத்தை நோக்கிச் சென்றார்கள்.

நடராசனும் இலண்டனை அடைந்து கேம்பிரிஜ் என்னும் கிராமத்திலுள்ள கிங்ஸ் கல்லூரிக்குப் போய்ச் சேர்ந்தான். அங்குத்தான் அவன் கல்வி பயில வேண்டிய இடம். மாணவர்கள் சிலர் கிளர்ச்சியுடன் வரவேற்றனர்.

இரங்கப்பம்பாளையம்

நடராசனுடைய தாய் வள்ளியக்காள் கணவனையும் சொத்துக்களையும் இழந்தாலும் கவுண்டர் வீட்டில் மகனோடு சிறிது அமைதியுடன் தான் வாழ்ந்து வந்தாள். 'சென்றதினி மீளாது' என்ற நினைவுடன், தனக்கு மாணிக்கம் போல் ஒரு மைந்தனிருக்கிறான் அதுவே போதும் என்ற உவகையுடன் காலத்தைக் கழித்து வந்தாள். ஆனால் திடீரெனத் தன் மகன் தன்னை விட்டுப் பிரிந்து போன துக்கத்தை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தன் மகன் படிப்பு ஏறாத மண்டு மாணிக்கமா யிருந்தால் கூட இவ்வகைத் துன்பம் தனக்கு நேர்ந்திராதே யென்று அடிக்கடி நினைத்து நொந்து கொண்டாள். ஒவ்வொரு நாள் செல்வதும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றியது. கன்றை இழந்த பசுவைப் போல் துயரக்கடலில் மூழ்கினாள். உடம்பு துரும்பாக இளைத்து விட்டது.

நடராசன் சிமைக்குச் செல்வதற்குச் சில தினங்களுக்கு முன்பே வியாதியின் கொடுமை தாங்காத தருமசாமிக் கவுண்டர் நிலைமை இப்பொழுது மிகவும் துன்பமான நிலைக்கு வந்து விட்டது. தாம் உடல் வளத்துடன் இருந்த வரையில் தமது நில புலன்களை யெல்லாம் பிறர் உதவியின்றித் தாமே கண்காணித்து வந்தார். யாரேனும் உதவி செய்ய முன்வந்தாலும் அவர்கள் உதவி தனக்கு வேண்டியதில்லை யென்று கூறித் தம் உடல் பலத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டவராய்த் தாமே ஓய்வு ஒழிச்சலின்றி வேளாவேளைகளில் தக்க உணவின்றி எல்லா வேலைகளையும் கவனித்து வந்தார்,

அதன் பலனாக தற்போது கவுண்டர் படுத்த படுக்கை ஆயினர். எனினும் அவரது உள்ளம் ஓய்வு கொள்ள வில்லை. அது மேலும் விரைவாய் ஓடியாடி வேலை செய்து கொண்டுதான் இருந்தது!

"நான் திடுமெனக் கண்ணை மூடிவிடின் பின்னர் இச்சொத்தினைக் கண்காணிக்க யார் இருக்கின்றார்கள்? வளர்ப்புக் குழந்தை நடராசனிடம் ஒப்புவிக்கலாம்; ஆனால் அவன் மேல் படிப்பிற்காக மேல் நாடு சென்று விட்டானே! படித்துத் திரும்பி வரினும் பெரிய ஆங்கில நாட்டுத் திருமகனாகத்தானே வருவான். பட்டிக்காட்டில் வாழ இசையாது பட்டினத்திலிருக்கத் தானே விரும்பு வான்? படித்து வரும் அவன் இக் குடித்தன வாழ்க் கையில் விருப்பங்கொள்வானா?"

"படித்தற்குச் சென்றவன் என் இசைவோடு தானே சென்றான். 'செல்ல வேண்டாம்' என்று நான் கூறியிருக்கலாமே! அவ்வாறு சொல்ல அப்பொழுது அறிவு தோன்றவில்லையே! இடும் கட்டளைக்கு ஏறுமாறு கூறாது, கூறியவாறு நடக்கும் குற்றம் அற்ற வன் ஆயிற்றே அவன்! குற்றம் அவனிடத்ததோ?"

"சிறிது காலம் குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்தி னானே! அக்காலத்து எத்துணை ஒழுங்காக நடந்தான். இந்தக் கொடிய நோய் தன் பிடி தளராதிருந்திருக்கும் என்றறிந்திருந்தேனானால் அவனைப் போகாவண்ணம் தடை செய்திருப்பேனே!"

"இப்பொழுது தான் என்ன கெட்டுவிட்டது? மருத்துவர்கள், உடல் நிலை மிகக் கெடும் நிலைக்கு வந்து விட்டது எனக் கூறின் தந்தி கொடுத்து தருவித்து விடு

வோம்'' இவ்வாறு பல எண்ணி ஏங்கினார் கவுண்டர். எனவே பிணியினும் நடராசன் பிரிவே கவுண்டரை மிக வாட்டிற்று.

தம் உள்ளத்தினை ஒருவாறு தேற்றிக் கொண்ட கவுண்டர் ஒருவருமறியாதவாறு வழக்கறிஞரைக் கூட்டி வந்து தமக்குப் பின்னர்த் தம் சொத்துக்களைக் கண்காணித்து வரும் உரிமை நடராசனுக்கென்பதாகத் தம் விருப்பத்தினை எழுதுமாறு கூறினார். அவ்வாறே எழுதப்பட்ட ஆவணத்தினைக் கவுண்டர் கையெழுத்திட்டுப் பதிவு செய்தார். இந் நிகழ்ச்சியின் பிறகு கவுண்டரின் உள்ளம் அமைதியுறச் சிறிது சிறிதாக அவரை வாட்டிய நோயும் விலகத் தொடங்கிற்று.

கண்ணம்மாவின் உள்ளம் வெயிலில் இட்ட முல்லை மலரைப் போல் வாடிச் சோர்ந்தது. இருப்பினும் தனது உள்ளக் கவலையை பிறர் அறிய வெளிக்குக் காட்டிக் கொள்ளும் நிலைமை இன்னும் வரவில்லை! அன்றியும் நோயால் வருந்திய தன் தந்தையாரையும், வள்ளியக் காளையும் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வேண்டிய பணி விடை செய்வதில் ஈடுபட்டிருந்தாள்.

அண்ணன் மேல் கசப்போடு சென்ற செல்லக்காள் தன் மகனுக்குப் பெண் கொடுத்தால் ஒழிய அண்ணன் வீட்டை இனிமேல் எட்டிப் பார்ப்பதில்லை என்னும் முடிவுக்கு வந்து விட்டாள். பயனில் பேசிக் காலத்தைக் கழித்து வந்த செல்லக்காளின் குடும்பத்தில் தம் பெண்ணைக் கொடுக்க அவ்வூர் வாழ்ந்தோர் எவரும் ஒருப்படவில்லை. ஏழைக் குடும்பத்தில் பிறந்த பெண்களைச் செல்லக்காள் ஏற்க இசையவில்லை. தன் மகனுக்குத்

திருமணம் செய்து வைத்து அவன் மகிழ்ச்சியுடன் வாழ் தலைக் கண் குளிரக் காணும் விருப்பம் அவளுக்கில்லை; தன் மகன் பொம்மையாய் அமையச் செல்வத்தினை அவன் திருமணத்தின் வழியாகத்தான் மணந்து மகிழ வேண்டும் என்பதே அவள் ஆசை.

தன் முயற்சியால் தக்க இடத்தில், பெரும் பணத் தைச் சீதனமாகக் கொண்டு வரும் மருமகள் தனக்குக் கிடைக்கவில்லை என்று செல்லக்காள் சிறிதும் வருத்தப் படவில்லை. மகனுக்கோ 'கங்கணயோகம் இன்னும் வரவில்லை, காத்திருந்துதான் பார்ப்போமே' என்று தன் மனதைத் தேற்றிக் கொண்டாள். 'ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் வாடியிருந்த, செல்லக் கொக்குக்குச் செல்வத்திமிர் கொண்ட மீன் ஒன்று தூண்டியில் அகப் பட்டது நூறுகாணி நிலங்களுக்கும் குறைவாய் இருந்த ஒரு மிராசுதார் தமக்குத் தாமே ஜமீன்தாரர் என்னும் பெயரிட்டுக் கொண்டு தம் அருந்தவப் புதல்வி 'அழகு ரத்தினம்' எனும் பெயரினைத் திரிபுர சுந்தரனுக்குத் திருமணம் செய்து கொடுக்க ஆவலுடனிருப்பதாகக் கடிதம் எழுதினர். செல்லக்காளுக்கு இக்கடிதம் வியப் பினை அளித்தது. மகனையும் கேளாமல், கணவன் இசை வையும் பெருமல் விட்டு வினைஞன் வழி மகிழ்ச்சியுடன் மாப்பிள்ளை விட்டார் இத்தொடர்பினை வரவேற்பதாக எழுதி விட்டாள். திருமணமும் சிறப்பாக நடந்தேறியது. இரு விட்டாரும் ஏற்ற இணைப்புக்கள் என்றே சொல்ல வேண்டும். ஆனல் மணமக்கள் செய்தியில் பெருந்த ஏமாற்றமான திருமணம் என்றே கூற வேண்டும். ஏனெனில் திருமணமான சில நாட்களில் பெண் பெரும் செவிடு என்பதை மாப்பிள்ளை உணர்ந்தான். மாப்பிள்ளை

விலங்குத்தனம் வாய்த்த 'முரடு' என்பதை மணப் பெண் உணர்ந்தாள்.

செல்லக்காள் ஜமீன்தாரரைச் சுரண்டப் பார்த்தாள். ஜமீன்தார் செல்லக்காளைச் சுரண்டப் பார்த்தார். இருவரது எண்ணமும் ஈடேறவில்லை!

இந்தத் திருமணத்திற்கும், தருமசாமிக் கவுண்டர் குடும்பத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை; பங்குமில்லை. நேரில் சென்று தன் அண்ணனை அழைக்காவிட்டாலும், திருமணத் திருத்தாளையேனும் அஞ்சல் வழி அனுப்பியிருக்கலாம். சினத்தில் சிறந்து செல்வச் செருக்கில் சிக்குண்ட செல்லக்காள் இவ்வாறு செய்தால் தான் இதுவரை பாடுபட்டுத் தேடிய 'நல்ல பெயர்' கெட்டுவிடும் எனக் கருதித் தன் அண்ணன் வீட்டினையே அடியோடு மறந்து தன் திருமகன் திருமணத்தினைச் செய்து முடித்தாள்.

நேர்தல் திருவிழா !

தொடக்கத்தில் நடராசனுக்கு யாவும் வியப்பை ஊட்டின. இலண்டனுக்கு வரும் முன்பே அக்கல்லூரியினைப் பற்றி அவன் கேள்விப் பட்டிருக்கிறான். " உலக வரலாற்றில் பெருமை பெற்ற கல்லூரிகளில் இஃதும் ஒன்று. இக்கல்லூரி புதிய கட்டிட அமைப்பு முறைப்படி அமைந்ததன்று. பண்டைக்கால முறைப்படி அமைந்த பழமையான கட்டிடம். எண்ணற்ற மாணவர்களை வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்காகவே செப்பம் செய்து தன் வாழ்த்துக்களுடன் வெளி உலகிற்கு அனுப்பிய பெருமையைக் குறித்து அக் கட்டிடத்தில் பொதிந்துள்ள கல், மண், செங்கல் உட்பட எல்லாப் பொருள்களும் உவகை கொள்கின்றன" என்றும் அவன் அறிந்திருக்கின்றான்.

இக்கல்லூரியில் பயின்று பல தேர்வுகளிலும் வெற்றி கண்ட நம் தாய் நாட்டு மாணவர்கள் பலர் இன்றும் நம் அரசியலில் தக்க தகுதிகளில் இருந்து வருகின்றனர். கல்வியைப் பொறுத்த வரையில் நம் நாடு பிற்போக்கானது என்று கூறுதல் பொருந்தாததாகும். கற்றுக் கேட்டறிந்த அறிவுத் தன்மைகளை எல்லாம் எங் நாடும் பிற நாடுகளுடன் வேறுபாடின்றி உடன் கூட்டித் துய்ப்பதே உலக அமைதிக்கு அடி கோலுவதாகும்.

ஆங்கிலக் கல்லூரிகளின் முதன்மை நோக்கம் மாணவர்களை உண்மை மாணவர்களாக்கிச் சிறந்த மக்களாக வெளி அனுப்புவது. இந் நற்பழக்கத்தினைப் பிற நாட்

டினர் மேல் ஆங்கில நாட்டார் காட்டாமைக்கு நடராசன் கவன்றான்.

மாணவர் தம் நினைவுகளை ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகக் கூறுதற்குரிய வாய்ப்புகளும் வேண்டுமளவு உடல் வன்மையினை வளர்த்து வைப்பதும் ஆகிய அக்கல்லூரியின் செயல் முறைமை நடராசனுக்கு மிக விருப்பமாக இருந்தது. பரந்த வெளியிடங்களில் ஓடி ஆடி விளையாடுவதும், மகிழ்ச்சியில் மறந்து காலத்தைக் கழிப்பதும் மாணவரின் கல்வியில் ஒரு பகுதியாக இருந்தது. கற்றுக் கேட்டவைகளை உணராமலும் ஒழுங்குறப் பொருள் விளங்கிக் கொள்ளாமலும் திரிபுணர்ச்சி கொண்டும் வாழும் மாணவர் அக்கல்லூரியில் படிப்பது இயலாதது.

சிறிய கல்லூரியினைத் தான் அடைந்தது குறித்து உள்ளத்தே அமைதி பெற்றாலும் தன் தாய் நாட்டினையும் தாய் நாட்டுக் கல்வியினையும் எண்ணுங் காலத்தில் உளம் சோர்ந்தான். அக்கல்லூரியில் பயின்ற மாணவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் செல்வம் கொழிக்கும் ஆங்கிலச் செல்வர்களின் மக்கள்; சிலர் நடுநிலைய செல்வத்தினராயினும் சிறந்த அலுவலாளராகத் திகழ்வோரின் பிள்ளைகள்; மிகச் சிலரே நடராசனைப் போன்றவர்கள். தன் போன்றோரைக் காண்பது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

நடராசன் கல்லூரியில் சேர்ந்து ஆறு தினங்கள் ஆகிவிட்டன. உணவு உடைகளில் அவன் முற்றும் மாறவில்லை. எளிய உடை அணியினும் ஏற்ற முற்ற உடை அணியினும் நடை முறைகளில் மாறுபாடின்றி

விளங்கி எல்லாருடனும் பழகினமையால் ஆசிரியர்களும் மாணவரும் அவனை விரும்பினர் எனின் மிகை அன்று.

கேம்பிரிட்ஜ் கல்லூரியில் ஒவ்வோராண்டும் கல்லூரிக் கழகத்திற்குச் செயலாளரை மாணவர்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுப்பது வழக்கம். எவரும் இத்தேர்வில் வென்று செயலாளராவது மிகக் கடினம். இத் தேர்வினை நோக்கின் பதினுயிரம் வாக்காளர் கொண்ட தமிழ் நாட்டுத் தொகுதி ஒன்றில் போட்டியிட்டுச் சட்ட சபையில் உறுப்பினராவது குழந்தை விளையாட்டு எனலாம்.

கல்லூரிக் கழகத்திற்கு ஆங்கிலச் செல்வரின் மக்களையே தேர்ந்தெடுப்பது வழக்கம். அங்குப் படிக்கும் இந்திய நாட்டு மாணவர்கள் அத்தகுதியினை எண்ணியும் பார்க்க மாட்டார்கள்.

நடராசன் ஒரு நாள் தன் அறையில் இருந்து ரின்னிங்டன் அவர்களைச் சந்தித்து நாளாயிற்றே என எண்ணிக் கொண்டிருந்தான். அவ்வேளையில் சில ஆங்கில மாணவர்கள் அவன் அறைக்குள் நுழைந்து சிந்தனையைக் குலைத்தனர். கல்லூரியின் கழகச் செயலாளராக மாணவர்கள் நடராசனையே போட்டியின்றித் தேர்ந் தெடுப்பதாக முடிவு செய்ததைத் தெரிவித்தார்கள். அந்தச் செய்தியைக் கேட்ட நடராசன் வியப்பில் மூழ்கினுன். தனக்கு அத் தகுதி தரப்படுகின்றதே என்பதை எண்ணி வியந்தானல்லன்; ஆனுல் தக்கவர்களைத் தேர்ந்து பாராட்டும் பண்பும் அவர்களிடத்திலிருக்கின்றது என்பதையே எண்ணி வியந்தான். அப்படி எண்ணிக் கொண்டிரும் காலத்தில் அங்கு வந்த மாணவர்களில் சிலர் 'இனி நீ மறுத்தலாகாது. நீ ஏற்றுக் கொண்டதாகவே

நாங்கள் முடிவு செய்து விட்டோம்' என்று சொல்லி நடராசன் கூறுவனவற்றையும் கேட்காது சென்றனர்.

தேர்தலுக்கு முந்திய நாள் வரையிலும் போட்டியாக யாரும் நிற்கவில்லை யாதலால், நடராசன் செயலாளன் ஆய்விட்டான் என்று அவன் ஆதரவாளர்கள் கருதினர். தேர்தல் நாளன்று நடராசனுக்கு எதிராக ஒரு பெரிய ஆங்கிலச் செல்வரின் மகன் போட்டியாக நின்றான் என்னும் செய்தி உறுதியாயிற்று. இரண்டு கட்சியினரும் பெரிதும் உழைத்தனர். ஆங்கில மகன் ஏராளமாகச் செலவு செய்து தம் நண்பர்களுக்குத் தேநீர் விருந்துகளும், மது விருந்துகளும் அளித்தான். மற்றவர் தரும் சம்பளத்தில் கல்விகற்கும் நடராசனுக்குச் செலவு செய்ய விருப்பமுமில்லை. செலவு செய்ய வன்மையும் இல்லை. மற்றவர்கள் செலவு செய்வதாகச் சொல்லியதையும் வேண்டாம் என்று கண்டிப்பாக மறுத்து விட்டான்.

நடராசனை எதிர்த்து நின்றவன் புன்னகை தவழும் முகத்தோடு சில பொருத்தமற்ற செய்திகளைத் தன் நண்பர்கள் பொருள் புரிந்து கொள்ளாதவாறு பேசிக் கொண்டிருந்தான். தன் சட்டைப் பைகளுக்குள் தன் இரு கைகளையும் அழுத்தி, கழுத்துப் பட்டையையும் மேல் அங்கியையும் அடிக்கடி சரி செய்து கொண்டே இருந்தான்!

இறுதியாக 'வாக்கு' களை எண்ணி நடராசனே வென்றதாக அறிவித்தார்கள். இந்திய மாணவரின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. நடராசன் மற்ற மாணவர்களுக்கும் நன்றி கூறி இனித்தான் செய்யப்போகும்

செயலில் யாவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

தோல்வி மனப்பான்மையை வென்ற நாடு ஆங்கிய நாடாதலின் எதிர்த்து நின்ற ஆங்கில மகன் தன் தோல்வியை மறந்து நடராசனைப் பாராட்டிப் பேசியது மட்டுமன்றி செயலாளனாகத் தொண்டாற்றும் முழுத்தகுதி நடராசனிடம் இருப்பதாக வெளிப்படையாகவும் உள்ளத்தில் கள்ளம் இல்லாமலும் சொன்னான். கேட்டோர் நடராசனைப் போலவே மகிழ்ந்தார்கள்.

காளியின் திருமுன்னர்

கண்ணம்மா மருத்துவரைப் போன்று நோயைத் தீர்ப்பதில் பெரிதும் ஈடுபட்டிருந்தாள். தன் அன்பனை நினையாது அவள் இருந்ததில்லை. செயலில் ஈடுபடுகையில் மறந்திருந்தாலும் தனிமையில் அவனைப் பிரிவுத் துயர் வாட்டி வதைத்தது. நடராசன் வருவதற்கு இன்னும் எத்தனை நாள் ஆகுமோ அறிய மாட்டாள். நாளும் நாளும் பிரிவினால் நைந்து வாடினாள் கண்ணம்மா.

பொதுவாக உலகில் மகிழ்ச்சியையோ துன்பத்தையோ பகிர்ந்து கொள்ள மற்றவர்களையும் உடன் சேர்த்துக் கொள்வது சிலரது பழக்கம். 'சொன்னால் குறை தீரும்' என்பது பழமொழி. கண்ணம்மா தன் உள்ளத் துன்பத்தினைப் பிறர்க் கெடுத்துக் கூற விழைந்தாள். துன்பத்தினைப் பகிர்ந்து கொள்ளும் உயிர்த்தோழியர் அவளுக்கு இல்லை. எனவே வீட்டிற்கருகே விளங்கிய காளி கோயிலுக்கு நாள் தோறும் சென்று வந்தாள்.

ஒரு நாள் கருத்தெழுந்த மேகம் விண்ணில் நிறைந்திருந்தமையின் கோயிலுக்கு எவரும் வரவில்லை. கண்ணம்மா கோவிலின் உட்சுவரினை அடைந்த போழ்து அங்கு யாரும் இல்லை, எனவே காளியின் முன்னர்த் தன துள்ளக் குமுறல் அத்தனையும் கூறித் தீர்த்துவிடக் கருதினாள்.

" தாயே! உலகெங்கும் நீக்கமற நிற்கும் அம்மையே! நீ எல்லாம் அறிந்தவள்; நான் சொல்லி அறிய வேண்டுவது என்பது இல்லை. தெரிந்தும் தெரியாதவள் போன்று ஒதுங்குவது நலமா? "

"அவர் இன்றி நான் வாழ்தல் இயலுமா? எங்கள் உள்ளத்தின் பிணிப்பினை அணுக்கள் தோறும் நிறைந்திருக்கும் நீ அறிய மாட்டாயா? அவரைப் பிரிந்து நான் அல்லலுறுவதை நீ தெரிய மாட்டாயா? அணு அணுவாய் நாள் தோறும் தேய்ந்து நிற்கும் என் நிலையினை உணர மாட்டாயா? பெண்ணினத்தைச் சேர்ந்த நான் இவ்வண்ணம் பெருந்துயருறுவது உன் கண்களில் படவில்லையா?"

"வலக்காலினை ஊன்றி இடது காலினை எடுத்து வீசும் எம் பெருமான் நடராசனைக் காணாது இருக்க நின்னால் முடியாதென்கிறார்களே! அவ்வாறாயின் என் நிலைமையினைச் சிறிது கருதுவதால் நின் அருளுக்குக் குறை நேர்ந்து விடுமோ?"

"நீ நின் காதலனோடு மகிழ்ந்திருக்க நான் என் உள்ளம் கவர்ந்த உண்மையாளனை ஏழாயிரம் கல் தொலைவுக்கப்பாலிருத்திப் புழுங்குவது நினக்குப் பொருந்துமா? 'சிவகாமி' என்று நின்னை அழைக்கின்றார்களே உலகத்தினர்; அப்பெயர் நின் உரிமைப் பெயராயின் என் கவற்சியினைப் போக்குவது நின் கடமையன்றோ?"

"அம்மா! காலை அலர்ந்த மலர் போன்ற நான் கொடுங்கதிரவன் கதிர்கள் போன்ற பிரிவு வெயிலினால் மேலும் வாடாதிருக்க அருள் புரிக. நின் மலர்த்தாள்கள், சேர்ந்தாரின் இடும்பை போக்குவன என்கிறார்களே; சேர்ந்த என் பேரிடும்பையினைப் போக்க வேண்டும் அம்மா!"

இவ்வண்ணம் பல கூறிக் கண்களில் நீர் வழியக் கசிந்து நின்றாள். இவள் கூறியனயாவற்றையும் கருவறைக்கருகே கரும் இருட்டில் நின்று ஒரு பெண் கேட்டுக்கொண்டிருந்ததைக் கண்ணம்மா அறிய மாட்டாள்.

அன்று மழையில் நனைந்ததாலும், மனக்கோளாறினாலும், அவள் உடல் நிலை கெட்டது. உணவும் ஒழுங்காகக் கொள்ளவில்லை படுத்த படுக்கையாயினள், எழுதற்கும் வன்மை இல்லை வள்ளியக்காளும் கவுண்டரும் படாத பாடு பட்டார்கள். மருத்துவத்தில் தேர்ந்து பட்டம் பெற்ற பல ஆங்கில அறிஞர்கள் வந்து, இருமல் சுரம் என்று சொல்லி ஆங்கில நாட்டு மருந்துகளைக் கொடுத்துச் சென்றனர். இம்மருந்துகள் நோயினை நீக்குவதற்குப் பதிலாக மிகப்படுத்தின! தமிழ் மருத்துவர் 'தருமம் தலை காக்கும்' என்று சொல்லிச் சில மாத்திரைகளைக் கொடுத்துச் சென்றனர். மாத்திரைகள் உள்ளத் துன்பத்தைத் தூண்டிவிட்டன! இதிலும் நலம் ஏற்படாததைக் கண்டு, பெற்றோர்கள் மந்திர மாயம் வல்லவர்களைத் தருவித்துக் காண்பித்தனர். இந்தப் 'பிரகஸ்பதிகள்' எல்லாம் 'திருநீறு' என்று சொல்லித் திருநீற்றைச் செல்வியின்மேல் தெளித்துச் சென்றனர். பெற்றோர்கள் தமக்குத் தெரிந்ததும் தெரியாததுமான பல முறைகளைக் கையாண்டும் நோய் குறைந்தபாடில்லையே என்று கவலை யுற்றவராய் இருந்தனர்.

அன்றிரவு வியாதியின் கொடுமை முற்றிவிட்டது. அவள் தன் உணர்வு இன்றிப் பிதற்றத் தொடங்கினாள்; இடையிடையே "நடராசன் ... நடராசன்" என்று

விட்டு விட்டுச் சொல்லிக் கொண்டிருந்தாள். அதைக் கேட்டபோதுதான் வள்ளியக்காளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகச் செய்தி விளங்கலாயிற்று. அதே காலத்தில் பார்க்க வந்த பெண்களில் ஒருத்தி முந்தின நாள் காளி கோவிலில் தான் கேட்ட 'முறையீட்டை' வெளிப்படையாக வீட்டிலுள்ளவர்களிடம் சொல்லி விட்டாள். அப்போதுதான் எல்லாச் செய்திகளும் திலகக்காளுக்கும் வள்ளியக்காளுக்கும் தெளிவாகத் தெரிந்தன. இந்த மனக்கவலைக்கு மாற்று வெறும் மருந்தன்று என்பதைக் கண்டுகொண்டனர். 'மாதர் உரைத்தல் வழக்கமில்லை' என்ற வாக்குப்படி கண்ணம்மா சொல்லா விட்டாலும், அவள் மனதை அறிந்து கொண்டு விட்டனர்.

மனைவி வழியாக முழுச் செய்திகளையும் அறிந்த கவுண்டர், மெய்மறந்து ஆழ்ந்தார். மகனைத் துறப்பதைக் காட்டிலும் மருமகனை அடைவதே மேல் என்ற முடிவுக்கு வந்து நடராசனை உடனே சீமையிலிருந்து புறப்படச் செய்வதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டார். நடராசன் விரைவில் வந்துவிடுவான் என்பதை அறிந்த கண்ணம்மாவுக்குத் தெம்பாக இருந்தது. அயர்வு பறந்தோடி விட்டது போல் இருந்தது. பட்டமரம் துளிர்ப்பதைப் போல், அந்தப் பாவை உள்ளம் மலரத் தொடங்கிற்று.

எங்கள் நாடு

கிங்ஸ் கல்லூரியின் செயலாளனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நடராசன் ஒருமாலை வேளை லார்டு ரின்னிங்டன் அவர்களின் மாளிகைக்குச் சென்றான். செல்வரும் அவர் மனைவியும் அவனை அன்புடன் வரவேற்று முகமன் கூறி அளவளாவிக் கொண்டிருந்தனர். செயலாளனாகிய செய்தியைச் செல்வர் மிக மகிழ்ச்சியுடன் கேட்டு நடராசனுக்குத் தம் ஆசியைத் தெரிவித்தார். நடராசனும் மகிழ்வோடு பிரபுவைத் தன் கல்லூரிக்கு வந்து சொற்பொழிவு ஆற்றிக் கல்லூரியையும் தன்னையும் பெருமைபடுத்த மிகவும் வேண்டிக் கொண்டான். செல்வர் சிரித்துக் கொண்டே 'இப்போதெல்லாம் அது எதற்கு' என்று சொல்லி ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். தமது தள்ளாத வயதில் தற்காலத்திய இளைஞர்களுக்குச் சொற்பொழிவு செய்வது 'அதிகப் பிரசங்கித்தன'மாகும் என்று அஞ்சியே அவர் இணங்கவில்லை.

நடராசனும் செல்வரும் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார்கள். அப்போது இந்திய சர்க்காருக்கு உதவிச் செயலாளராக இலண்டனில் வேலை பார்க்கும் ஸ்மித் என்பவர் செல்வரைப் பார்த்துப் போக வந்தார். செல்வர் நண்பர்கள் இருவரையும் ஒருவர்க்கொருவர் அறிமுகம் செய்து வைத்தார். செல்வரின் வேண்டுகோளுக்கும், நடராசன் தூண்டுகோலுக்கும் இணங்கி, ஸ்மித் மகிழ்ச்சியுடன் கிங்ஸ் கல்லூரிக் கழகத்தில் தலைமை தாங்கிப் பேசுவதாக ஒப்புக் கொண்டார். ரின்னிங்டன் அவர்களின் கட்டளையின் மேல் நடராசனே அன்றைய

கூட்டத்தில் "எங்கள் நாடு" என்பதைக் குறித்துப் பேசுவதென்பது முடிவு செய்யப்பட்டது.

செயல் வினைஞனுகிய நடராசனே சிறப்புச் சொற் பொழிவாளன்! இதைக் கேட்ட ஒரு சாலை மாணவர் களுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. கூட்டம் கூடும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்தனர். தன் உடன் கற்கும் மாணவர்களின் உதவியால் ஏராளமான அச்சிட்ட அழைப்புத் தாள்களை, பொது மக்கள் மன்றம் (காமன்ஸ் சபை) செல்வர் மன்றம் (லார்டு சபை) உறுப் பினர்களுக்கும், சிறந்த அரசினர் அலுவலாளர்களுக்கும் அனுப்பிவைத்தான். செல்வர் ரின்னிங்டன், அவரது மனைவி, திருமதி. ஜின்ஜர் ஆகியோருக்கும் அழைப்புத் தாள்கள் அனுப்பப்பட்டன. அவர்கள் குறிப்பிட்ட நாளில் கூட்டத்திற்கு வந்து சிறப்பிக்க வேண்டும் என்றும் கடிதங்கள் எழுதினான்.

கிங்ஸ் கல்லூரியின் கலாமண்டபம் அழகிய தோர ணங்களாலும், கொடிகளாலும் ஒப்பனை செய்யப் பட்டிருந்தது. பார்ப்பதற்கு அது மாணவர்கள் எல்லோ ரும் ஒன்று சேர்ந்து ஒரு பெரும் திருமணத்தை நடத்தி வைக்கும் நிகழ்ச்சி போலிருந்தது. நடராசன் ஓழிவின்றி அலுவல்களில் ஈடுபட்டான்.

குறிப்பிட்ட காலத்துக்கு முன்பாகவே கூட்டம் கும் பல் கும்பலாகக் கூடிற்று. வகை வகையான ஆடை அணிகளுடன் ஆண்களும் பெண்களும் திரள் திரளாக வந்தனர். அழைப்பிற் கிணங்கி, இருவகைப் பெருமன்றங் களின் உறுப்பினர் தங்கள் மனைவி மக்களுடன் வந்து தங்களுக்கென ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் இருந்தனர்.

செல்வர் ரின்னிங் அவர்களும் அவர் தம் மனைவி யாரும் திருமதி ஜின்ஜரும் இக்கூட்டத்திற்கு வந்திருந் தனர் என்று சொல்லத் தேவையில்லை! குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பாக வந்து காத்திருந்தவர்கள் அடிக்கடி கல்லூரியின் காலங்காட்டியைப் பார்த்த வண்ண மிருந் தனர். மணி சரியாக ஐந்து அடித்ததும், நடராசனும் கல்லூரித் தலைமை ஆசிரியரும் ஸ்மித்துடன் வந்து மேடை மீது ஏறி இருந்தனர்.

தலைமை ஆசிரியர் சிறப்புப் பேச்சாளனாகிய நடரா சனைக் கூடியிருந்தோருக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஸ்மித் முதலில் தம் முன்னுரையில் கல்லூரியின் நிகழ்ச்சி யில் தமக்கு ஒரு பங்கு கொடுத்துச் சிறப்பித்தமைக்குத் தம் நன்றியறிதலைத் தெரிவித்து விட்டு நடராசனை "எங்கள் நாடு" என்னும் செய்தியைப் பற்றிச் சொற் பொழி வாற்றுமாறு வேண்டிக் கொண்டு இருக்கையில் அமர்ந்தார்.

நடராசன் பதட்டமின்றி, மிகவும் அடக்கமாகவும், ஒடுக்கமாகவும் எழுந்தவுடன் சபையில் பெருங் கை தட்டல் எழுந்தது. நடராசன் அன்னிய ஆடையை அன்று விட்டொழித்து, செல்லும் போது உடன் கொண்டு சென்ற கைத்தறி ஆடையால் ஆகிய கால் சட்டையையும் சொக்காயையுமே அணிந்து கொண்டிருந்தான். பார்ப் பதற்குப் பகட்டு இல்லாத ஆடை. ஆயினும் அறிவைத் தூண்டும் ஆடை. எளிய உடையை அவன் அணிந்திருந்த தால், பேசுவதற்கு முன்னால் 'ஆடை திருத்தி' அரை மணிப் பொழுதினைப் போக்க வேண்டிய தில்லையாயிற்று. சபையைச் சுற்றித் தன் பார்வையை ஒரு முறை செலுத்தி விட்டு, நேராகக் கூட்டத்தைப் பார்த்துப் பின்வருமாறு

பேசத் தொடங்கினன். "உங்கள் எல்லோருக்கும் முதலில் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன். இந்தப் பெரிய கூட்டத்தைக் காணவும் எனக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாகிறது. முதலில் "எங்கள் நாடு" என்ற தலைப்பைப் பார்த்ததும், எங்கள் நாட்டின் தன்னுரிமையில் நீங்கள் ஏன் குறுக்கே நிற்கிறீர்கள்? என்று தான் கேட்கத் தோன்றிற்று. ஆனல், நீங்கள் இன்று அரசியல் பேச்சு ஒன்றையும் என்னிடம் எதிர்பார்க்காதிர்கள். அரசியல் அறிஞர்களுக்கும் அதனை விட்டு விடலாம்" என்று சொல்லி, நிறுத்தி விட்டு ஒரு முறை சுற்று முற்றும் பார்த்தான். கைதட்டல் சபை அதிரும் படிக் கேட்டது; 'சரி பின் பற்றுகின்றனர்' என்று முடிவுக்கு வந்து, மேலும் எழுச்சியுடன் தொடங்கினன்.

"எந்த நாட்டு மக்களும் எவருடைய உரிமையிலும் குறுக்கே நிற்கக்கூடாது. எனக்கும் சில ஆங்கிலேய நண்பர்கள் இருக்கிருர்கள். ஆண்டிலும் அறிவிலும் முதிர்ந்த அவர்களும் இதை ஒப்புக் கொள்ளுகிருர்கள். உங்கள் நாடு, அன்னியர் வசப்பட்டு, ஆதரவற்ற நிலைமையில் இருந்தால்—உங்களுக்குப் பேசத் தோன்றுமா? என்று நான் கேட்கிறேன். என்ன, பதில் சொல்லுகிறீர்களா?" என்று கேட்டு விட்டு, ஒரு பார்வை பார்த்து மேலும் தொடங்கினன்.

'செல்வத்திற் சிறந்தது எங்கள் நாடு. கல்விச் செல்வம், பொருட் செல்வம் இரண்டையுமே குறிக்கிறேன். எங்கள் நாடு என்றுமே வளமுள்ளது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகக் கலை, நாகரிகம் இவைகளுக்கு இருப்பிடமாகவும், வழி காட்டியாகவும் விளங்கி வந்திருக்கிறது; உயிரியல் துறையிலே பக்குவப் பட்ட பெரியார்கள்

அதன் எல்லையையே எட்டிப் பார்த்திருக்கிறார்கள். உண்மை ஒன்றே எங்கள் உயிர்நாடி. எங்களிடம் உள்ளதை அள்ளி அள்ளிக் கொடுக்க வேண்டு என்பதே எங்கள் நாட்டாரின் கொள்கை. ஆனால் அப்படிப் பட்ட உயர்ந்தோர்களை நெறி முறைகளுக்குக் கட்டுப் பட்டவர் களை நீங்கள் எவ்வாறு நடத்தி வருகிறீர்கள்? தன்னுரிமை யொடு பல்லாண்டுகளாக வாழ்ந்து வந்த மக்கள் உரிமை யினை......'' என்று அவன் பேசிக் கொண்டு போகையில் சில பெரிய செல்வர்களின் கண்களில் நீர் நிறைந்தது!

அந்தச் சமயம் ஒரு குரல் "பேச்சாளரே! தங்கள் பேச்சு வன்மையைப் பெரிதும் பாராட்டுகிறேன். இவ்வுலகத் துன்பத்தை நீக்குதற்குரிய வழியைச் சொல் லுமே'' என்று கேட்டது.

இதற்கும் மன்றத்தில் பலத்த கை தட்டல் ஏற்பட் டது! நடராசன் இக்கேள்விக்கு என்ன பதில் சொல்லப் போகிறான் என்பதைக் கேட்கப் பலர் ஆவலுடன் காத் திருந்தனர். திருமதி ஜின்ஜருக்கு இது வேதனையாக இருந்தது. தக்க பதில் அளிக்கா விட்டால் 'ஆங்கிலச் சபையோர் சிரித்து ஏளனம் செய்வார்களே' என்றெல் லாம் சிந்தித்து, ஆனாலும் தக்க பதில் தருவான் என நம்பியிருந்தாள் திருமதி.

புன்னகை தவழும் முகத்துடன் நடராசன் கம்பீர மாக. "தலைவரவர்களே! சகோதர சகோதரிகளே! இக்கேள்வி கேட்டவர் மிக அவசரப்பட்டு விட்டார்' எனினும் அவரை நான் குற்றம் குறை கூறவில்லை. மிகப் பொருத்தமான கேள்வியைத் தகுந்த சமயத்தில் கேட்ட பெருமை அவருடையதே! என் சகோதரருக்கு வந்தனம் உரித்தாகுக. வியாதியின் தன்மையை அறிந்த மருத்து

வன் உறுதியாக அதை நீக்குதற்குத் தக்க மருந்தையும் கொடுப்பான். அறியாதவர்கள் மழுப்பல் செய்து, தம்மைக் காட்டிலும் முதிர்ந்த மருத்துவரைக் கொண்டு தணித்துக் கொள்வதே மேல் என்றும் கூறுவார். இது நீங்களும் நானும் அறிந்தது. மருத்துவ நூலின் முறையைப் பற்றியும், பலவகை நோய்களின் நுட்பத் தன்மையைப் பற்றியும் எனக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் பஞ்சத்தில், பசிப் பிணியில், வாழும் இவ்வுலக மக்களின் நோயைப் பற்றியும் அதை நீக்குதற்குரிய மருந்துகளைக் கண்டு பிடிப்பதும் உலக அரசியல் அறிஞர்களின் ஆதரவில் இருக்கிறதென்பது என் சொந்தக் கருத்து. உலக மக்களின் துன்பத்திற்கும், பஞ்சம் பிணி களுக்கும் முதற்காரணமாவது பொருளியல் நிலையில் உள்ள வேறுபாடுகளேயாகும். மனிதனுக்கு மனிதன் பிறப்பாலும், மதத்தாலும் வேற்றுமையும், மனக்கசப்பும் அடைகிறான். உடையவரும், இல்லாதவருமாக உலகம் சிதறிச் சிதறிக்கிடக்கிறது. எங்கோ, இரவும் பகலும் ஓயாது, "அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவி மேல் ஆயிரம் தொழில் செய்யும்" கோடானு கோடி மக்கள் உண்ண உணவுக்கு வகையின்றி வாடுகிறார்கள். ஒரு சிலர் யாதொரு உடலுழைப்புமின்றி உழைப்பின் பலனை மட்டும் அமிதமாக நுகர்ந்து களிக்கிறார்கள். உலகியலில் நடக்கும் எண்ணற்ற துன்பங்களுக்கும், கொலை களவுக்கும் போர்களுக்கும் இடமளிப்பது இந்தப் பொருள் நிலை வேற்றுமைதான். இதை நீக்கி "எல்லோரும் ஓர் குலமாய், எல்லோரும் ஓர் நிலையாய் வாழுங் காலமே துன்பந்தொலையும் நற்காலம் ஆகும். அரசியலார் இதனைக் கைக் கொண்டால் துன்பமும் துயரமும் பறந்தோடி விடும். கேள்வி கேட்க வேண்டியதே ஏற்படாது!"

திருமதி ஜின்ஜர் உள்பட எல்லோருமே இதனுல் மகிழ்ச்சி அடைந்தனர். ரின்லிங்டன் தம்பதிகள் தங்கள் கருத்துக்களைப் புன்னகை தவழும் தங்கள் முகங்களின் வழியாகப் பரிமாறிக் கொண்டனர். சபையில் மற்றும் பலர் நடராசனின் நுண் அறிவை மெச்சிப் பாராட்டிப் பேசிக் கொண்டிருந்தனர் உடன் பயிலும் மாணவர்கள் தங்கள் சகோதர வாஞ்சையால் ஆனந்த நடனம் புரிந்து கொண்டிருந்தனர்.

நடராசன் மீண்டும் உணர்ச்சியுடன் பேசினுன் "உலகத்தின் விளைவுப் பொருள்களை எல்லாம் அறிந்து ஒழுங்கு செய்ய உலகத்து நாடுகளின் சார்பாக அமைந்த உறுப்பினர் குழு ஒன்று அமைக்கப்படுதல் வேண்டும். அப்போது பஞ்சமும் பசிப்பிணியும் தலை காட்டுமா? இந்தக் குழுவினரின் சிறந்த வேலைகள் உலக விவசாயப் பொருட்களை ஒவ்வொராண்டும் விளைச் சலுக்கேற்றவாறு அளவெடுத்து, உலகத்திலுள்ள பல நாடுகளுக்கும் நடு நிலைமையுடன் பங்கிடு செய்தல்; இப் பண்டங்களுக்கு அந்தந்த நாட்டின் பொருளாதார நிலைக்கு ஏற்றவாறு விலைவாசிகளை அமைத்தல்; உணவுப் பொருள்கள் மிகுதியாக வுள்ள நாடுகளிலிருந்து, குறை வுற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அனுப்புதல்; ஆகிய கொள்கைகளைச் சுயநலம் கருதாது கடைப்பிடித்தார் களே யானுல், பஞ்சத்திற்கும், பசிப் பிணிக்கும் இடம் ஏற்படாமல் செய்யலாம். சிறந்த பொருளாதார அறிஞர் களின் கருத்தும் இதுவேதான். அதில் எனக்கும் நம்பிக் கையுண்டு. உங்களுக்கும் இதில் நம்பிக்கை ஏற்பட வேண்டுமென்று நான் கடவுளை வணங்குகின்றேன். எங்கள் நாட்டைப்பற்றிப் பேச விரும்பிய நான் உலகத் தின் மற்றைய நாடுகளைப் பற்றியும் பேசியதை சபை

யோர்களாகிய நீங்கள் பொறுத்துக் கேட்டுக் கொண்டிருந்ததற்கு என் நன்றி"

பேச்சினை முடித்துக் கொண்டு தன் இருக்கையில் அமர்ந்தான். பலத்த கை தட்டல் ஏற்பட்டது. சிலர் தங்கள் தூல்லாய்களை எடுத்து வீசி யெறிந்தனர். மற்றும் சிலர் மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக்கினர். ஆங்கில மாணவர் சிலர் வெடி மருந்துகளை வெளி இடத்தில் கொளுத்திப் 'பட்பட்' என்று ஒளியைக் கிளப்பினர். கிங்ஸ் கல்லூரியின் கலாமண்டபமே கவிழ்ந்து விழுவது போலிருந்தது மிகக் கோலாகலமாக!

தலைமை வகித்த ஸ்மித் பெருமிதத்தோடு நடராசனை மிகவும் பாராட்டிப் பேசியது மல்லாமல் தம் வாழ் நாளில் இதைப் போன்ற இன்சுவை பொருந்திய சொற்பொழிவினைக் கேட்டதே இல்லை யென்று சொன்னார்." எளிய நடையில், ஆங்கிலச் சொற்றொடர்களை எழுச்சியுடன் ஒலித்து நம்மை இது வரையிலும் இன்பத்தில் அழுத்திய பேச்சாளருக்கு நம் நன்றியறிதலைத் தெரிவிக்கக்கடமைப் பட்டுள்ளோம். இருபது நிமிஷங்களுக்குப் பதிலாக இருபது நாட்கள் ஒன்று கூடிப்பேசினாலும், சொற்பொழிவினை மெய்ம் மறந்து திளைக்க நான் காத்திருக்கிறேன், காதுக்கு இனிமை. அடடா! சொற்கள் கிடைக்க வில்லையே மேலும் புகழ!"

நண்பர் ஸ்மித், மீண்டும் பேசுகையில், "நமது சொல்லின் செல்வர் கலை, நாகரிகம், பஞ்சம், பசிப்பிணி, தன்னுரிமைவரை வந்து விட்டார்! தன்னுரிமையினை அளிப்பது முறை. ஊருக்கு ஒரு நீதியும், உலகுக்கு ஒரு நீதியும் கூடாது. உலகப் பஞ்சத்தை நீக்குவதற்கு,

உவந்து அளித்த அறிவுரைகளை நாம் என்றுதல் வேண்டும். என்றுவதோடுவழிவகைகளையும் தேடவேண்டும்'' என்று சொல்லி முடிந்தார். ஆரவாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

கூட்டம் கலைந்த பின்னும் நண்பர்கள் பலர் கை குலுக்கிப் பாராட்டித் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். ரின்னிங்டன் தம்பதிகள் இன்பக்கடலில் மூழ்கியவராய் அவனைத் தழுவிப் பாராட்டுதலைத் தெரிவித்தனர். திருமதி ஜின்ஜர் நடராசன் தன் மாளிகைக்கு, வாக்குக் கொடுத்தபடி வரவில்லையே என்று உரிமை பாராட்டிக்கடிந்து பேசினுள். நடராசன் மறுதினம் தவருமல் வருவதாக வாக்களித்து அவர்களை அனுப்பி வைத்தான்.

அடுத்த நாள் இலண்டனில் வெளியான நாள் தாள்களெல்லாம், நடராசனுடைய சொற்பொழிவினைக் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டன. சில தாள்கள் சொற்பொழிவு பற்றிக் காரசாரமான தலையங்கம் கூட எழுதி இருந்தன!

கண்கவர் காட்சிகள்

காலை நேரம். 'சில்'லென்று காற்று வீசிக் கொண்டிருந்தது. நடராசன் அவசர அவசரமாகப் பேட்டர்சி என்னும் சிற்றூரை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். திருமதி ஜின்ஜரின் மாளிகையை அடைந்ததும் மாளிகையின் தோற்றத்தைக் கண்டு மயங்கி நின்றான். வாசல் காவலாளன் நடராசன் தோற்றத்தையும், உடையையும் கண்டு சிறிது ஐயம் கொண்டு அவனை உள்ளே விட மறுத்துவிட்டான். வெளி வாசலில் அவன் குரலைக் கேட்டதுமே திருமதி. ஜின்ஜர் ஓடோடியும் வந்தாள். நடராசனைக் கைகுலுக்கி உள்ளே அழைத்துச் சென்றாள்.

இருவரும் கப்பலில் இருந்து வந்தது முதல் நடந்த நிகழ்ச்சிகளைத் தேநீர் அருந்திக் கொண்டே இன்பமாகப் பேசிக் கொண்டிருந்தனர். சகோதரி ஜின்ஜர், நடராசன் வாக்கு வன்மையைப் பெரிதும் பாராட்டிப் பேசினாள். தேநீர் அருந்திய பிறகு மாளிகையைச் சுற்றிக் காண்பித்தாள். ஆங்கிலேயர் குடித்தனத்தை நடத்தும் முறைகளை விளக்கிச் சொன்னாள்.

நடராசன் தான் இன்னும் ஆங்கிலேய நடனம் கற்றுக் கொள்ளவில்லை. கற்றுக் கொள்ளும் எண்ணமும் இல்லை என்று சொல்லிய செய்தி திருமதி ஜின்ஜரை வியப்பில் ஆழ்த்தவில்லை. ஆங்கில நாட்டில் வாழ்ந்து, ஆங்கிலேயர்களோடு நாளும் பழகி, ஆங்கிலேயர் உயிர் நாடியாகக் கருதும், ஆங்கில நடனத்தை கற்றுகொள்ளக் கருத்தில்லை என்னும் செய்தி, ஜின்ஜருக்கு வியப்பினை விளைவித்திருக்க வேண்டும். ஆனால் நடராசன் மனப்

பக்குவத்தை அறிந்த அவனுக்கு அது ஆச்சரியம் தரும் செய்தியாயில்லை.

இந்திய மாணவர்கள் சிலர், இங்கிலாந்து போவதற்கு முன்பு ஆங்கில நாட்டியக் கலைகளில் தேர்ச்சி பெற்றே செல்லுகின்றனர். இன்னும் சிலர் இங்கிலாந்தில் இதைத் தம் முதல் பாடமாக கருதிக் கற்றுக் கொள்ளுகின்றனர். நாட்டியம் தெரியாவிட்டால் ஆங்கிலப் பெண்மணி களிடம் தாங்கள் உறவாடுதல் முடியாதென்ற முட்டாள் கொள்கையில் விளைந்தது இதுவும் ஒன்று. ஆனால் இயற்கையிலே களியாட்டத்தில் அருவெறுப்புக் கொண்ட நடராசன் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து மதுவை அருந்தி, மதி மயங்கி, ஆடிக் குதிக்கும் நாட்டியத்தில் தன் கவனத்தைச் செலுத்த விருப்பம் கொள்ள வில்லை. மேலும் ஆங்கிலேயர்களிடம் பழக இவ் வித்தை அவசியமில்லையென்பதையும் தெரிந்து கொண்டான்.

சகோதரி ஜின்ஜருக்கு அழகுக் கலைகளில் ஆர்வம் இருந்ததால், நம் தமிழ் நாட்டில் திகழும் பரதநாட்டியப் பண்புகளை, விளக்கிச் சொல்லி அதில் அவள் தன் கவனத்தை கொஞ்சம் செலுத்துமாறு வேண்டிக் கொண்டான்! பரதநாட்டியக் கலை இன்னதென்பதை அறியாத ஜின்ஜர், அதை உணர்ச்சியுடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

காவியம் ஓவியம் முதலியவற்றைப் பற்றியே நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அங்குக் கண்ட சில ஓவியங்களை நடராசன் மிகப் பாராட்டினான். பேச்சுவாக்கில் நடராசன் இன்னும் இலண்டனைச் சுற்றிப் பார்க்கவில்லை என்பதைக் கேட்டுத் திருமதி சிரித்தாள்.

இலண்டன் காட்சிகளைக் கண்டு களிப்பது என்ற முடிவிற்கு வந்தனர். நடுப்பகல் உணவும் இந்திய முறைப்படியே செய்யப்பட்டிருப்பதைப் பார்த்த நடராசனுக்கு மகிழ்ச்சி மிகுந்தது.

நடுப்பகல் உணவினை முடித்துக்கொண்டு இருவரும் புறப்பட்டனர். அழகிய விலையுயர்ந்த ரோல்ஸ் ராய்ஸ் காரைத் திருமதி ஜின்ஜர் ஓட்ட ஜின்ஜருக் கருகில் நடராசன் இருந்து காட்சிகளைக் கண்டு களித்துக் கொண்டே சென்றான். இலண்டனை நோக்கிக் கார் ஓடிக்கொண்டிருந்தது. வழியில் ஜின்ஜர், சகோதரனுக்கு லண்டனில் உள்ள சில சிறப்பான இடங்களை யெல்லாம் குறிப்பிட்டுக் காண்பித்து அவற்றின் வரலாறுகளை விளக்கிக் கொண்டே சென்றாள்.

செயிண்ட் பால் என்று பெருமை பெற்ற ஆலயத்துக்குச் சென்று, நெல்சன் வில்லிங்டன், ரெயினால்ட்ஸ், போன்ற புகழ் பெற்ற ஆங்கிலேய அறிவாளிகளின் கல்லறைகளைக் கண்டனர். பிறகு, 'பிளிட் தெரு' 'பக்கிங்ஹாம்' அரண்மனையைக் கடந்து 'ஹைட் பார்க்கை' அடைந்தனர்.

'ஹைட் பார்க், இலண்டன் வாழ்வோரும் தொலை நாட்டுச் செயலினர்களும். சற்றுத் தங்கி 'இளைப்பாறிப்' போவதற்கான வாய்ப்புக்களுடன் அமைந்த ஓர் இன்பப் பூங்காவனம். தலைநகரின் தலைமை பெற்ற இடத்தில், தனிச்சிறப்புடன் விளங்கும் இப் பூங்காவனத்தின் காட்சியே காட்சி! இளம் காதலரின் இதய கமலங்கள் இங்குதான் மலர்ச்சி பெறுகின்றன! பகலென்றும் இரவென்றும் பாராமல், காலத்தைக் கழிக்க ஏற்ற இடம். ஜின்ஜரும் நடராசனும் பூங்காவனத்தைச் சுற்றிச்

சுற்றிப் பார்த்து வருகையில், பூங்காவனத்தின் ஒரு பக்கத்திலுள்ள நீரோடையின் அருகே, ஓர் இந்திய வாலிபனும் ஓர் அழகிய ஆங்கில நங்கையும் கைகோர்த்து உட்கார்ந்து கொண்டு களிப்புடன் பேசிக்கொண்டிருந்தனர். இதைக்கண்ட ஜின் ஜர், சகோதரனுக்குக் காதலர்களைச் சுட்டிக் காட்டி, "ஜாதிமத பேதமின்றி இவ்விருவரும் எவ்வளவு மகிழ்ச்சியுடன் காலத்தைக் கழிக்கிறார்கள், பார்த்தீர்களா!" என்றாள்.

நடராசன் திருமதியை நோக்கிச் சிரித்துக்கொண்டே, "அம்மா, கிழக்கும் மேற்கும் இந்தப் பூங்காவனத்தில், எத்துணை நயமாகச் சந்திக்கின்றன என்பதை இன்று தான் கண்குளிரக் கண்டேன்! கிழக்கையும், மேற்கையும் ஒன்று சேர்க்கும் பொருட்டு, எங்கள் தாய் நாட்டிலிருந்து வந்த தூதுக் குழுவில் இவரும் கூட ஓர் உறுப்பினராய் இருப்பாரென்று நான் நினைக்கிறேன்! இங்கு அவர் மேற்கொண்டுள்ள செயலினைச் செம்மையாய் முடித்துத் தாய் நாடு திரும்ப ஆண்டவன் அருள் புரிவாராக" என்று சொல்லிக்கொண்டே நகர்ந்து சென்றான்.

"உங்கள் நாட்டில் இதைப்போன்ற பூங்காவனங்கள் உண்டா! இருந்தால் ஆண்களும் பெண்களுமாக நீங்கள் நாள் தோறும் ஒன்று சேர்ந்து விளையாடிக் காலத்தை எங்களைப் போல் போக்குகிறீர்களா? இல்லையானால் மாலை நேரத்தை நீங்கள் எப்படிப் போக்குகிறீர்கள்?" என்றாள்.

"இதைவிட மிக உயர்ந்த இயற்கை வனப்புடன் கூடிய பூங்காவனங்கள் எங்கள் நாட்டில் மலிந்து கிடக்கின்றன. மாலைப் போதைப் பற்றிக் கேட்டீர்களே?

எங்கள் நாட்டினர் உங்கள் நாட்டினரைப் போல் பெரும்பான்மையோர் பூங்காவனங்களுக்கு மாலையில் போவதில்லை. போகின்ற சிறுபான்மையோர் தங்கள் மனைவி மக்களுடன் செல்வார்களே அல்லாமல், காதலி காதலனுகச் செல்லும் வழக்கமில்லை" என்றான்.

"அது சரி, காதலியும் காதலனுமாகப் பூங்காவனம் சென்று இன்பம் அனுபவிப்பதில் தப்பு ஏதாவது உண்டா?" என்று கேட்டாள்.

"காதலியும், காதலனும் வெளிப்படையாக நாலு பேர் நடமாடும் பூங்காவனம் போன்ற இடங்களில் தங்கள் காதல் பெருமையை உலகத்தாருக்கு உணர்த்தும் உயரிய கொள்கையில் எங்களவர்களுக்கு நம்பிக்கையில்லை! இரண்டாவதாகக் காதலென்னும் பெயரால் கண்ட இடங்களில் கட்டித்திரிந்து கொண்டிருப்பது அழகல்ல என்று அவர்கள் எண்ணுகிறார்கள்" என்று சிரித்துக் கொண்டே சொன்னான். திருமதி பதில் பேசவில்லை.

இன்னும் சற்றுத் தூரத்தில் ஆண்களும் பெண்களுமாகக் கூட்டம் கூடி, பல பேச்சாளர்கள் மேடை மீதேறி சொல் மழை பொழிவதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். ஹைட்பார்க் என்னும் இவ் அழகிய பூங்காவனத்தில் நாள் தோறும் மாலை வேளைகளில், அரசியல் தொடர்புள்ளனவும் மதத் தொடர்புள்ளனவும் ஆகிய தலைப்புக்களைக் குறித்துப், பலர் சொற்பொழிவு ஆற்றித் தங்கள் கொள்கைகளைப் பரப்பி வருகிறார்கள்! பேசும் திறமை இல்லாதவர்களை அதிகப் பிரசங்கிகள் எனும் 'பட்டம்' கொடுத்து அனுப்புவது, இப் பூங்காவனத்தின் சிறப்பான வேலைகளில் ஒன்றாகும்!

மிதவாதக் கட்சி அங்கத்தினரில் ஒருவர் அன்று 'தொழிற் கட்சியார் செய்த தவறுகள்' என்னும் தலைப்பில் பேசிப் பெரு முழக்கம் செய்து கொண்டிருந்தார். மற்றப் பகுதிகளில் நடக்கும் சொற்பொழிவுகளைக் காட்டிலும் இவ்விடத்தில் மக்கள் கூட்டம் மிகுதியாக இருந்தது.

ஆதலால் இவர்கள் இருவரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். "இந்தியாவைப் பொறுத்தவரையில் தொழிற்கட்சியார் செய்த தவறுதல்களை என்னவென்று சொல்வேன்? எப்படிச் சொல்வேன்?" என்று ஒரு ஐந்து நிமிஷம் பேச்சாளர் பேசினர். பின்பு "அநியாயம், அக்கிரமம்" என திருப்பித் திருப்பி ஐந்து நிமிஷ நேரம் "சாதகம்" பண்ணினர். இடையிடையே கண்களில் நீர் வடித்தார். "நாங்கள் அரும்பாடுபட்டுச் சேகரித்துக் காத்து வைத்த பொன்வாத்தைக் கொன்று விட்டார்களே! கொன்று விட்டார்களே!" என்னும் "சரணத்தை" விதவிதமாகத் திருப்பி, "சுருதி" சேராமல் "அபத்த சாரீரத்தில்" அஞ்சல் செய்து கொண்டிருந்தார். பிரசங்கியார் பேசுவதின்னதென்று தெரியாமல், புரியாமல், பிரசங்கம் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் தவித்துக் கொண்டிருந்ததுமல்லாமல், தங்கள் பொறுமையையும் இழந்தனர். கூட்டத்தில் நின்று கொண்டிருந்த நடராசன், கேட்க முடியாதவனாய்ச் சொற்பொழிவாளரை நோக்கி, "என்ன தவறுதல்கள் செய்துவிட்டார்கள் என்பதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள் துரையே!" என்று கேட்டான். ஆங்கிலேயர்கள் அனைவரும் நடராசனையே கவனித்ததுமல்லாமல் 'சபாஷ்'களும் போட்டனர்.

பிரசங்கியாருக்கு உண்டான கோபத்துக் களவே யில்லை. தம்மைத்தாமே அடக்கிக் கொண்டு நடராசனை நோக்கி, "செய்தி பெரிது; உடனே சொல்வதும், சுருக்கமாகச் சொல்வதும் முடியாத செயல்" என்று சொல்லி நிறுத்திக் கொண்டார்.

எல்லோரும் சிரித்தார்கள். இவர்களும் சிரித்து விட்டு அங்கிருந்து புறப்பட்டார்கள்.

இலண்டனில் முக்கியமாகப் பார்க்கக்கூடிய காமன்ஸ் சபை, லார்டு சபைகளின் கட்டிடங்களையும், வெஸ்ட் மின்ஸ்டர் ஆலயத்தையும் காண்பித்து விட்டு, அந்தி நேரமாகி விட்டபடியால் நடராசனைக் கிங்ஸ் கல்லூரிக்கு நேராக அழைத்துச் சென்றாள். நடராசன் கீழே இறங்கியதும், "சரி. நான் சென்று வருகிறேன். அடிக்கடி வாருங்கள். உங்கள் சொந்த வீடு போல் எண்ணிக் கொள்ளுங்கள்" என்று அன்போடு சொன்னாள். இரண்டு நாளில் மீண்டும் வருவதாகச் சொன்னான் நடராசன். அதைக் கேட்டு விதி சிரித்திருக்க வேண்டும்! ஏனென்றால் அவனை எதிர் பார்த்து ஒரு தந்தி காத்திருந்தது.

தலைக்கு வந்தது......

அறைக்குள் நுழைந்த நடராசன் விரைவாகத் தந்தியைப் பிரித்துப் பார்த்தான். நடுக்கமென்பது இன்னதென்று இதுவரை அறியாத கை விரல்கள் நடுநடுங்கின. புன்னகை தவழும் முகம் தன் பொலிவை இழந்தது. கண்கள் ஒளி இழந்தன. நெஞ்சு படபடவென அடித்துக் கொண்டது. அந்த அவசரத் தந்தி ஊரில் இருந்து தான் வந்திருக்கிறது. அதிலும் மிக முதன்மையான செய்தியைத் தாங்கி அத்தந்தி வந்திருந்தது.

"கண்ணம்மா உயிருக்கு மன்றுடிக் கொண்டிருக்கிறாள். இறப்பதற்கு முன் வந்து பார்க்கவும்."

இது கனவா? உண்மையா? அவன் தலை சுழன்றது. பெருத்த பேரிடி இடித்த அதிர்ச்சியை அடைந்தான் அவன்.

மேற்கொண்டு எண்ணி என்ன பயன்? தன்னைத் தானே தேற்றிக் கொண்டான். உடனே ஊர்ச் செலவுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினான். தலைமை ஆசிரியர் இல்லத்திற்குச் சென்று, தந்தியை அவர் கையில் கொடுத்தான். தந்தியைப் படித்த ஆசிரியர் தம் அனுதாபத்தைத் தெரிவித்தார். நடராசன் ஆகாயக் கப்பலில் போவதற்குரிய ஏற்பாடுகளை எல்லாம் செய்வதாக வாக்களித்தார். அதைக் கேட்டு சற்றே அமைதி அடைந்தான்.

அவன் கண்ணை மூடவில்லை, கண்கள் உறங்குமா? கண்ணம்மாவின் இனிய நினைவுகளே உள்ளத்தில் நிறைந்திருந்தன. "என்று காண்போம், இன்னிசை மழையைக் கேட்டு, வறண்டு கிடக்கும் உள்ளம் குளிருமா? அன்னை ...... பாவம். அவள் எவ்விதம் துடித்துத் துயரப் பட்டுக் கொண்டிருக்கிறாளோ? அவர்களை யெல்லாம் பார்த்து மகிழ்வேனா? இந்தக் கண்கள் காணுமுன் முடிவற்ற தூக்கத்தில் மூழ்கி விடாதே" என்று சொல்லிக் கொண்டான். அவன் சொல்லுக்குப் பதில் சொல்ல அங்கே யார் இருக்கிறார்கள்?

மனம்போல் மாங்கல்யம்

எதிர்பார்த்தபடியே, மறு நாள் ஆசிரியர் முயற்சியால் ஆகாயக் கப்பலில் நடராசனுக்கு இடம் கிடைத்தது. புறப்படு முன், ரின்னிங்டன் தம்பதியர்களுக்கும், திருமதி ஜின்ஜருக்கும், தான் அவசரமாக இந்தியாவுக்குப் போகும் காரணத்தைக் கடிதம் மூலமாகத் தெரிவித்து விட்டான். வேறு நண்பர்களுக்கு எழுத நேரமில்லை. கையும் ஓட வில்லை. விமானத்தில் ஏறி உட்கார்ந்ததும் விமானத்தோடு போட்டி போட்டுக் கொண்டு அவன் உள்ளம் பறந்து வந்து கொண்டிருந்தது.

நடராசன் எப்படிச் சென்னை வந்து சேர்ந்தான் என்பது அவனுக்கே தெரியாது! சென்னையிலிருந்து, தன் ஊர் போவதற்கு மாலைவரை காத்திருக்க வேண்டும். மாலையில் தான் 'மெயில்' புறப்படுகிறது. 'மெயில்' ஏறி மறு நாள் காலை ஈரோட்டை அடைந்தான். விடியற் காலையில், பஸ் ஒன்று புறப்படுகிற தாதலால் எட்டு மணிக்குள் வீட்டை அடைந்தான். முதலில் யார் தென்படுகிறார்கள் என்று ஆவலோடு பெட்டி படுக்கைகளைச் சுருட்டிக் கொண்டு அவசரம் அவசரமாக வீட்டிற்குள் நுழைந்தான். பெட்டி படுக்கையைத் தூர எறிந்து விட்டு, கண்ணம்மா படுத்திருக்கும் அறை நோக்கி அவன் கால்கள் சென்றன.

தூய வெள்ளைக் கம்பளத்தின் மீது அன்றலர்ந்த மலர் போல் கண்ணம்மா படுத்திருந்தாள். மாதுளை மொக்குப் போல் குவிந்த தோற்றம். கண்களில் அதே

பழைய ஒளி. அப்பாடி, இப்போது தான் நடராசனுக்கு போன உயிர் திரும்பி வந்தது!

"வந்து விட்டீர்களா?" என்றாள். ஆகா! அந்தக் குரலில்தான் என்ன மகிழ்ச்சி! என்ன இனிமை! எளிமையில் அது கிடைத்தா விடும்?

சிறிது நேரம் இருவரும் ஒன்றுமே பேசவில்லை. வாய் திறந்து பேசாவிட்டாலும் அவர்கள் உள்ளங்களும் கண்களும் எவ்வளவோ பேசிக் கொண்டன!

அன்று வீட்டில் ஒரே கொண்டாட்டம். வெகு கோலாகலமாக இருந்தது. அன்னை வள்ளியக்காளும், திலகக்காளும் கவுண்டரும் ஓயாமல் நடராசனுடைய செலவைப் பற்றியும், மேல் நாட்டு அனுபவங்களைப் பற்றியுமே கேட்டுக் கொண்டார்கள். நடராசனுக்குச் சொல்லிச் சொல்லி, போதும் போதும் என்று ஆகி விட்டது!

மறு வாரமே கவுண்டர், நடராசன்—கண்ணம்மா திருமண ஏற்பாடுளில் மும்முரமாக ஈடுபட்டார்.

நடராசன் திருமண அழைப்பிதழ்களை இலண்டனிலுள்ள தன் நண்பர்களுக்கெல்லாம் அனுப்பிவைத்தான். ரின்னிங்டன் தம்பதிகளுக்கும், சகோதரி திருமதி ஜின்ஜருக்கும் திருமண இதழ்கள் போய்ச் சேர்ந்தன!

அன்று மாலை தோட்டத்தில் தனித்த ஓரிடத்தில் கண்ணம்மாவும் நடராசனும் இருந்து இன்பமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் உள்ளத்தின் எதிரொலி போல் ஓர் இன்னிசை எங்கிருந்தோ எழுந்தது.

"பட்டமரம் துளிர்க்கின்ற பருவமடா பருவம்!
பாவை உளம் மலருகின்ற தருணமடா தருணம்"

"ஆகா!" என்றான் நடராசன்.

"அற்புதம்" என்றாள் கண்ணம்மா.

"நாமும் பாடலாமா?" என்று கேட்டான் நடராச

"இப்போது நாம் பாடிக் கொண்டு தானே இரு கிறோம்? நம் உள்ளங்கள் பாடுவது உங்கள் காதுக்கு கேட்கவில்லையா? என்று சொல்லி விட்டுக் 'கலகல'வென நகைத்தாள் கண்ணம்மா.

PRINTED AT PUDUMALAR PRESS, COIMBATORE.